


# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்

## பெண்களும் அரசியலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்

முதலாம் காலாண்டு - 2011
*ISSN 1391-958X*

**கௌரவ ஆசிரியை**
குகநிதி குணச்சந்திரன்

**அட்டை மற்றும் பக்கங்கள் வடிவமைப்பு**
வேலாயுதம் ஜெயச்சித்ரா

**அட்டைப் படம்**
http://www.sxc.hu/browse.phtml?f=download&id=986856

**சஞ்சிகை வெளியீடு**
**பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு,**
**174, அல்விஸ் ஒழுங்கை, காசல் வீதி,**
**கொழும்பு 8, இலங்கை.**
**தொலைபேசி : 94-11-5632045/5635900**
**தொலைநகல் : 94-11-2690192**
**மின்தபால் :** wmcsrilanka@gmail.lk
**அல்லது** solpublication@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் சொல்ல விரும்புவது...

2011 ஆம் ஆண்டின் முதலாவது இதழாக இச்சஞ்சிகை வெளி வருகின்றது. கடந்த காலங்களில் யுத்தம் காரணமாக வடக்குக் கிழக்குப் பகுதியில் வாழ்கின்ற பெண்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கல்கள், அவலங்கள், பிரச்சினைகள், இழப்புகளோடு, குறிப்பாக மீளத் திரும்பலின் போது அவர்கள் முன்னே சவாலாக உள்ள மனரீதியான உளைச்சல், எதிர்கால வாழ்க்கை மீதான நம்பிக்கையின்மை, வேலை வாய்ப்பின்மை, இராணுவ மயமாக்கம் மற்றும் பொருளாதாரப் பற்றாக்குறை நிறைந்த சூழலில், எதிர்பார்ப்பிற்கும் ஏமாற்றங்களுக்கும் இடையில் பெரும்பாலான பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதனோடு பொதுவாகவே நாளாந்தம் தொடர்கின்ற விலைவாசி ஏற்றத்தாலும் அதிகரித்துச் செல்கின்ற வாழ்க்கைச் செலவுகளாலும் பெண்கள் திணறிக் கொண்டிருக்கின்ற அதேவேளையில், அண்மையில் கிழக்குப் பகுதி உட்பட நாட்டின் பெரும் பகுதிகளைப் பாதிப்படையச் செய்த வெள்ளப் பெருக்கினால் குடும்பங்களில் பெண்கள் எதிர்கொள்கின்ற வறுமைநிலை பற்றிப் பலதரப்பினரும் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

யுத்தத்தின் பின்னரான நாட்டின் அபிவிருத்தி மற்றும் மீள்கட்டுமாணம், மீளிணக்கம் பற்றிப் பேசுகின்ற இத்தருணத்திலே, பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பற்றியும் அவர்களது அக்கறை பற்றியும் கவனத்தில் கொள்வது அவசியமானது. பெண்களின் வகிபங்கு, தீர்மானம் எடுக்கும் நிலை தொடர்பாகவும், தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளக் கூடிய பெண்களது அரசியல் பங்குபற்றுகையானது இன்றைய காலகட்டத்தில் மிகவும் இன்றியமையாததொன்றாகும். வெறுமனே பெயரளவில் மட்டுமே பெண்களது அரசியல் பிரதிநிதித்துவம் அமையாது பால்நிலை அடிப்படையில் பாரபட்சம் இன்றி ஆரோக்கியமான முறையில் பெண்களுக்கான அரசியல் உரிமை வரையறுக்கப்படல் வேண்டும் என்பதே பலதரப்பினரதும் குறிப்பாகப் பெண்களது எதிர்பார்ப்பாகும். எமது நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு கணிசமானஅளவில் செல்வாக்குச் செலுத்தும் போதும், அரசியலில் தீர்மானம் எடுக்கும் தருணங்களில் மற்றும் கொள்கை வகுப்பில் பெண்களது அபிப்பிராயம் மற்றும் அக்கறையானது பெரிதும் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

இதனைக் கருத்தில் கொண்டே இம்முறை சொல் சஞ்சிகையானது இன்றைய சூழலில் பெண்களது அரசியல் பங்களிப்புப் பற்றியும், அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டியமை பற்றியும் ஆராய முற்படுகின்றது. இச்சஞ்சிகை தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துகளை வாசகர்களாகிய உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் விடுக்கும் அறைகூவல்!

ஆதிக்கம் செலுத்துவதற்கும், வெற்றி கொள்வதற்கும், மிகவும் கடினமான பல சிக்கல்களுக்கும் உரிமை கோரியே நாம் 2011ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்தோம். நாடு முழுவதும் தங்குதடையின்றி நிகழ்கின்ற குற்றச்செயல்கள், ஊழல், மோசடிகள், வன்முறைகள் என்பவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாது பூமாதேவி கூட எம்மை எதிர்த்துள்ளாள். பல தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்திலிருந்து விடுபட்டுள்ள வடகிழக்கு, வடமத்திய மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு மீண்டும் இடம்பெயர்ந்துள்ளனர். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த நெற் செய்கை, வீட்டுத் தோட்டங்கள் என்பன அழிவடைந்துள்ளன. தற்போது கூட சொல்ல முடியாத அளவிற்கு அரிசி, தேங்காய், மரக்கறி வகைகள் போன்றவற்றின் விலைகள் அதிகரித்துள்ள போதும், அவை மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியங்களே இன்னும் எம்முன்னே காணப்படுகின்றன. இவ்வனைத்துப் பேரழிவுகளினாலும் மிகவும் பாதிக்கப்படுவதும், துன்பப்படுவதும் யாரெனில் தாய், குடும்பப் பெண் எனும் பாத்திரங்களை நிறைவேற்றுவதற்காக தினமும் போராடிக் கொண்டிருக்கின்ற பெண்களேயாகும்.

இவையனைத்தும் பாதிக்கப்பட்ட, தாக்கத்திற்கு உள்ளாகிய ஓர் சமூக சூழமைவினிலேயே இடம்பெறுகின்றன. கற்ற பாடங்களும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் முன்னால் தமது கணவன், மகன் மற்றும் மகள்மார்களைக் கேட்டு குரல் எழுப்பிய பெண்களின் அவலங்களை சிங்கள, ஆங்கில ஊடகங்களில் வெளிவராமலேயே காற்றுடன் கலந்து விட்டன. 1990ஆம் ஆண்டு மட்டக்களப்பில் வைத்துக் கொலை செய்யப்பட்ட 600 பொலிஸ் உத்தியோகத்தர்களது குடும்பத்தார் விடுகின்ற துன்பப் பெருமூச்சினை வடக்கு மக்கள் அறிகின்றனரா என்பது கேள்விக்குரியதாகும். கொடூர யுத்தத்தினதும் ஜனநாயகத்திற்கும் முரணான நிர்வாக முறையினதும் பெறுபேறாக ஒருவரிடமிருந்து ஒருவர் பிரிக்கப்பட்ட, ஒருவரை ஒருவர் அச்சத்துடனும் சந்தேகத்துடனும் பார்க்கின்ற ஒரு சமூகமாக நாம் மாறியுள்ளோம். இலங்கையின் பல்லின, பல்கலாசார, பல்சமய, பன்மொழித் தன்மைகள் இவ்வாறு சவாலிற்கு உள்ளாகும் போது நாட்டின் நிர்வாகத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இவை தொடர்பாக மௌனம் சாதிக்கின்றனர். இலங்கையென்பது பெரும்பான்மையினத்தவரின் நாடு எனக்கூறும் நபர்களுக்கு அவர்களது கருத்தைப் பிரச்சாரம் செய்வதற்கு வழிசமைத்துக் கொடுக்கப்படுகின்றது.

இவ்வனைத்துத் துரதிஷ்டவசமான நிலைமைகளுக்கும் மத்தியில் சாதகமான அபிவிருத்தி தொடர்பாகவோ, நிலைபேறான சமாதானம் தொடர்பாகவோ, மக்கள் கருத்திற்கு மதிப்பளிக்கும் ஆட்சிப் பொறிமுறை தொடர்பாகவோ நாம் எவ்வாறுதான் கவனம் செலுத்துவது? இலங்கையில் இடம்பெறுகின்ற சில சம்பவங்கள் தொடர்பாக வெளிநாடுகள் கவனம் செலுத்தி சிலவேளைகளில் நிவாரணத்தைப் பெறலாம். கடந்த இரண்டு மாதங்களில் மனித உரிமைகளைப் பேணுவதற்கு முன்னோடிகளாகச் செயற்பட்ட சில பெண்களுக்கு ஏற்பட்ட விதியை கருத்திற் கொள்ளும் போது இலங்கையில் எம்மைப் போன்று அடக்குமுறையான, வன்முறையான, ஜனநாயகத்திற்கு எதிரான அரச பொறிமுறையுடன் மோதுகின்ற பல பெண்கள் உலகம் முழுவதும் உள்ளார்கள் என்பது நினைவிற்கு வருகின்றது. 2010 மார்கழி 16 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்திற்கு ஒரு வாரத்திற்குப் பின்னர் மெக்ஸிக்கோ மிகுவாகுவா நகரத்திலே நகர சபைக்கு முன்னால் இடம்பெற்ற தனது மகளாகிய மரிசொல்லின் மர்மமான கொலை தொடர்பாக நியாயமான விசாரணையைக் கோரி ஆர்ப்பாட்டம் செய்த திருமதி மரிசெலா ஒர்டிஸ் இனந்தெரியாத ஆயுததாரிகளால் பட்டப்பகலிலே கொலை செய்யப்பட்டார். 2008ஆம் ஆண்டு காணாமல் போன மரிசொல்லின் சடலம் மிகுவாகுவாவிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் குப்பைத் தொட்டியில் துண்டுகளாக வெட்டிப் போடப்பட்டிருந்தது. இது 2009 ஆனி மாதம் கண்டெடுக்கப்பட்டது. தனது மகளின் மரணம் தொடர்பாக மெக்ஸிக்கோ அரசாங்கம் அல்லது பொலிசார் உரிய முறையில் சட்டப்படி நடவடிக்கை எடுக்காதது தொடர்பாக கவனம் ஈர்ப்பதற்கு முயற்சியெடுத்த தாய்க்கு மரணமே உரித்தானது.

ஈரானில் முரண்பாட்டு செயற்பாட்டாளர்களின் உரிமைகளுக்காக ஆஜராகிய சட்டத்தரணி நஸ்ரீன் சொட்டுடெனுக்கு 2010 மார்கழி மாதத்தில் 11 வருட கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. அவர் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு செயற்பட்டதனாலேயே இத்தண்டனை கிடைத்தது. சிறைத்தண்டனையோடு மேலதிகமாக அவர் 20 வருடங்களுக்கு சட்டத்தரணியாக செயற்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இவர் இழைத்த தவறு தான் என்ன? அரச பொறிமுறைக்கு எதிராகவும், ஹிஜாப் அணியாமல் வீடியோ செய்யப்பட்ட கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்றதுமே காரணங்களாகக் கூறப்பட்டுள்ளது. தாய்லாந்தைச் சேர்ந்த சிரனுச் ப்ரெம்சய்பொர்ன் என்பவர் கணனிக் குற்றச் செயல்கள் சட்டத்தின் கீழ் 2011 தை மாதம் பாங்கொங் நீதிமன்றத்தின் முன்னால் ஆஜர்ப்படுத்தப்பட்டார். இப்பெண்மணியினால் நடத்தப்பட்டு வந்த இணையத்தளத்திலே பிற நபர்களால் தாய்லாந்து மன்னருக்கு எதிராக எழுதப்பட்டிருந்த குறிப்புகளை சேர்த்தமையனால் இவர் குற்றவாளியாக்கப்பட்டார். .

இவ்வனைத்துத் துன்பகரமான சம்பவங்களுக்கும் மத்தியிலும் மகிழ்ச்சிகரமான தகவல்களும் இல்லாமலில்லை. 2002ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலும் தம்மைக் கைது செய்த இராணுவ வீரர்களினால் தாம் பாலியல் பலாத்காரத்திற்கும், பாலியல் துன்புறுத்தலிற்கும் உள்ளாக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டி, மெக்ஸிக்கோ அரசாங்கத்திடம் நீதியை நிலைநாட்டுமாறு கோரிய வெலன்டினா கென்ரி மற்றும் இனேஸ் ஒர்தேகா ஆகிய இரண்டு ஆதிவாசிப் பெண்கள் அமெரிக்க மனித உரிமைகள் நீதிமன்றத்தின் முன்னால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு சாதகமான பதிலே கிடைத்தது. நீதிமன்றானது இவ்விரு பெண்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும், இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துன்புறுத்தல்கள் சம்பந்தமாகவும் உரிய விசாரணைகளை மேற்கொள்வது தொடர்பாகவும் மெக்ஸிக்கோ அரசாங்கம் செயற்பட்டுள்ள விதம் ஒருபோதும் போதுமானதல்ல எனவும் குறிப்பிட்டு இப்பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உள்ள பொறுப்புத் தொடர்பாக வலியுறுத்தியது.

குறிப்பிட்ட உதாரணங்களை நான் ஏன் இங்கு சுட்டிக் காட்டுகின்றேன் ஏனெனில், உலகத் தகவல்களை "சொல்" வாசகர்களோடு பகிர்ந்து கொள்வதற்காக மட்டுமன்றி, இந்த அனைத்து உதாரணங்களின் மூலமும் இலங்கையில் நாம் இன்று கழிக்கும் வாழ்க்கையின் மீது ஓர் ஒளிக்கீற்று விழுகின்றதை உணர்ந்து கொள்ளவே ஆகும். மெக்ஸிக்கோவிலாக இருக்கட்டும், ஈரானிலாக இருக்கட்டும், தாய்லாந்திலாக இருக்கட்டும் அப்பெண்கள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளுக்கே நாமும் முகங் கொடுக்கின்றோம்.

பேச்சுச் சுதந்திரம், முரண்பாட்டிற்கு உள்ள வாய்ப்பு, தமக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமை மீறல்களுக்கான நீதி போன்றவற்றிற்காக இலங்கையில் வாசிக்கின்ற நாங்களும் முகம் கொடுத்து வருகின்றோம். மாற்றுக்கருத்திற்கு உள்ள உரிமையை அனுபவிப்பதற்கு நாம் முயற்சிக்கும் போது நஸ்ரீன், மரிசெலா, சிரனுச் போன்றோர் முகங்கொடுத்த அடக்குமுறையான மற்றும் வன்முறை ரீதியான பதிற்செயற்பாடுகளுக்கே நாமும் முகங் கொடுக்கின்றோம். பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச் சட்ட ஒழுங்குவிதிகள் என்பவற்றைப் பயன்படுத்தி எமது ஜனநாயக உரிமைகள் புதைக்கப்படும் விதத்தை அவதானிப்பதற்கோ அல்லது அது தொடர்பாக கருத்து வெளியிடுவதற்கோ எமக்கு வாய்ப்பில்லை. அமைதியான முறையிலும், ஜனநாயகத்தை மதிக்கும் வகையிலும் எமது சுதந்திரத்தை மீண்டும் வெற்றிகொள்ள வேண்டிய போராட்டமே எம்முன்னால் இன்று உள்ளது.

மகேஸ்வரன், லசந்த, ப்ரகீத், ராஸிக் என்று கொலை செய்யப்பட்டதாகக் கூறுவோர், கூறப்படாதோர், காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்களை நினைவுகூர்ந்து மெழுகுவர்த்தி ஏற்றி நாம் கோட்டு நிற்பது நீதியையேயாகும். இருப்பினும் கண்ணிற்கெட்டும் தூரத்திலும் நீதி கிடைக்காதபோது நாம் என்ன செய்வது?

கனவை கைவிடோம்! இலங்கை மக்களிடம் எமது கருத்துகளை எடுத்துரைப்போம்! மாற்றுக் கருத்துக்குள்ள உரிமையைப் பாதுகாப்போம்! இதன்பொருட்டு நாடு முழுவதிலும் ஓரங்காட்டப்பட்டுள்ள, மௌனிகளாகவுள்ள, விரக்தியடைந்துள்ள எமது பயணத்தின் தோழர்களை விழிப்பூட்டுவோம்! 2011 இல் எம்முன்னாலுள்ள சவால் இதுவேயாகும். ■

**சுனிலா அபேசேகர**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் அரசியற் பங்களிப்பு - ஓர் பால்நிலைக் கண்ணோட்டம்

**அறிமுகம்:**

ஏனைய தளங்களைப் போலவே அரசியல் தளமும் தந்தையாதிக்கச் சிந்தனைகள் மற்றும் கருத்தியல்களின் செல்வாக்கிற்கு உட்படுத்தப்பட்டே வந்துள்ளது. பெண்களின் அரசியற் பங்கேற்பு என்பது காலம் காலமாக கேள்விக்குட்படுத்தப்பட்டு வந்துள்ளதோடு, அது ஆண்களுக்கு மட்டுமானதாகக் குறித்தொதுக்கப்பட்ட ஓர் துறையாகவும், ஆணாதிக்க நம்பிக்கையைக் கட்டியெழுப்பியும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. உலகின் அனேக பாகங்களில் அரசியல் வாழ்க்கையை ஆண்களே தம்வசம் வைத்துள்ளனர். விதிவிலக்காக சில பெண்களால் மட்டுமே ஆணாதிக்கம் நிறைந்த பொது அரசியல் தளத்தை உடைக்க முடிந்துள்ளது. எவ்வாறாயினும் அரசியல் உலகில் சுவடு பதித்து அதிகாரத்தைக் கைப்பற்றிய பெண்களும் மிகப்பெரும்பான்மையாக அரசியல் தலைவர்களின் அல்லது அரசியல்வாதிகளின் புதல்விகளாகவோ அல்லது கணவனை இழந்த பெண்களாகவேதான் காணப்படுகின்றனர். இந்தச் சமூகவியல் உண்மையையும் நாம் புறந்தள்ளிவிட முடியாது.

**அரசியல் என்றால் என்ன? என்ற எண்ணக்கருவாக்கலில் (conceptualization) உள்ள பிரச்சினைகள்**

அரசியல் என்றதும் பொதுவாகவே மக்களும் கோட்பாட்டாளர்களும் தேர்தல் சார்பான அரசியலை மட்டுமே கருத்திற் கொள்கின்றனர். அவ்வகையில் தேர்தலில் நிற்றல், வாக்குக் கேட்டல், வெற்றிவாகை சூடுதல், பாராளுமன்ற ஆட்சியில் பங்குபற்றுதல், தமது பிரதேச அபிவிருத்திக்கென்று நிதி ஒதுக்குதல், அடிக்கல் நாட்டுதல், பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளுதல் போன்றவற்றையே அரசியல் செயற்பாடுகளாகக் கருதப்படுகின்றன. இந்த இடத்தில்தான் தந்தையாதிக்கம் தனது முகத்தைக் காட்டுகின்றது.

பாராளுமன்றத்திற்கு வெளியில் நடைபெறும் மாற்றுக் குழுக்கள் அல்லது சிறுகுழுக்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளும் விவாதங்களும் அரசியல் நடவடிக்கையாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. உதாரணமாகப் பெண்கள் குழுக்களின் செயற்பாடுகளை நோக்கலாம். எனவே, பாராளுமன்றத்திற்கு வெளியிலான பெண்களின் நடவடிக்கைகளும், சிந்தனைகளும் பொதுத்தளத்தில் வைத்து நோக்கப்படுதல் அவசியமானதாகும்.

**பாரம்பரியமும் தந்தையாதிக்கமும்**

பாரம்பரியமாகவே தந்தையாதிக்கமானது பெண்களின் நடமாட்டத்தையும் பங்குபற்றலையும் கட்டுப்படுத்தவும், ஒடுக்கவும் பல்வேறுபட்ட உபாயங்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேசம் சரவணமுத்து

வழிமுறைகளையும் பிரயோகித்து வந்துள்ளது. அரசியற் சிந்தனையானது (Political thought) அரசியல் வாழ்வைப் பொது வாழ்வெனவும், குடும்ப வாழ்வைத் தனிப்பட்ட வாழ்வெனவும் வகுத்துப் பெண்கள் சமூகத்தின் மீது ஒருவகையான மதிப்பிறக்கத்தை மேற்கொண்டு வந்துள்ளது. இதனைப் பெண்ணிலைச் சிந்தனையாளர்கள் சுட்டிக்காட்டி வந்துள்ளனர் (Patemen,1983;1989), (Ellen Kennedy and Susan mendus,1989). இந்த இடத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதில் தந்தையாதிக்க சமூகம் ஒரு பாரிய இழுத்தடிப்பை மேற்கொண்டுள்ளமை பற்றி பெண்ணிலைவாத மறுவாசிப்புகள் எமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. அந்தவகையில் இலங்கையிலும் இத்தகைய பிற்போக்குத்தனமான கருத்துகள் வெளிப்பட்டமை பற்றியும் நாம் நினைவு கூரலாம்.

அரிஸ்டோட்டில், பிளேட்டோ, லொக், ரூசோ, கான்ற் போன்றவர்கள் இத்தகைய பாரபட்சமான மரபிற்கு வித்திட்டுள்ளனர் என்பதையும் அவர்களைத் தொடர்ந்து வந்த அரசியல் சிந்தனையாளர்கள் அத்தகைய மரபினை வளர்த்தெடுத்து வந்துள்ளனர் என்பதையும் இன்றைய பெண்ணிலைச் சிந்தனையாளர்கள் பகுப்பாய்வு செய்து மிகத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றனர். ஆசிய மரபிலும் அரசியற் சிந்தனையாளர்கள் இத்தகைய மனப்பாங்கினைக் கொண்டிருந்தனர் என்பதனைச் செல்வி திருச்சந்திரன் எடுத்துக் காட்டியுள்ளார் (Selvi Thiruchandran; women in political thought construction, selective notions and the feminist challenges, p.156-157)

தனிப்பட்ட வாழ்வு/பொது வாழ்வு எனும் பிரிப்பில், அரசியலானது பொதுவாழ்விற்கு உரியதாகவும் புத்திசாலிகளின் வேலையாகவும் கருதப்பட்டது. மறுதலையாகக் குடும்ப வாழ்வானது குறைந்த மதிப்பீடாகவும் கருதப்பட்டது. தவிரவும், பொது வாழ்வில் ஆண்கள் பிரகாசிப்பதற்கு குடும்ப வாழ்வில் பெண்கள் உறுதுணையாக இருப்பது அவசியமாகக் கொள்ளப்பட்டது. இப்பின்னணியில் குடும்ப வாழ்வென்பது வீடு, கணவன், குழந்தைகளைப் பராமரிப்பது போன்றவற்றைக் குறிக்கின்றது. குடும்ப வாழ்வு தொடர்பான பிரச்சினைகள் பொதுத்தளத்திற்கு கொண்டுவர முடியாதவை. இத்தகைய ஏற்பாடானது ஒரு வகையில் திட்டமிட்டே பெண்களை அரசியல் தளத்திலிருந்து ஓரங்கட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாயமாகவே கொள்ளப்பட வேண்டும்.

பாரம்பரியமாகவே அரசன், அரச மாளிகை, சாம்ராஜ்ஜியம் முதலான எண்ணக்கருக்கள் ஆண்களை மையப்படுத்தியே கட்டமைக்கப்பட்டுள்ளன. அரசிகள் எனப்படுவோர் ஆடை அணிகலனகள் சூடி, அழகுப் பதுமைகளாக அந்தப்புரத்தில் வலம் வந்தனர். இந்த நிலையில்தான் அரசியல் எனும் எண்ணக்கருவும் ஆண்களுக்குரிய தளமாகவே கருதப்பட்டு தந்தையாதிக்க நலன்சார்ந்து உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பெண்களுக்கு அரசியல் என்பது இயலாத காரியம் எனும் ஒரு மாயை சார்ந்த தோற்றப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



லேடி டெய்சி டயஸ் பண்டாரநாயக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புளோரிடா
விஜயகோன்

இந்நிலையில் அரசியல் தளம் பெண்களுக்கு அல்லாததாகவும், குடும்பத்தளம் ஆண்களுக்கு அல்லாததாகவும் ஆக்கப்பட்டுள்ளது. ஆண்கள் தம்மை வீட்டு வேலைகளிலிருந்து விடுவித்துக் கொண்டு அரசியலில் கூடுதல் கவனம் செலுத்தவும், அத்துறையில் தம்மை நிலைநிறுத்துவதற்குமான வாய்ப்பு சமூகத்தினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

### பெண்களின் அரசியற் செயற்பாடு

மேற்கூறப்பட்ட பின்னணியில் உயர் அரசியலில் பெண்கள் இல்லாதிருப்பதுடன் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பான கவனிப்பும் குறைவாகவே உள்ளமை தெளிவாகும். எனினும் பரந்த அணுகுமுறைக்கமைய பெண்கள் வித்தியாசமான முறைகளில் அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். அதாவது பெண்கள் தனிநபர்களாக அல்லது குழுக்களாகத் தமக்கு இயல்பான வகையில் அரசியற் தளம் சார்ந்து செயற்படுபவர்களாக இருந்து வருகின்றனர். ஆணாதிக்கம் தழுவிய அல்லது தந்தையாதிக்கக் கருத்தியலை உள்வாங்கிக் கொண்ட ஆண் அரசியற் கோட்பாட்டாளர்கள் மேலே சுட்டிய சமூக யதார்த்தத்தைக் கருத்திற் கொள்வதில்லை.

ஐரோப்பிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் ஆங்காங்கே பெண் ஆட்சியாளர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தினர்: நடத்துகின்றனர். உலகத்திற்கே முதலாவது பெண் பிரதமரைத் தந்தது எமது நாடாகும். அவ்வாறே இந்தியாவில் இந்திராகாந்தி, பாகிஸ்தான் பெனாசீர் பூட்டோ, பங்களாதேசத்தின் பேகம் காலிதாஷியா, ஷேக் ஹசீனா, மியன்மாரின் ஆங்ஷாங்சூகி, பிரிட்டிசின் மார்க்கிரட் தட்சர் முதலியோரைக் குறிப்பிடலாம்.

எவ்வாறாயினும், அரசியலில் பெண்களின் தலைமைத்துவம் என்பதோ, பங்குபற்றல் என்பதோ முற்றிலும் பெண்நிலை சார்ந்த விடயமாக இடம்பெறுவதில்லை. ஏலவே குறிப்பிட்டவாறு கணவன் அல்லது குடும்பத்தவர்கள் ஆகியோரின் அரசியல் பிரவேசம் காரணமாகவே அநேக பெண்களுக்கு அரசியலில் ஈடுபட முடிந்துள்ளது. அவ்வாறன்றிப் பெண்கள் தமது சுய திறமையாலும் தன்னாற்றல் மூலமும் இயல்பான அரசியற் பிரவேசம் செய்வதென்பது தென்னாசியாவில் முயற்கொம்பாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அரசியற் தளத்திற்கும் அப்பால் ஏனைய நிர்வாகத் துறைகளிலும் இலங்கையில் பெண்களின் நியமனம் விதந்துரைக்கப்படுகின்றது.

எடுத்துக் காட்டாகப் பல்கலைக்கழக உபவேந்தர், உச்சநீதிமன்ற நீதவான், சட்டவரைஞர், தபால் அத்தியட்சகர் மற்றும் ஆணையாளர்கள் போன்றோரைக் கூறலாம். எனினும் பாராளுமன்ற அரசியலிற்குப் பெண்கள் வந்த பின்னர் இலங்கைப் பெண்கள் சமூகத்தின் உள்ளார்ந்த அபிவிருத்தியில் எத்தகைய முன்னேற்றங்கள் ஏற்பட்டன என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

### இலங்கையில் பெண்களின் அரசியற் பங்குபற்றுகை

உண்மையில் இலங்கையில் வாக்குரிமைக்கான போராட்டத்துடனேயே பெண்களின் அரசியல் பங்குபற்றல் தொடர்பான நவீன பிரக்ஞை ஆரம்பமாவதாக ஆய்வறிவாளர்கள் தெரிவிக்கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Kumari Jayawardena, 2001 P.xi). இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டத்தில் பெண்கள் வாக்குரிமை இயக்கம் (The women's suffrage movement) மிக ஆர்வமாகவும் அதேவேளை தந்தையாதிக்க சவால்களுக்கு முகம்கொடுத்தும் இயங்கியது. இந்த இயக்கத்திற்கு லேடி டெய்சி பண்டாரநாயக்கா, அக்னஸ் டீ சில்வா, புலோரிடா விஜயகோன் மற்றும் டாக்டர் மேரி ரட்ணம் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இலங்கையில் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் அடலின் மொலமுரே (Adeleine Molamure) (J.H. மீதெனிய அதிகாரியின் புதல்வி) என்பவர் தன்னுடைய பெயரைப் பொறித்தார். அவர் "பெண்கள் தங்களுடைய அபிலாசைகளைக் கோரக்கூடாது மாறாக ஆண்களுக்கு நிகரான நீதியும் சமத்துவ உரிமையுமே எமக்கு வேண்டுவன" என்ற புரட்சிகரமான கூற்றினை வெளியிட்டார். இவரை அடுத்து, சுயாதீன தொழிற்கட்சியைச் சார்ந்த (Independent Labour Party) நேசம் சரவணமுத்து என்பவர் சட்டசபைக்கு இருதடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1931,1936).



அடலின் மொலமுறே



விவியன் குணவர்த்தனா

சுதந்திரத்திற்கு முன்னைய ஆண்டான 1947 அளவில் கற்ற உயர்குடும்பத்தைச் சார்ந்த பல்வேறு படித்த பெண்களும் (பிரதானமாக இடதுசாரிக் கட்சியைச் சார்ந்தவர்கள்) முழுநேர அரசியல்வாதிகளாகப் பணியாற்றி குறிப்பிடத்தக்கதான சமூக மாற்றத்திற்கு வித்திட்டனர். அவர்களுள் விவியன் குணவர்த்தனா, புளோரன்ஸ் சேனநாயக்கா, குசேலா அபயவர்த்தனா, குசுமா குணவர்த்தனா மற்றும் டொரீன் விக்கிரமசிங்க ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் இடதுசாரிச் சிந்தனையைக் கொண்டிருந்ததோடு, சோசலிச அரசியற் கருத்தியல்களையும் உள்வாங்கியவர்களாகக் கருதப்பட்டனர். எவ்வாறாயினும் 1931 ஆம் ஆண்டளவில் பெண்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் 05 வீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது.

இன்றும் பூகோளமயமாதற் சூழலில் இலங்கையின் அரசியற் தளத்தில் நிலவுகின்ற ஆணாதிக்கம் முடிவிற்குக் கொண்டுவரப்படவில்லை என்றே கூறவேண்டும். பெண்களின் அரசியற் பங்கேற்பென்பது ஆண்களுக்கான கேலிப்பேச்சாகக் கருதப்படும் சூழலிலேயே இன்றும் உள்ளது. குறுக்குவெட்டு முகமாக எடுத்துப் பார்க்கையில் பாராளுமன்றமும் அரசியலும் எனும் விடயம் இலங்கையில் இன்றுவரை முன்னேற்றப்புள்ளியைத் தொடவில்லை என்றே கருதப்பட வேண்டும். இறுதியாக இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல் இந்த யதார்த்தத்தை எமக்குப் பிரதிபலிக்கின்றது. ஏற்கனவே குறைவாக இருந்த பெண்களின் பிரதிநிதித்துவமானது இறுதியாக இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் இன்னும் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

எமது அரசியற் பாதையைத் திரும்பிப் பார்க்கையில், அரசியலில் பெண்களின் ஈடுபாடு என்பது தந்தையாதிக்க மரபுகளால் வழிநடத்தப்பட்டதொன்றாகவே காணப்படுகின்றது. ஏனைய தென்கிழக்காசிய நாடுகளின் அரசியற் பிரதிபலிப்பை ஒத்தவாறே இலங்கையிலும் தந்தை அல்லது கணவன் அல்லது சகோதரனின் படுகொலை அல்லது மறைவை அடுத்து அரசியல் பிரவேசம் செய்த பெண்களையே எம்மால் அதிகளவில் காண முடிகின்றது. அதற்கு எடுத்துக் காட்டாகப் பின்வரும் பட்டியலைக் காட்டலாம்.

- ▲ பண்டாரநாயக்கா - சிறிமாவோ பண்டாரநாயக்கா
- ▲ வன்னியாராச்சி - பவித்ரா வன்னியாராச்சி
- ▲ இரத்நாயக்கா - அமரா பியசீலி இரத்நாயக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

▲ ஜயசேன - சுமேதா ரீ.ஜயசேன
▲ பண்டாரநாயக்கா - சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க
▲ அஷ்ரப் - பேரியல் அஷ்ரப்
▲ ஹேரத் - ரேணுகா ஹேரத்
▲ கன்னங்கரா - விமலா கன்னங்கரா
▲ மகேஸ்வரன் - விஜயகலா மகேஸ்வரன்
▲ ஜெயராஜ் பெனான்டோபுள்ளே - சுதர்சினி

## பெண்கள் அரசியலில் ஈடுபடத் தடையாக உள்ள காரணிகள்

தந்தையாதிக்க சமூகக் கருத்தியலானது தனது நலன் கருதி, பெண்களை பொதுவாழ்விலிருந்தும் ஒடுக்கவே முற்படுகின்றது. மிகப்பெரிய பகுத்தறிவுவாதியாக மதிக்கப்படுகின்ற ரூசோ ஓரிடத்தில் பின்வருமாறு கூறினார். "பெண்களுக்கு தையல், சமையல், மனை சாஸ்த்திரம் முதலான கல்வியே புகட்டப்படவேண்டும். அவர்கள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடத் தேவையில்லை" என்றார். புகழ்பூத்த தத்துவஞானியான அரிஸ்டோட்டில் பெண்களை வீட்டிலுள்ள தட்டுமுட்டுப் பொருள்களுக்குச் சமானமாக வைத்தே பேசினார். மகாத்மா காந்தி கூட பெண்களின் அரசியற் பங்கேற்புத் தொடர்பான தனது அபிப்பிராயத்தை ஆணாதிக்க இந்துத்துவ அளவுகோல்களுடன் ஒடுக்கிக் கொண்டார். இவ்வாறு மரபுரீதியாக ஆணாதிக்கச் சமூகமானது பெண்களின் அரசியல் நடவடிக்கை தொடர்பில் பிற்போக்குத் தனமான கருத்தியலையே பேணி வந்துள்ளமை புலப்படுகின்றது.

பெண்கள் தாய்மையடையும் உடற்கூற்றினைக் கொண்டிருத்தல், வீட்டுவேலைக்குரியவளாகக் கருதப்படுதல், பலவீனமான பாலியல்பை (Weaker sex) கொண்டவளாகக் கருதப்படுதல், உணர்ச்சிவசப்படுபவளாக நோக்கப்படுதல், இரகசியங்களைப் பேணமுடியாதவளாகச் சித்தரிக்கப்படுதல், நிர்வாகத் திறனோ போதுமான பயிற்சியோ குறைந்தவளாகக் கருதப்படுதல், ஆளுமைத் திறன் குறைந்தவளாக நோக்கப்படுதல், தெற்காசியப் பண்பாட்டிற்குப் பெண்களின் அரசியற் பங்கேற்பு ஒவ்வாத ஒர் விடயமாகக் காட்டப்படுதல் முதலான பல்வேறு காரணங்கள் ஆணாதிக்கச் சமூகத்தால் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இவற்றைக் கட்டவிழ்த்துப் பார்க்கும் போது பெண்களின் அரசியற் பங்கேற்பு வீழ்ச்சியாக இருப்பதற்கு நாம் பின்வரும் மெய்யான காரணங்களைச் சுட்டிக் காட்டலாம்.

1. அரசியல் தளத்தில் பெண்களின் பிரவேசத்தை ஆணாதிக்கம் விரும்பாமல் இருக்கின்றமை.
2. பெண்களின் அரசியல் நுழைவு ஆணாதிக்க அரசியல்வாதிகளால் ஓர் அச்சுறுத்தலாக நோக்கப்படுகின்றமை.
3. பெண்களின் அரசியற் பங்கேற்பை ஊக்குவிக்கும்படியான சமூகமயமாதலோ அதற்கான தளங்களோ இல்லாமல் இருக்கின்றமை.
4. அமெரிக்கா தொடக்கம் பாகிஸ்தான் ஈறாக கிராமியப் பஞ்சாயத்திலிருந்து பாராளுமன்றம் வரை பெண்களின் பங்கேற்பிற்கான கதவுகள் மூடப்பட்டிருக்கின்றமை.
5. பிற்போக்கான சமூகப் பண்பாட்டுக் கருத்தியல்களின் செல்வாக்கு.

## முடிவுரை

எனவே, நோக்கும் போது பெண்களின் அரசியல் பங்குபற்றுகையானது பெயரளவில் மட்டுமே இடம்பெற்றுள்ளதே தவிர அது பால்நிலைசார்ந்த பிரக்ஞையைப் (Gender sensitiveness) பிரதிபலிக்கவில்லை என்பதை நாம் கண்டறியலாம். மிக அண்மையில் வீட்டுக்காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்ட மியன்மார் நாட்டுத் தலைவி ஆங்ஷாங் சூகி பெண்களும் அரசியலும் தொடர்பாக எமக்கொரு புதிய செய்தியைத் தருகின்றார். அதாவது உண்மையான மனோதிடமும் அர்ப்பணிப்பும் இருக்கும் பெண்கள் அரசியல் தளத்திலும் தம்மை நிலைநிறுத்தலாம் என்பதே அதுவாகும். வெறுமனே கணவன் அல்லது தந்தைமார்களுக்கான அரசியற் பிரசாரங்களில் ஈடுபடுபவர்களாக அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியற் கூட்டங்களில் கவர்ச்சிப் பொருளாகப் பெண்கள் தொழிற்படுத்தப்பட்ட காலம் மலையேறிவிட்டது. இன்று பெண்கள் தம்மையும் தமது தன்னாற்றலையும் உணர்ந்தவர்களாக, ஆணாதிக்க மைய அரசியல் நீரோட்டத்திற்குச் சமாந்தரமாகத் தமது ஆளுமையை முன்னெடுக்கின்ற அரசியல் பிரக்ஞை மலர்ந்துள்ளது. இந்நிலையில் புதிய ஓர் அரசியற் கலாசாரம் ஏற்படுத்தப்படுமாயின், ஆணாதிக்க சிந்தனைகள் தகர்க்கப்படும் பட்சத்தில் பெண்களின் அரசியற் பங்கேற்பை நாம் எதிர்பார்க்கும் புள்ளிக்கு இட்டுச் செல்லலாம். "ஆண்களோடு பெண்களும் சரிநிகராய் நின்று வையத்தை ஆளுவோம்" என்று யுகப்புருஷன் பாரதி அறைகூவல் விடுத்தாலும் அதற்கான பாதை இன்னும் தொலைவிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது.■

<u>உசாத்துணை</u>


1. Mario Gomez & Shyamala Gomez(2001),Gender and politics in Srilanka, CIDA's, Sri Lanka.
2. *கமலினி.க, "பெண்களின் அரசியற் பங்களிப்புப் பற்றிய விவாதங்கள்", பெண், தொகுதி 06 இல 02 (2001), சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மட்டக்களப்பு பக் 09 - 23*
3. de silva,Chandra, 'Women in srilanka politics: Historical overview', paper presented at a conference on 'Women in politics'. Kandy,February,1996.
4. Kiribamune, Sirima, 'Women in srilankn politics', paperr presented at a conference on 'Women in politics". Kandy, February, 1996


சந்திரசேகரன் சசிதரன்


● ● ●




*பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பினரால் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, பெண்களை வேட்பு மனுத் தாக்கல் செய்யுமாறு கோரும் சுவரொட்டி. (பங்குனி - 2011)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்கள் வலுவூட்டல் அமைச்சராக ஆணொருவர் பணியாற்ற முடியுமா?

2010 வைகாசி 09 ஆம் திகதி புதிய அமைச்சரவையினைத் தெரிவு செய்தமை தொடர்பான அறிவித்தலைப் பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். யார் பதவி உயர்த்தப்பட்டார்கள்? அல்லது பதவியிறக்கப்பட்டார்கள்?, யார் புதிதாக உள்ளடக்கப்பட்டார்கள் அதேபோல யார் வெளியேற்றப்பட்டார்கள்? இந்த நியமனங்கள் பொருத்தமானதா? அல்லது பொருத்தமற்றதா? என்பது பற்றிக் கொழும்பிலும், வேறு பல பகுதிகளிலும் பொதுவான கதைப் பொருளாக இருக்கின்றது. முன்பு மகளிர் விவகார அமைச்சு என அழைக்கப்பட்ட தற்போதைய சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர் நியமனங்களுக்கு இரண்டு ஆண்கள் நியமிக்கப்பட்டமை ஆச்சரியப்பட வேண்டிய ஒன்றாகும். இது குறித்துப் பெண்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதனை விளங்கிக் கொள்வதற்காக உடனடிக் கருத்தாய்வு ஒன்றை நடாத்த Cat's Eye தீர்மானித்தது.

"பெண்கள் விவகார அமைச்சராக ஆணொருவர் தெரிவு செய்யப்பட்டதையிட்டு நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?" எனக் கொழும்பைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் கேட்டபொழுது, அதனை அவர் புரிந்து கொள்ள முடியாது தடுமாறுவதை ஒப்புக்கொண்டார். "என்ன நடைபெறுகின்றது? ஒரு பெண் ஆணாக இருக்க முடியுமா?" என அவர் கேட்டார். களனியைச் சார்ந்த இன்னொருவர் கருத்துக் கூறும்போது "புத்தசாசன அமைச்சிற்கு கத்தோலிக்கர் ஒருவரை நியமிப்பதைப் போன்றதே இச்செயற்பாடு" எனத் தெரிவித்தார். கம்பஹாவைச் சேர்ந்த வேறு ஒரு பெண் கருத்துத் தெரிவிக்கையில், "பெண்களுக்காகவும், அவர்களின் தேவைப்பாடுகளுக்காகவும் அது தொடர்பானவற்றைக் குறிப்பிட்ட நபர் நிறைவேற்றும் வரையில் யார் தெரிவு செய்யப்பட்டார் என்பது பற்றிப் பெரிய விடயமாகக் கொள்ளத் தேவையில்லை" எனத் தெரிவித்தார். உண்மையில் பெண்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை உருவாக்கம் தொடர்பான நிறுவனத்திற்கு, ஆணொருவர் பொறுப்பாக இருப்பது என்பது பொதுவாகவே சிக்கலானதும், வழமைக்கு மாறானதுமாகும். பெண்களே பெண்கள் சார்பாகப் பேசமுடியும் என்பதைப் போல், பெண்கள் மாத்திரமே அத்தியாவசியமானவைகளைச் செய்ய முடியும் எனச் சொல்லலாம்.

### பெண்ணிலைவாத சிந்தனை கொண்ட ஆண்கள்

வெளிப் பார்வைக்குப் பெண்ணிலைவாதிகளாக இருந்தாலும், பால்நிலைக் கூருணர்வு மிக்க பல ஆண்களுக்கு இந்த நிலையானது நீதியற்றதாகும். ஆனாலும் அதிகளவு பொறுப்புகளைக் கொண்டுள்ள பல பெண் அமைச்சர்கள் கூடப் பிழையான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கின்றார்கள். இருந்தாலும், இக்குறிப்பிட்ட பொறுப்பில் ஆணொருவர் செயலாற்றுவது அசௌகரியமாக இருப்பதுடன், பெண்கள் பிரச்சினைகளுக்கு குறிப்பிட்ட நபர் போதியளவு கூருணர்வாக இருப்பார் என்பது தொடர்பாகப் பெண்களுக்கு சந்தேகம் இருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. இப்பதவி வகிப்பதற்குப் பொருத்தமான மற்றும் தகுதி வாய்ந்த பெண்கள் எம்மிடம் இல்லையா? பாதிக்கப்பட்ட பெண்கள் குறிப்பிட்ட ஆண் அமைச்சருடன் நம்பிக்கையுடன் பேச முடியுமா? பேசினாலும் எவ்வளவு தூரம் அவரால் பெண்களின் தேவைகளையும், அடையாளத்துவங்களையும் உண்மையிலேயே புரிந்துகொள்ள முடியும்? அடிப்படையான பிரச்சினைகள் தொடர்பாக எவ்வளவு தூரம் பெண்களின் குரலை ஆண்களால் பிரதிநிதித்துவம் செய்ய முடியும்? பால்நிலை சமத்துவத்திற்கான உண்மையான கட்டமைப்பு மாற்றங்களை மேற்கொள்ளும்பொழுது அவர்களால் உண்மையிலேயே பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்த முடிகின்றதா?

பால்நிலை சமத்துவமின்மையில் முக்கியமான கட்டமைப்பு மாற்றங்களை உண்மையிலேயே ஏற்படுத்தும் தருணத்தில் அவர்களால் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியுமா? அமைச்சுப் பொறுப்புகளைக் கொண்டுள்ள ஆண்கள், பெண்களை விட சிறப்பாக ஏதும் செய்வார்களா? என்பது தொடர்பாக நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### முக்கியத்துவமற்ற அமைச்சுப் பொறுப்பு?

மகளிர் விவகார அமைச்சானது முதலில் அமைக்கப்பட்டபொழுது அது ஒரு முக்கியத்துவமற்ற அமைச்சுப் பொறுப்பாகவே கருதப்பட்டது. இதுவரைக்கும் அதனைப் பெண்களே வகித்து வந்தார்கள். அது ஒரு ஆறுதல்ப் பரிசாகவே இருந்து வந்தது. கவர்ச்சிகரமான அமைச்சாகவோ அல்லது நன்கு வரவு செலவுத்திட்ட நிதி

> **குறிப்பிட்ட பொறுப்பில் ஆணொருவர் செயலாற்றுவது அசௌகரியமாக இருப்பதுடன், பெண்கள் பிரச்சினைகளுக்கு குறிப்பிட்ட நபர் போதியளவு கூருணர்வாக இருப்பார் என்பது தொடர்பாகப் பெண்களுக்கு சந்தேகம் இருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. இப்பதவி வகிப்பதற்குப் பொருத்தமான மற்றும் தகுதி வாய்ந்த பெண்கள் எம்மிடம் இல்லையா? பாதிக்கப்பட்ட பெண்கள் குறிப்பிட்ட ஆண் அமைச்சருடன் நம்பிக்கையுடன் பேச முடியுமா?**

ஒதுக்கப்பட்ட ஓர் அமைச்சாகவோ மகளிர் விவகார அமைச்சானது இருக்கவில்லை. அபிலாசைகளையும், இயலுமையும் கொண்ட ஒரு பெண் அரசியல்வாதிக்கு இந்த அமைச்சுப் பொறுப்புக் கொடுக்கப்பட்டபொழுது "எனக்கு ஏன் இந்த வால் தரப்படுகிறது?" என அவர் நளினப்பட்டுப் பேசியதாக முன்பு அறிக்கையிடப்பட்டது. இதில் எந்த அதிசயமும் இல்லை. குறிப்பிட்ட பதவியை ஏற்று சத்தியப்பிரமாணம் செய்யும் வேளையில், புதிய ஆண் அமைச்சரானவர் இந்த அமைச்சிற்கு செல்வதைத் தவிரத் தனக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு வழியில்லையோ எனப் பிறர் கருதிவிடக் கூடும் என்ற எண்ணப்பாட்டை நீக்குவதில் அவதானமாக இருந்தார். அதாவது குறிப்பிட்ட அமைச்சானது முக்கிய பணிகளை மேற்கொள்ள இருப்பதாகவும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விடயத்தில் அதிக கவனத்தைச் செலுத்தப் போவதாகவும், ஆறு மாதங்களுக்குள் அமைச்சில் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த இருப்பதாகவும் வாக்களித்தார்.

### அமைச்சை மீளமைத்தல்

அமைச்சரின் மனதில் என்ன மாற்றங்கள் உள்ளன என Cat's Eye க்குத் தெரியாது. ஆனால் மிகவும் முக்கியமான விடயம் என்னவெனில், அமைச்சை மீளமைப்பதென்பது அவருடைய சொந்த உத்தியோகபூர்வ இல்லத்தினை முழுமையாகத் துப்பரவு செய்வதில் இருந்து ஆரம்பிக்கின்றது. பெண்கள் மீதான தேசிய இயந்திரம் என அழைக்கப்படுவதானது, தற்போது குழந்தைகள் விருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல், பெண்கள் பணியகம், பெண்கள் மீதான தேசியக்குழு என்பவற்றை உள்ளடக்குகின்றது. வன்முறையிலிருந்தும் துஷ்பிரயோகங்களிலிருந்தும் பெண்களைப் பாதுகாத்தல், பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மட்டங்களில் பெண்களை வலுவூட்டல், எல்லாத் தீர்மானம் எடுக்கும் விடயங்களிலும் பெண்களின் பங்களிப்பை வலுப்பெறச் செய்தல் போன்றன அவைகளின் விசேடித்த இலக்குகளில் உள்ளவையாகும். பெண்கள் மீதான தேசியக்குழு மற்றும் பணியகம் ஊடாக அமைச்சின் பணியானது செயலாற்றப்படுகின்றது.

### பெண்களுக்குரிய ஏகபோக பொறுப்புரிமை குழந்தைகள் மாத்திரமே

மகளிர் விவகார அமைச்சின் வரலாற்றைப் பார்க்கும்பொழுது ஒரு தடவையோ அல்லது இரண்டு தடவைகள் மாத்திரமே இது ஏனைய விடயங்களான சுகாதாரம் மற்றும் போதனா வைத்தியசாலை, போக்குவரத்து, சுற்றாடல் போன்றவற்றுடன் இணைக்கப்படாத தனித்த அமைச்சாக இருந்திருக்கின்றது. ஒன்றிற்குப் பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் இவ்வண்ணமாக மகளிர் அமைச்சின் இயலுமைப் பெறுமதியையும் அதன் சாதகத் தன்மைகளையும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. மேலும் தற்போது சிறுவர் விருத்தியினைப் பெண்கள் விருத்தியுடன் இணைக்கும் போக்கானது, பிள்ளைகளே பெண்களின் ஏக பொறுப்பு என்ற மனோபாவத்தை மீள உறுதிப்படுத்துவது போலத் தெரிகின்றது. இது பெண்கள் மற்றும் அவர்களின் இனவிருத்தி வகிபங்கு என்பவற்றோடு தொடர்புபடுத்திப் பெண்ணைத் தாயாக மட்டுமே பார்ப்பதைத் தூண்டுவதோடு, பெண்களை அவர்களது உரிமைகளுடன் கூடிய சிந்தனைகளைத் தடை செய்கின்றது.

### பெண்கள் பணியகம்

பெண்கள் பணியகம் என்பது மிகவும் பழமையான தேசிய நிறுவனமாகவும் இலங்கையில் பெண்களின் நிலையினை ஓர் கொள்கையுடன் முன் நகர்த்தும் நிறுவனமாகவும் உள்ளது. திட்டமிடல் அமைச்சின் கீழ் 1978 இல் நிறுவப்பட்ட இவ் அமைப்பானது தற்பொழுது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதுடன், வருமானம் ஈட்டுதல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பவற்றின் மீது பிரதான கவனம் செலுத்தும் வினைத்திறனற்ற கருத்திட்ட அடிப்படையிலான நிறுவனமாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இப் பணியகமானது அதனது வேலைத்திட்டங்களை காந்தா காரிய சங்கம் என அழைக்கப்படும் சமூக அடிப்படையினாலான வலைப்பின்னல் ஊடாக நடைமுறைப்படுத்துகின்றது. 2007 கார்த்திகை மாதம் அண்ணளவாக 6,693 பதிவு செய்யப்பட்ட சனசமூகங்களைச் சேர்ந்த 120,000 இற்கும் மேற்பட்ட பெண் உறுப்பினர்கள் இதன் அங்கத்தவர்களாய் இருந்தார்கள். துரதிஷ்டவசமாக இக்குறிப்பிட்ட பெருமளவான பெண்களின் உள்ளடக்கமானது அமைச்சினாலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது வேறு தேசியப் பெண்களுக்கான சபையினாலோ பொறுப்பெடுக்கப்பட்ட சட்டம், கொள்கை மறுசீரமைப்பிற்கு ஆதரவாக ஒருங்கு திரட்டப்படவில்லை. அமைச்சில் புதிதாக நியமிக்கப்பட்ட செயலாளரானவர் பெண்கள் பணியகத்தின் முன்னாள் பணிப்பாளராவார். அமைச்சின் வேலைத் திட்டமானது இப்பொழுது மிகவும் நலன்புரி அடிப்படையினாலான திசையில் செல்லுமா? அல்லது பெண்கள் பணியகத்தின் உறுப்புரிமையானது, கொள்கை மறுசீரமைப்பினையும், மாற்றத்தினையும் அணிதிரட்டுமா? என்ற எதிர்பார்ப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களில் பெண்கள் எதிர்கொள்ளும் விடயங்கள் மற்றும் பிரச்சினைகள், புலம்பெயர் பெண் தொழிலாளிகள், யுத்தத்தில் கணவனை இழந்த பெண்கள், தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் இன்னும் பலர் புத்திக் கூர்மையானதும், அர்ப்பணிப்புடையதுமான செயற்பாடுகளை வேண்டி நிற்கின்றார்கள்.**

## பெண்களுக்கான தேசியக்குழு (NCW)

பெண்களுக்கான தேசியக்குழுவானது 1995 பீஜிங் மாநாட்டின் ஒர் விளைவாகும். அத்துடன் இது செயற்பாட்டிற்கான ஒர் மேடையாக இருப்பதுடன், 1993 இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெண்கள் சாசனத்தை அமுல்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டது. பெண்கள் தொடர்புடைய விடயங்களின் கொள்கைகளை விருத்தி செய்வதற்கும், பால்நிலை சமத்துவம் குறித்த விடயங்களை ஆராய்வதற்குமான கொள்கைகளையும் கொண்டுள்ளது. இக்குழுவின் உறுப்பினர்கள், அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளிடமிருந்து தெரிவு செய்யப்படுகின்றார்கள். இதன் ஆரம்பத்திலிருந்தே இந்தக் குழுவானது பெரும் அதிகாரங்களுடன் முழு அளவிலான ஆணைக்குழுவாக உயர்த்தப்படுமென்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் அது இன்னமும் இடம்பெறவில்லை. குறிப்பிட்ட குழுவினை ஆணைக்குழுவாக மாற்றுவதற்கான சட்ட வரைபானது அமைச்சிற்கும் சட்டவரைஞர் திணைக்களத்திற்கும் இடையில் 10 ஆண்டுகளாக அங்கும் இங்கும் செல்வதாக Cat's Eye அறிந்து கொள்கின்றது. தற்போதுள்ள அதிகாரங்களுடன் பார்க்கும் போது கூட பால்நிலை பாரபட்சம் தொடர்பான விடயங்களை எடுத்துக் கொள்வதற்கான மற்றும் அதற்கு சாதகம் நிறைந்த துடிப்புநிலை இல்லாமல் இருப்பதுவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

## கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

பெண்கள் விவகார அமைச்சின் புதிய அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய முன்னுரிமைப் பிரச்சினைகள் எவை எனப் பார்க்கும் போது 2010 மற்றும் 2014 இற்கான தேசிய செயற்திட்டம் ஒன்றினைப் பெண்கள் நிறுவனங்களுடன் கலந்தாலோசிப்பதோடு, அமைச்சால் வரையப்பட்ட வரைபானது இறுதிப்படுத்தப்படுவதற்காக இன்னும் காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தச் செயற்திட்டமானது தற்போதுள்ள சட்டங்கள், கொள்கைகள், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம், சுகாதாரம், பொருளாதாரம், வன்முறை மற்றும் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட பெண்கள் போன்றவாறான கருப்பொருட்களை உள்ளடக்கியதான, தற்போதுள்ள சட்டங்கள் கொள்கைகளை அமுல்படுத்துவது மற்றும் கொள்கை மறுசீரமைப்பிற்கான, வழிவகைகளுக்கான செயற்திட்டத்தை வழங்குகின்றது. வீட்டு வன்முறைச் சட்டத்தினை ஆதரிக்கும் செயற்திட்டமானது 2005 ஆம் ஆண்டில் இருந்து கொள்கையளவில் இருந்தாலும் அதனை அமுல்ப்படுத்தப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த வருடங்கள் முழுவதும் வரையப்பட்ட மனித உரிமைகள் செயற்திட்டமானது பெண்கள் உரிமைகள் மீதான அனைத்தும் அடங்கிய பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது. தற்போதைய அமைச்சரவையில் மனித உரிமைகள் விடயத்துடன் ஈடுபடுகின்ற அமைச்சானது இல்லாத நிலையிலே, மனித உரிமைகள் செயற்திட்டத்தில் பெண்கள் உரிமைகள் பிரிவானது ஆகக் குறைந்தது பெண்கள் வலுவூட்டல் அமைச்சினாலாவது எடுத்துக் கொள்ளப்படுமென நம்பலாம்.

### பெண்களை அரசியல் ரீதியாக வலுவூட்டல்

பிராந்திய அடிப்படையில் பார்க்கும் போது இலங்கையிலேயே பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் உள்ளமை கண்கூடு. அண்மையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகளால் பெண் வேட்பாளர்கள் மிகவும் குறைவாகவே நிறுத்தப்பட்டார்கள். அவர்களால் கொடுக்கப்பட்ட மொத்த நியமனங்களில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் 6 வீதத்தைக் கூட விஞ்சிவிடவில்லை. ஒவ்வொரு கட்சிகளாலும் வழங்கப்பட்ட 262 மொத்த நியமனங்களிலே ஐ.ம.சு.மு மற்றும் ஐ.தே.க ஒவ்வொன்றும் 15 பெண்களை நியமித்ததுடன், ச.தே.மு 9 நியமனங்களைக் கொடுத்தது. த.தே.கூ ஆனது பெண் ஒருவரையும் நியமிக்கவில்லை. ஆகவே 2010 ஆம் ஆண்டு பெண்களின் பிரதிநிதித்துவமானது கடந்த பாராளுமன்றத்தில் இருந்ததைப் போன்று 5.8 வீதமாகவே இருந்தமை கவனிக்கத்தக்கது. ஒரேயொரு ஆறுதல் என்னவெனில் ஐ.ம.சு.மு ஆனது தமது தேசியப் பட்டியலில் இரண்டு பெண் உறுப்பினர்களையும், ச.தே.மு ஒருவரையும் நியமித்துள்ளது. உள்ளூராட்சி மறுசீரமைப்புகள் நடைபெறவுள்ள இந்தவேளையில் பெண்கள் வலுவூட்டல் அமைச்சானது பெண்களை வலுவூட்டுவதற்கானவற்றை செய்வதும், உள்ளூராட்சி மற்றும் பாராளுமன்ற மட்டத்தில் பெண்களுக்கான ஒதுக்கீடுகளுக்கான பிரசாரத்தை முன்னெடுப்பது முக்கியமானதாகும்.

### கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சினைகள்

தனிப்பட்ட சட்டங்களின் மறுசீரமைப்புகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பல்வேறு குழுக்கள் தொடர்ந்து செயலாற்ற வேண்டுமென்பதுடன், அவைகளின் சிபாரிசுகளும் செயற்படுத்தப்பட வேண்டும். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களில் பெண்கள் எதிர்கொள்ளும் விடயங்கள் மற்றும் பிரச்சினைகள், புலம்பெயர் பெண் தொழிலாளிகள், யுத்தத்தில் கணவனை இழந்த பெண்கள், தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் இன்னும் பலர் புத்திக் கூர்மையானதும், அர்ப்பணிப்புடையதுமான செயற்பாடுகளை வேண்டி நிற்கின்றார்கள். அத்தோடு வீட்டு வன்முறைச் சட்டத்தின் சிறந்த அமுல்ப்படுத்துகையானது சிறந்த செயற்படுத்துகையை அங்கீகரிக்கும் செயற்திட்டமானது பெண்களின் சேவைகளுக்கான சட்ட உதவி, ஆலோசனை, புகலிட வசதிகள் உட்பட வள ஒதுக்கீடுகளையும் வேண்டி நிற்கின்றது.

### பெண் ஒருவர் பெண்கள் விவகார அமைச்சராக இருப்பதன் முக்கியத்துவம்

சனத்தொகையில் 52 வீதப் பெண்கள் முக்கியமான ஒர் வாக்கு வங்கியை உருவாக்குகின்றார்கள். பிராந்தியங்களின் வேறுபட்ட பிரச்சினைகளுடன் நாடு முழுவதுவும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றார்கள். (பால்நிலை விசேடித்த தேவைகளுடனும்) ஆகவே இவ்வமைச்சானது தேசிய அளவில் வியாபித்ததாக உள்ளது. பெண்கள் வலுவூட்டலின் வெற்றிகரமான அமைச்சரானவர் பெண்களின் தேவைகளைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்பவராக இருப்பாரேயாயின் குறிப்பிட்ட நபர் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ யாராக இருப்பினும் அவர் தேசியமட்டத் தலைவராகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக நியமிக்கப்பட்ட பெண்கள் விவகார ஆண் அமைச்சரானவர் தம்மைத் தாமே பால்நிலைக் கூருணர்வுள்ளவராகவும், உண்மை மாற்றத்திற்கு அர்ப்பணிப்புச் செய்பவராகவும், தன்னைத்தானே நிரூபித்துக் கொள்வது போன்றன அவரைப் பொறுத்தது. அமைச்சு, தேசிய பெண்கள் சபை மற்றும் பெண்கள் பணியகம் என்பன மீளமைக்கப்பட வேண்டும் மற்றும் முக்கியமானதொன்றை சாதிக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். தனிப்பட்ட சட்டங்கள் 21 ஆம் நூற்றாண்டிற்குத் தேவையானவைகளுடன் ஒத்துப்போகக்கூடிய தன்மையுடன் திருத்தப்பட வேண்டும். பால்நிலை மற்றும் பொருளாதார பிரதான நீரோட்டத்திற்குள் நுழைவதற்கு வசதிப்படுத்தும் முகமாக இடைநிலைக்கால கடன் ஊடாக பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இதனை நோக்கிப் பெண்கள் தொழில் முயற்சியாளர்களாகவும், முகாமையாளர்களாகவும், தொழில்நுட்பவியலாளர்களாகவும் செயற்படுவதற்கான திறன் தேவைப்படுகின்றது. மிகவும் முக்கியமாக அமைச்சானது பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பாதுகாப்பான போக்குவரத்து, பாதுகாப்பான வீடு மற்றும் சட்ட விழிப்புணர்ச்சி, சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற ஏனைய உரிமைகளை வழங்குவதன் மூலம் அதனுடைய இயந்திரத்தினூடாக வலுவூட்டுவதற்குமான நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

பால்நிலை மனச்சாட்சி உள்ள ஓர் பெண் பயனற்ற அமைச்சராக இருப்பதை விட, பால்நிலை மனச்சாட்சியுள்ள ஓர் ஆண் அமைச்சராக இருப்பது சிறந்தது என்பதே எமது இறுதி முடிவாகும். ஆகவே எமது புதிய அமைச்சர் திரு. கரலியத்த அவர்கள் தமது பணியைக் கூருணர்வுடன் மேற்கொண்டு பெண்களுக்கான துணிகரமான கொள்கைகளை அமுல்படுத்தி, பாரம்பரியத்தை முறியடிப்பவராகவும், அத்தோடு திரு. ஹிஸ்புல்லா அவர்கள் தமிழ் மற்றும் முஸ்லிம்களது தனிப்பட்ட சட்டங்களிலும் மாற்றங்களைச் செய்வதில் முன்னோடியாகவும் இருக்க முடியும். ■

http://catseyesrilanka.wordpress.com/

● ● ●




கொழும்பு நீதிமன்றத்திற்கு முதன் முதலாகப் பிரவேசித்த பெண் வழக்கறிஞரான அவாபாய் மேத்தா. (இக்கேலிச்சித்திரம் 1933 ஐப்பசியில் சிலோன் சட்ட மாணவர்கள் சஞ்சிகையில் வெளிவந்தது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய பெண்களின் அரசியல் நிலை

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் **தங்கேஸ்வரி**யுடனான நேர்காணல்

பெண்கள் பல துறைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டாலும் அரசியலை மட்டும் தங்களுக்கு வேண்டாம் என ஒதுக்கி விடுகின்றனர். அண்மையில் நடாத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி உலகளாவிய ரீதியில் 18.4 சதவீத பெண்கள் மட்டுமே அரசியல் வாழ்க்கையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். இலங்கையின் சனத்தொகையில் 52 வீதமானோர் பெண்களாவர். 1931ஆம் ஆண்டிலேயே பெண்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றனர். தென்கிழக்காசிய நாடுகளை வரிசைப்படுத்தினால் இலங்கைப் பாராளுமன்றமே மிகக் குறைவான வீதத்தில் பெண்களைக் கொண்டிருக்கின்றது. 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 13 பேர் மட்டுமே பெண்களாவர். அந்த வகையில் அரசியலில் ஈடுபாடு கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி. தங்கேஸ்வரி கதிராமன் அவர்கள் குறித்தும் அவரது கருத்துகள் குறித்தும் நோக்குவோம்.

செல்வி. தங்கேஸ்வரி அவர்கள் படுவான்கரையைச் சேர்ந்த கன்னன்குடா என்னும் கிராமத்தில் 26.2.1952 இல் பிறந்தார். அவர் கதிராமன் திருமஞ்சனம் ஆகியோரது மகளாவார். இவரது குடும்பம் ஓர் விவசாயக் குடும்பமாகும். தங்கேஸ்வரியின் தந்தையார் கிராமத்தில் தலைமைத்துவப் பதவியை வகித்ததோடு ஊர் மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முன்னின்று செயற்படுபவராகவும் விளங்கினார். தங்கேஸ்வரி அவர்கள் ஆரம்பக்கல்வியைத் தனது கிராமத்துப் பாடசாலையான கன்னன்குடா மகாவித்தியாலயத்தில் கற்றதோடு உயர் கல்வியை மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் பாடசாலையில் கற்று, பட்டப்படிப்பிற்காக களனி பல்கலைக்கழத்திற்கு சென்றார். அங்கு தொல்பொருளியலில் சிறப்புப் பட்டம் பெற்றார். மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து பட்டம் பெற்ற முதலாவது பெண் பட்டதாரியாகவும் இவரே திகழ்ந்தார். இதன் பின்பு இந்து கலாசாரத் திணைக்களத்தில் மட்டக்களப்பு மாவட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார உத்தியோகத்தராகப் பதவியேற்றார். இந்தத் தொழிலில் இருந்து கொண்டு அறநெறிப் பாடசாலைகள், ஆலய விடயங்கள், பூசகர்களுக்கான கருத்தரங்குகள், கிராமியக் கலைவிழா, கலாசார நடவடிக்கைகள் முதலிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். அத்தோடு வரலாற்று ஆய்வுத் துறையில் ஈடுபாடு கொண்டு பல ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதினார். இவர் வெளியிட்ட நூல்களாக விபுலானந்தர் தொல்லியல் ஆய்வு, குளக்கோட்டன் தரிசனம், மட்டக்களப்பு நிலவளம், கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு, கிழக்கிலங்கையின் வழிபாட்டுப் பாரம்பரியங்கள் ஆகிய நூல்கள் காணப்படுகின்றன.

செல்வி தங்கேஸ்வரி அவர்கள் அரசியலில் பிரவேசித்த சூழ்நிலை பற்றிக் கூறும்போது, "நான் அரசியலில் ஈடுபடுவேன் என்று எண்ணியிருக்கவில்லை. எனக்குத் தெரியாமலேயே எனது பெயர் மட்டக்களப்பு வேட்பாளராகச் சிபாரிசு செய்யப்பட்டது. எனக்கு நெருக்கமானவர்களுடன் கலந்தாலோசித்தபோது, ஏற்கனவே நான் ஆற்றிவந்த சமூகப் பணிகளை இன்னும் விரிவான முறையில் ஆற்றுவதற்குப் பாராளுமன்ற உறுப்பினர் பதவி உதவும் எனத் தெரிவித்தனர். எனவே தேர்தலில் இறங்கினேன். பாராளுமன்ற உறுப்பினரானதும் விரிவான முறையில் சமூகப்பணிகளை ஆற்ற முடிந்தது" எனக் கூறினார்.

தங்கேஸ்வரி அவர்கள் 2004 ஆம் ஆண்டு மாசி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு அதிலே அதிகப்படியான வாக்குகளைப் பெற்று 2004 முதல் 03.01.2010 வரை ஆறு வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து காத்திரமான பணிகள் ஆற்றியுள்ளார். கல்லடி இரட்டைப் பாலம், கிழக்குப்பல்கலைக்கழக சித்த வைத்திய பீடம், 2004 மார்கழி சுனாமியால் ஏற்பட்ட ஏகப்பட்ட பாதிப்புகளை நிவர்த்தி செய்தல் முதலிய பல பணிகளை செய்துள்ளார். அத்தோடு, அவ்வப்போது மக்கள் முன்வைக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் தீர்த்துள்ளதோடு சென்ற காலங்களில் கடத்தப்பட்டோர், பிடிபட்டோரை மீட்பதில் அக்கறையுடன் செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அரசியலில் பெண்களின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது எனக் கேட்டபோது "தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இந்தியா போன்ற ஏனைய நாடுகளுடன் பார்க்கும் போது எமது நாட்டில் அரசியலில் பெண்களின் பங்களிப்பு இன்னும் அதிகரிக்க வேண்டும். கடந்த காலங்களில் மிகச் சில பெண்களே அரசியலில் இருந்துள்ளனர். அதிலும் பெரும்பாலானோர் ஏற்கனவே

**தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இந்தியா போன்ற ஏனைய நாடுகளுடன் பார்க்கும் போது எமது நாட்டில் அரசியலில் பெண்களின் பங்களிப்பு இன்னும் அதிகரிக்க வேண்டும். கடந்த காலங்களில் மிகச் சில பெண்களே அரசியலில் இருந்துள்ளனர்.**

அரசியலில் பதவியில் இருந்த கணவன் கொல்லப்பட்டமை அல்லது தந்தை வழியில் இருந்து வந்த அரசியல் பலம் காரணமாகவே பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளனர். இந்த நிலையே அதிகமாக இருந்துள்ளது. ஆனால் இன்று அந்நிலை மாறிக்கொண்டு வருகின்றது. பெண்கள் துணிந்து அரசியலில் போட்டியிட வருகின்றனர். என்னைப் பொறுத்த வரையில் பாராளுமன்றத்தில் இருக்கும் காலங்களில் பெண்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் வேண்டும் என நான், திருமதி பேரியல் அஷ்ரப் போன்றோர் பல கோரிக்கைகளை முன்வைத்தோம்.

கண்டியிலே இயங்குகின்ற AWAW Association of War Affected Women என்ற NGO பெண்களது அரசியல் சம்பந்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளை முன்னெடுக்கின்றது. அந்த அமைப்பிலே நிர்வாக உறுப்பினராக நானும் பிரதிநிதித்துவம் வகிக்கின்றேன். அதில் மாவட்டம் தோறும் அமைப்பாளர்களை வைத்து 1325 மூலம் பெண்களுக்கு பிரதேச, நகர, மாநகர சபையிலும் பாராளுமன்றத்திலும் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பதற்கான பல யோசனைகளை முன்வைத்துள்ளோம். கோட்டா முறையிலும் பெண்களை உட்படுத்த பல இடங்களிலும் வேண்டுகோளை விடுத்திருக்கின்றோம். இந்த AWAW அமைப்பின் மூலம் தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் போன்ற பல நாடுகளுக்கும் சென்று அங்கு பெண்களின் அரசியல் Power Sharing பற்றி வலியுறுத்தி வருகிறோம். சென்ற மாதம் இதன் தலைவி திருமதி. விசாக்கா தர்மதாச U.N அமைப்பினால் அழைக்கப்பட்டு அங்கு பெண்கள் பிரதிநிதித்துவம் பற்றி வலியுறுத்தியும் வந்துள்ளார். 1325 என்பது ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் சமாதானம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான யோசனையாகும். இது 2000 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ஆம் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினூடாக யுத்த சூழலில் உள்ள பெண்களின் பாதுகாப்பை அதிகரிப்பது, ஐக்கிய நாடுகள் சபையின் பொறிமுறைக்கு உட்பட்ட சகல மட்டங்களிலும் முடிவெடுக்கும் சந்தர்ப்பங்களில் பெண்களை பங்குபற்றச் செய்வதற்கான சட்ட பூர்வமான விருப்பம்.
- சமாதானப் படைகளைப் பயிற்றுவிக்கும் போது பெண்களின் விசேட தேவைகள் தொடர்பான விடயங்களுக்கு மதிப்பளித்தல்.
- பெண்களைப் பாதுகாத்தல்.
- ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை சமர்ப்பிப்பதில், வேலைத்திட்டம் நடை முறைப்படுத்தும் வியூகங்களில் பெண்களின் பங்குபற்றலை உறுதி செய்தல்

மேற்கூறிய நான்கு விடயங்களையும் உள்ளடக்கியதாகத் தீர்மானம் மேற்கொள்ளும் மட்டங்களில் பெண்களின் அங்கத்துவத்தை அதிகரிக்கச் செய்வதோடு, அரசாங்கங்களினால் ஐக்கிய நாடுகளில் உயர் பதவிக்கு தகுதி வாய்ந்த பெண்ணின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல், சமாதான செயன்முறையின் போது பெண்கள் குழுக்களின் கருத்துகளை கேட்டறிதலுடன் அவர்களை உள்வாங்கல், பெண்கள் உரிமைகளை உள்வாங்கும் முகமாக அதோடு சேர்ந்ததாக பெண்கள் உரிமையைப் பாதுகாப்பதற்கு பல சட்ட திட்டங்களைப் பல்வேறு தடவைகளில் கொண்டு வந்து பெண்களுக்கான சமத்துவமான முறையிலே செயற்படல் போன்றவையாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் எல்லா இடங்களிலும் பெண் பிரதிநிதிகள் மூலம் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றோம்.

இன்றைய சூழ்நிலையில் பெண்களின் நிலை குறித்துக் கூறியபோது, "இன்று பெண்கள் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். சிங்களப் பெண்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள். முஸ்லிம் பெண்களைப் பொறுத்த வரை திருமதி. பேரியல் அஷ்ரப் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர். இவரது நடவடிக்கைகளினால் முஸ்லிம்கள் பெரும் நன்மை பெற்றுள்ளனர். ஆண் பாராளுமன்ற உறுப்பினர்கள் அகால மரணம் அடைந்ததும் அவர்களது மனைவிமார் அரசியலில் இறங்குவதை நாம் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. எனினும் பெண்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஆகாமலேயே அரசியலில் பங்களிப்புச் செய்யலாம்."

தற்போது செல்வி தங்கேஸ்வரி தற்போது பாராளுமன்ற உறுப்பினராக இல்லாவிடினும், மக்களுக்கான சமூக, சமயப்பணிகளை ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது.■

நேர்காணல்

**ஏகாம்பரம் லோகமலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் பெண்களுக்கான சமவாய்ப்பின் அவசியம்



**கடந்த தசாப்தங்களில் இலங்கையில் பெண்களின் நிலையானது பல துறைகளில் முன்னேற்றமடைந்துள்ள போதும் சட்டவாக்கம் மற்றும் தீர்மானமெடுக்கும் நடவடிக்கைகளில் பெண்களின் பிரதிநிதித்துவமானது குறைந்தே காணப்படுகின்றது. எவ்வாறாயினும் இலங்கையின் சமத்துவம், அபிவிருத்தி மற்றும் சமாதானத்திற்குப் பெண்களின் முழுப்பங்களிப்பும், பிரதிநிதித்துவமும் அடிப்படையானதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

பல்வேறு துறைகளில் பெண்கள் முன்னேறியிருக்கும் இன்றைய காலத்தில் மிகமுக்கியமான துறையான அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. பால்நிலை அடிப்படையிலான தொழிற்பிரிப்பில் பெண்களின் பங்களிப்பானது அளப்பரியதாக இருந்தாலும் அவை பெறுமதியுடையவையாகக் கருதப்படுவதில்லை: அல்லது கருதப்படுவது குறைவு என்றே கூறவேண்டும். சமூகத் தொழிலில் பெண்களின் பங்களிப்பானது வெறுமனே அவர்களின் பாத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் பெண்கள் குழுக்களில் உறுப்பினர்களாக வருவதுடன் மாத்திரம் நின்றுவிடுவதினைக் காண்கின்றோம்.

பெண்கள் அரசியலில் பிரவேசிப்பதற்குப் பல தடைகள் இருக்கின்றன. அதாவது பெண்களுக்கு தலைமைதாங்கும் திறன் இல்லை, தீர்மானம் எடுக்கும் திறன் இல்லை என்னும் தவறான கருத்துகள் மற்றும் அரசியலில் பங்குபற்றுவதற்கு அவர்களது குடும்பத்தில் கிடைக்கும் ஆதரவின்மை, ஆண்களுக்கே அரசியல் உரியது எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் காலமாகக் கருதப்பட்டுவரும் மனநிலை போன்றன பெண்கள் அரசியலில் பிரவேசிப்பதற்குத் தடையாக உள்ள காரணிகளில் சிலவாகும்.

கடந்த தசாப்தங்களில் இலங்கையில் பெண்களின் நிலையானது பல துறைகளில் முன்னேற்றமடைந்துள்ள போதும் சட்டவாக்கம் மற்றும் தீர்மானமெடுக்கும் நடவடிக்கைகளில் பெண்களின் பிரதிநிதித்துவமானது குறைந்தே காணப்படுகின்றது. எவ்வாறாயினும் இலங்கையின் சமத்துவம், அபிவிருத்தி மற்றும் சமாதானத்திற்குப் பெண்களின் முழுப்பங்களிப்பும், பிரதிநிதித்துவமும் அடிப்படையானதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் அரசியலமைப்பின் உறுப்புரை 12(2) ஆனது பால்ரீதியான வேறுபாடு காட்டப்படலாகாது எனக்கூறுகின்றது. மேலும் பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை இல்லாதொழிப்பதற்கான சமவாயத்தின் (CEDAW) உறுப்புரை 07 இன் படி பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கெதிரான பாரபட்சங்களை இல்லாதொழிப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறுகின்றது.

நாட்டின் சனத்தொகையில் 50.82 வீதமாகப் பெண்களே காணப்படுகின்றனர். ஆனால் அரசியலில் அவர்களின் பங்களிப்பு 5 வீதத்திற்கும் குறைவாகவுள்ளது. அதாவது உள்ளூர் மட்டத்தில் 1.7 வீதமும், மாகாணமட்டத்தில் 2.9 வீதமும் தேசிய மட்டத்தில் 4.9 வீதமுமாகவுள்ளது. இலங்கை அரசாங்கம் 1997 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மட்டத்தில் பெண்களுக்கு 25 வீதம் ஒதுக்கப்பட வேண்டும் என்கின்ற அரசியலமைப்பு சீர்திருத்தத்தை முன்வைத்தது. ஆனால் 2000 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் இது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதற்கு இலங்கை அரசு "போதுமான பெண் வேட்பாளர்களைக் கண்டுபிடிக்க முடியாதுள்ளதாக, தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் கருதுகின்றன" என்று ஓர் காரணத்தை முன்வைத்தது.

உலகின் முதல் பெண் பிரதமரையும் இலங்கையின் முதல் பெண் ஜனாதிபதியையும் கொண்டுள்ள நாடு இலங்கையாகும். அதேபோல தெற்காசியாவிலேயே எழுத்தறிவு வீதத்தில் இரண்டாவது இடத்தில் உள்ள நாடு எமது நாடாகும். ஆனால் கல்வியும் உயர்மட்ட அரசியல் பங்களிப்பும் உள்ளூர் மட்டத்தில் பிரதிபலிக்கவில்லை. உள்ளூர் மட்டத்தில் 1.7 வீதமான பெண் அங்கத்தவர்களே காணப்படுகின்றனர். இது ஏனைய தெற்காசிய நாடுகளைவிடவும் குறைந்த மட்டத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கு அரசியலில் போட்டியிட ஒதுக்கீட்டை (quota) வழங்குவதன் மூலம் அவர்களை அரசியலில் பிரதிநிதித்துவப்படுத்த முடியும். இம்முறையானது ஐரோப்பா மட்டுமன்றி ஆபிரிக்கா, ஆசியா மற்றும் இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் காணப்படுகின்றது. முப்பத்து மூன்று வீதமான ஆசனங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என 1993 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தோடு, பஞ்சாயத்து (கிராம) மட்டத்திலும் பெண்களின் பிரதிநிதித்துவம் இந்தியாவில் உயர்ந்துள்ளது.

ஏனைய நாடுகளும் பெண்கள் அமைப்புகளும் தேர்தலில் பெண்களுக்கான ஒதுக்கீட்டு முறையினை அமுல்ப்படுத்துவதன் மூலம் அரசியலில் பெண்களுடைய பங்களிப்பை அதிகரிக்க முடியும் என நம்புகின்றனர். எனவே எமது நாட்டிலும் தற்போதுள்ள தேர்தல் முறைகளிலும் தேர்தல் சட்டங்களிலும் மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் பெண்களுக்கு அரசியலில் போட்டியிடுவதற்கான சமவாய்ப்பை வழங்க முடியும். ■

**கிஷாந்தினி பாலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

உலகின் முதற்பெண் பிரதமரையும், ஜனாதிபதியையும் உருவாக்கிய பெருமை இலங்கைக்கு உரித்தானதாகும். இலங்கைப் பெண்கள் எழுத்தறிவு வீதம், வாழ்க்கை எதிர்பார்ப்புக்காலம் மற்றும் ஆரோக்கியம் தொடர்பாக அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு இணையாக உள்ளனர். அதுமட்டுமல்லாது இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் பெண்களே இருப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது இலங்கையின் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய துறைகளான தேயிலை, ஆடைக் கைத்தொழில், வெளிநாட்டு வேலையினாலான வருமானம் என்பவற்றில் பெண்களின் பங்களிப்புக் குறிப்பிடக்கூடிய வீதமாகக் காணப்படுகின்றது.

இலங்கைப் பெண்களின் எழுத்தறிவு வீதமானது 90 இற்கும் மேலாக உள்ளது. எனினும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் என்பது மிகவும் குறைந்த நிலையிலேயே உள்ளது. அதாவது அரசியலில் அவர்களது பங்களிப்பானது அரசியல்க் கூட்டங்களில் பங்குபற்றல், வாக்களித்தல் என்ற வரையறைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. இலங்கை அரசியலில் ஈடுபடும் பெரும்பாலான பெண்கள் தமது குடும்பத்தில் ஏற்கனவே இருந்த அல்லது இருக்கின்ற ஆண் அரசியல்வாதிகளின் குடும்பப் பின்னணியில் இருந்து உருவாகும் ஓர் அரசியல் கலாசாரத்தின் வழியாகவே அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெறுகின்றனர். அதாவது அரசியல்வாதி ஒருவரின் மகள் அல்லது மனைவி அல்லது சகோதரி என்ற குடும்பப் பின்புலம் பெண்கள் அரசியலில் ஊடுருவுவதற்கான அடித்தளமாக இருக்கின்றது. ஏன் பெண்கள் அரசியலில் ஈடுபடல் வேண்டும்?, பெண்கள் விரும்பினால் போட்டியிடலாம்தானே? அவ்வாறு பெண்கள் வந்தாலும் அவர்களால் என்ன செய்ய முடியும்? என்பது போன்ற கேள்விகள் இன்று பலராலும் கேட்கப்படுகின்றன. பெண்கள் அரசியலில் ஈடுபடும் போது பெண் என்ற அனுபவத்தில் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை உணர்வு பூர்வமாக விளங்கி அதனை நீக்கும் முகமாகத் திட்ட வரைபுகள் சட்ட உருவாக்கம் மற்றும் கொள்கை உருவாக்கம் என்பவற்றை ஏற்படுத்த முடியும். இதனால் பெண்களை வலுப்படுத்துதல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல் போன்றவற்றைச் செய்ய ஏதுவாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களின் அரசியல் பங்களிப்புத் தொடர்பான வரலாறு

இலங்கையின் சனத்தொகையில் அரைப் பங்கிற்கு மேலாகப் பெண்கள் இருக்கின்றார்கள். 1931ஆம் ஆண்டு இலங்கைப் பெண்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெற்ற போதிலும் கூட இலங்கையின் ஆட்சியமைப்பின் சகல மட்டங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. குறிப்பாக 78 வருடகால வரலாற்றில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் 6 வீதத்திலிருந்து அதிகரிக்காமையானது மிகவும் வேதனைக்குரியதாக உள்ளது. சகலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்ட முதலாவது தேர்தலாக 1931 ஆனி மாதம் 13 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தல் அமைந்தது. 21 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருந்தது. ஆனால் எந்தவொரு பெண்ணும் தேர்தலில் போட்டியிடவில்லை. அடலின் மொலமுரே என்பவரே 1931 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 ஆம் திகதி சட்ட சபைக்குச் சென்ற முதல் பெண்ணாவார்.

இலங்கையில் 2004 ஆம் ஆண்டு அரசியலில் ஈடுபடும் பெண்களின் பிரதிநிதித்துவமானது 4.8 வீதமாகும். தெற்காசியப் பிராந்தியத்திலே இதுவே மிகவும் குறைந்த வீதமாகும். இந்திய லேக்சபாவில் 33 வீதப் பெண்களும், பாகிஸ்தானியப் பேரவையில் 20 வீதமான பெண்களும், நேபாலின் பிரதிநிதிகள் சபையில் 5.8 வீதமான பெண்களும் பிரதிநிதித்துவம் வகிக்கின்றார்கள். ஆப்கானிஸ்தானினது புதிய அரசியலமைப்பு பெண்களுக்கென 25 வீதமான ஒதுக்கீட்டைக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தும் பிரகடனங்கள்

சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான பிரகடனமானது "எல்லா மக்களும் அரசியலில் பங்குபற்றுவதற்கும், பிரதிநிதிகளை சுதந்திரமாகத் தெரிவு செய்வதற்கும் உரிமை உள்ளது" எனக் கூறுகின்றது.

பெண்களுக்கெதிரான அனைத்துப் பேதங்களையும் ஒழித்தல்சார் உடன்படிக்கையின் உறுப்புரிமை 07 பெண்களின் அரசியல் உரிமையானது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது எனக் கூறுகின்றது. அவையாவன வாக்களிக்கும் உரிமை, அரசினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கொள்கை உருவாக்கலும், அரச சார்பற்ற நிறுவனங்களினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் என்பனவாகும்.

## இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பான சில தரவுகள்

அட்டவணை 1

பெண்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம்

| ஆண்டு | மொத்தம் | பெண்களின் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 1994 | 225 | 11 | 4.8 |
| 2000 | 225 | 9 | 4.0 |
| 2001 | 225 | 10 | 4.4 |
| 2004 | 225 | 11 | 4.8 |
| 2005 | 225 | 13 | 5.6 |

ஆதாரம்: Tressie Leitan, ' Women in political participation and decision Making' In Center for Women's Research, Post Beijing Reflection: Women in Sri Lanka

அட்டவணை 2

பெண்களின் மாகாணமட்டத்திலான தேர்தல் பிரதிநிதித்துவம்

| ஆண்டு | மொத்தம் | பெண்களின் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 1993 | 382 | 12 | 3.1 |
| 1999 | 378 | 13 | 3.2 |
| 2004 | 380 | 16 | 4.2 |

ஆதாரம்: Tressie Leitan, ' Women in political participation and decision Making' In Center for Women's Research, Post Beijing Reflection: Women in Sri Lanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 3

**பெண்களின் உள்ளூராட்சி மட்டத்திலான தேர்தல் பிரதிநிதித்துவம்**

| ஆண்டு | மொத்தம் | பெண்களின் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 1991 | 3122 | 54 | 1.72 |
| 1997 | 3797 | 73 | 1.92 |
| 2002 | 3902 | 77 | 1.99 |

ஆதாரம் - Tressie Leitan, ' Women in political participation and decision Making' In Center for Women's Research, Post Beijing Reflection: Women in Sri Lanka

இலங்கையில் பல்வேறுபட்ட அரசியல் நிலைகளிலும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவமானது மிகவும் குறைந்த நிலையிலேயே உள்ளது. எனினும் தேசிய மற்றும் மாகாண சட்டமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்துடன் ஒப்பிடும் போது உள்ளூராட்சியில் பெண்களின் பிரதிநிதித்துவம் இன்னும் மோசம் அடைந்துள்ளமை துரதிஸ்டமானதாகும்.

அட்டவணை 4

**இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் பாராளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவம்**

| ஆண்டு | பெண்களின் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 1947 | 3 | 3.15 |
| 1960 | 2 | 1.3 |
| 1970 | 6 | 3.9 |
| 2000 | 9 | 4.0 |

ஆதாரம்: Tressie Leitan, ' Women in political participation and decision Making' In Center for Women's Research, Post Beijing Reflection: Women in Sri Lanka

அட்டவணை 5

**தெற்காசிய நாடுகளில் பெண்களின் உள்ளூர் அரசியல் பிரதிநிதித்துவம்**

| நாடு | பெண்கள் பிரதிநிதித்துவம் |
|---|---|
| இந்தியா | 33.33 |
| பாகிஸ்தான் | 30.12 |
| பங்களாதேஷ் | 23.31 |
| நேபாளம் | 8.5 |
| இலங்கை | 1.97 |

ஆதாரம்: Tressie Leitan, ' Women in political participation and decision Making' In Center for Women's Research, Post Beijing Reflection: Women in Sri Lanka

இலங்கையில் மொத்த சனத்தொகையில் 52 வீதத்தினர் பெண்களாவார் ஆனால் 5 வீதத்திற்கும் குறைவாகவே பெண்களது அரசியல் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது. அத்துடன் தெற்காசிய நாடுகளிடையே இலங்கைப் பெண்களது அரசியல் பிரதிநிதித்துவமானது மிகவும் குறைந்த வீதமாகவே உள்ளமை கவனிக்கத்தக்கது.

## பெண்கள் அரசியலில் ஈடுபடாமைக்கான காரணங்கள்

- அரசியல் வன்முறைக் கலாசாரம் தொடர்பான கசப்பான வரலாறுகள்
- அரசியல் ஊழல்கள்
- அரசியல் ஆண்களுக்குரியது என்ற சமூக மனப்பாங்கு
- குடும்ப அங்கத்தவர்கள் விரும்பாமை அதாவது பெண்களுக்கு அரசியல் தேவையற்ற விடயம் என்ற எண்ணப்பாங்கு
- அரசியலில் ஈடுபடும் பெண்கள் தொடர்பான சமூகத்தின் தவறான பார்வை
- அரசியல் கட்சிகளின் பெயர்ப்பட்டியலில் பெண்களின் பெயரை இணைப்பதற்கு கடுமையான போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளமை
- பெண்கள் அரசியலில் ஊடுருவுவதற்கு அவர் ஏற்கனவே அரசியலில் ஈடுபாடுடைய குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்ற அரசியல் கலாசாரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- போதிய நிதிவசதி இன்மை
- ஆணாதிக்க சமூகத்தின் எதிர்பார்ப்பின்படி பெண்களின் தளம் வீடும் வீடுசார்ந்த சூழல் மட்டுமே என்ற மனப்பாங்கு
- வீட்டு வேலை மற்றும் வெளிவேலை என பெண்கள் பன்மைச் சுமையினை தனியே சுமக்க வேண்டியுள்ளமை.

**பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பதாயின் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

**சமூகம்**

- சமூகம் பெண்களுக்கு வாக்களிப்பதற்குத் தயாராக இருத்தல்
- அரசியலில் ஈடுபடும் பெண் வேட்பாளர்களின் தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பாக கதைப்பதைத் தவிர்த்தல்
- பெண் அடிமைத்தனத்தை ஒழித்தல்
- அரசியலில் பெண்களின் கருத்துரைக்கு மதிப்பளித்தல்
- பால்நிலை தொடாபான கூருணர்வினை அனைவருக்கும் குறிப்பாக அரசியலில் உள்ள ஆண்களுக்கு ஏற்படுத்துதல்
- பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியினை சிறுவயதில் இருந்தே வழங்குதல்

**அரசியல் கட்சிகள்**

- பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு விசேடமாக இடம் ஒதுக்க வேண்டும்
- பெண்கள் அரசியலில் ஈடுபடும் போது பெண்களின் பெரும்பாலான பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளல்
- அரசியல் கட்சிகள் மக்களது தேவைகளை எப்போதும் பூர்த்தி செய்பவர்களாக இருக்க வேண்டும். விசேடமாகத் தேர்தல் காலத்தில் மட்டுமல்லாது ஏனைய காலப்பகுதிகளிலும் மக்களின் பிரச்சினைகளை நீக்க உதவ வேண்டும்.
- ஏற்கனவே அரசியலில் ஈடுபடும் பெண்கள் புதிதாகப் பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- தமது வேட்பாளர் பட்டியலில் பெண்களை இணைத்துக் கொள்வதற்கான கோட்டா முறையினை உள்ளடக்கல் வேண்டும்.

**பெண்கள்**

- குடும்ப மற்றும் சமூக சவால்களை ஆரோக்கியமான முறையில் சாத்தியமாக்கல்
- பெண்கள் ஒன்று திரண்டு பெண்களுக்கான தனியிடம் அமைத்துக் கொள்ள முன்வர வேண்டும்
- குடும்ப அங்கத்தவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்
- குடும்பத்தில் உள்ள அனைவரும் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளல்
- பெண்களினது முன்னேற்றத்திற்கு தடையாக இல்லாது ஆதரவு அளித்தல்
- அரசியலில் பெண்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளல்
- பெண்களுக்கு வாக்களிப்பதற்கு பெண்களே முன்வருதல்

**பெண்கள் குழுக்கள்**

- சமூகத்தில் பல தரப்பினரிடையும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு நிதிவசதியை வலுப்படுத்தல்
- பெண்களின் மனப்பாங்கில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தல்
- பெண்கள் குழுக்கள் பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கான வழிகாட்டல்களை வழங்கல்
- பெண் வேட்பாளர்களுக்குத் தகுந்த பயிற்சிகளையும் ஏனைய ஆதரவுகளையும் அளித்தல்
- நாடாளுமன்றத்திலும் உள்ளூராட்சி யிலும் பெண்கள் கூடிய செயற்திறனுடன் இயங்குவதற்கான ஆய்வுகளையும் உதவிச் சேவைகளையும் வழங்கல்

**சட்டங்கள்**

- அரசியலில் குறைந்த பட்சம் 30 வீதமாவது பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு கோட்டா முறையினைக் கொண்டு வருதல்
- உள்ளூராட்சித் தேர்தலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோருக்கான ஒதுக்கீடு 40 வீதமாக உள்ளது. இதில் பெண்களுக்கு 20 வீத ஒதுக்கீடு செய்தல் வேண்டும்

- பாடசாலை பாடவிதானங்களில் பால்நிலை தொடர்பான அலகுகள் உள்வாங்கப்படுவதுடன் பெண்கள் தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் பங்குகொள்ள வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தல் வேண்டும்.

## முடிவுரை

பிரித்தானியாவின் காலனித்துவக் காலத்தில் இலங்கை இருந்த போதும் 1928ஆம் ஆண்டு பிரித்தானியா பெண்களுக்கான வாக்குரிமையை வழங்கியது. எனினும் இலங்கையில் பெண்களுக்கான வாக்குரிமையானது 1931 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அக்காலப் பகுதியில் பல ஐரோப்பிய நாடுகள் வாக்குரிமையைப் பெறாதநிலையிலே இருந்தபோது, இலங்கைப் பெண்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். அத்துடன் 1948 ஆம் ஆண்டு பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் 3.25 வீதமாக இருந்தது. எனினும் 2010 ஆம் ஆண்டு இது 5 வீதத்தைக் கூடத் தாண்டவில்லை என்பது மிகவும் பாதகமான பிரதிநிதித்துவத்தைக் காட்டுகின்றது. இலங்கை சுதந்திரம் அடைந்து 60 வருடங்கள் முடிவடைந்த போதும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் எந்தவிதமான மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை என்பது பிரதான பிரச்சினையாகும்.

இந்தியாவின் அரசியலில் 33 வீதமான பெண்களுக்கு கோட்டாமுறை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனால் இன்று இந்திய உள்ளூராட்சி அரசியலில் ஒரு மில்லியன் பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றார்கள். இலங்கையின் சனத்தொகையில் பெண்கள் 52 வீதமாகவும் வாக்காளர்களில் 56 வீதமாகவும் உள்ளனர். தேர்தல் காலங்களில் பெண்களின் வாக்குப்பலம் பெரிதும் உணரப்படுவதோடு, தேர்தலின் வெற்றிக்கு அவர்கள் முக்கிய காரணி என்பதும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பெண்கள் வாக்காளர் என்ற நிலையில் இருந்தாலும் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் என்பது மிகவும் குறைந்த வீதமாகவே காணப்படுகின்றது. எனவே பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவம் முன்னுரிமைப்படுத்தப்படல் வேண்டும். எதிர்காலத்தில் சமூகம், அரசியல் கட்சிகள், பெண்கள், பெண்கள் குழுக்கள், சட்டங்கள் என அனைத்துத்தரப்பினரும் ஒருமித்துச் செயற்படும் போது பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க முடியும். ■

**உதயனி நவரத்தினம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மரியாதை செலுத்தும் விசேட விழா





2010 ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய பதின்மூன்று பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மரியாதை செலுத்துவதற்கான விசேட விழா கடந்த 2010 ஆம் ஆண்டு ஆனி 07 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்தப்பட்டது. இந்த விழாவானது பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இங்கு பதினொரு பெண் பராளுமன்ற உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர். விழாவின் சிறப்பு விருந்தினராக மகளிர் அபிவிருத்தி, சிறுவர் மேம்பாட்டு அமைச்சர் திஸ்ஸ கரலியத்த அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்காக கோட்டா முறையை நடைமுறைப்படுத்துவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












தொடர்பாக உள்நாட்டு, வெளிநாட்டு அனுபவங்களின் வாயிலாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் பீடத்தின் பேராசிரியை திருமதி. கமலா லியனகே அவர்கள் சபையில் விசேட கருத்துகளை முன்வைத்தார். பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பானது மக்கள் பிரதிநிதிகளுக்கு பூங்கொத்துகளையும், ஞாபகச் சின்னங்களையும் கையளித்தது. இலங்கை அரசியலில் பெண்களின் குறைவான பிரதிநிதித்துவம் தொடர்பாக சில தகவல்களை ஏற்பாட்டாளர்கள் முன்வைத்தனர். மகளிர் அபிவிருத்தி, சிறுவர் மேம்பாட்டு அமைச்சர் அவர்களும் தனது கருத்துகளைத் தெரிவித்தார்.■

புகைப்படங்கள் : **ஜயந்தி குருஉதும்பால**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் ஈடுபாட்டிற்கான பெண்களின் ஆர்வம்

இலங்கை அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவம் பற்றிப் பார்க்கும் போது அரசியல்த்துறை பெண்களுக்கு மிகவும் சவால் மிகுந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. பல துறைகளில் பெண்கள் இன்று தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் போதும், அரசியல் பற்றி அல்லது அரசியலில் பெண்களின் பங்களிப்புப் பற்றிப் பார்க்கும் போது மிக மிகக் குறைவான ஒரு நிலையையே காண முடிகின்றது.

இதற்கான காரணங்கள் பற்றிப் பார்த்தால் நாட்டில் நிலவுகின்ற சில அசாதாரண சூழ்நிலைகளாக இதுவரை நடைபெற்ற யுத்தம், ஆயுதக்கலாசாரம், குழுக்களுக்கிடையே அடிக்கடி இடம்பெறுகின்ற தலைமைத்துவப் பிரச்சினைகள், கட்சித் தாவல்கள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட வன்முறைகள் என்பனவும், கட்சியில் இணைந்து செயற்படுகின்ற மாற்றுக் கருத்துக் கொண்டோர்களினால் ஏற்படுகின்ற அழுத்தங்கள், காலம் காலமாக இன்றுவரை பிற்போக்குத்தனமாகப் பெண்களை அடிமைப்படுத்தும் சிந்தனைப் போக்கு, அடிப்படையில் கல்வி கற்றிருந்தும் கல்வியறிவு இல்லாதவர்கள் போல மூடக் கருத்துகளை அடியொற்றிப் பெண்களை முன்னேறவிடாது செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற சமூக, சமயக் கொள்கைகள், பக்கச்சார்பான நடவடிக்கைகள் அதனோடு தொடர்புபட்ட பால்நிலைப் பாரபட்சம் போன்றனவும் இன்னமும் மாறவில்லை. அரசியலில் பணம், ஆணாதிக்கம், வன்முறை என்பன பெறும் முக்கியத்துவம் போன்றவற்றோடு பெண்களுக்கான உரிய பிரதிநிதித்துவம் வழங்காமை மற்றும் அரசியல் தளமானது ஆண்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதாகவும், அத்தோடு ஆண்களுக்கு சார்பான ஒன்றாக மாற்றப்பட்டமை போன்றவை இதற்கான காரணங்களில் சிலவாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் முதன்முதலாகத் தேர்தல் ஒன்றின் அடிப்படையில் மக்களின் ஏகோபித்த விருப்பின் பேரில் வெற்றி பெற்றவர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள். இவர் இலங்கையின் முதல்பெண் பிரதமர் மட்டுமன்றி உலகின் முதல் பெண் பிரதமர் என்ற சிறப்பையும் பெற்றவர். அதேபோலவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, அமைச்சர் பேரியல் அஷ்ரப் போன்றோர் திறமையான அரசியல் ஆளுமை மிக்க பெண்களாவார். இவர்கள் தமது குடும்பத்தின் அரசியல் பின்னணி காரணமாகவே அரசியலில் உள்நுழையக் கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்களைப் போல பணபலம் மற்றும் அரசியல் பின்னணி இல்லாத ஆளுமை மிக்க பெண்கள் அரசியல் ஆர்வம் கொண்டவர்களாக எமது சமூகத்தில் இருக்கின்ற போதிலும் அரசியலில் பெண்களுக்கு எதிரானதாக அமைகின்ற ஆணாதிக்கம், பணபலம் மற்றும் வன்முறை என்பன காரணமாக அரசியல் தளத்தில் பிரவேசிக்க முடியாதுள்ளமை அனைவரும் அறிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, அரசியல் பின்னணியுடன் மிளிர்ந்து அரசியலில் காலடி எடுத்து வைத்து, வெற்றியீட்டிய ஒருசில பெண்களின் அரசியல் வெற்றியை மட்டும் கொண்டு அதனை இலங்கை அரசியலில் பெண்கள் அனைவரும் பெற்ற அரசியல் வெற்றியாகக் கூறமுடியாது. மேற்குறிப்பிட்டவர்களை மட்டுமே அன்று தொடக்கம் இன்றுவரை உதாரணம் காட்டி அரசியல் இலாபம் தேடிப் பிற்போக்குத்தனமாகச் செயற்படுவதை இனியும் அனுமதிக்க முடியாது. எனினும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க. தங்கேஸ்வரி போன்று விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரிருவர் எவ்வித அரசியல் பின்னணியும் இன்றி சாதாரண குடும்பங்களில் இருந்தும், மிகவும் அபிவிருத்தி குறைந்த கிராமங்களில் இருந்தும் தமது முயற்சி மூலமும் கிராமத்தினரின் ஆர்வம் காரணமாகவும் அரசியலில் உட்புகுந்தவர்களாவார். இவர்களின் அரசியல் பிரவேசமானது அரசியலில் பெண்களின் பிரவேசத்தை அதுவும் கிராமங்களில் உள்ள பெண்களின் அரசியல் ஆர்வத்தை எடுத்துக் காட்டுகின்றது.

**பெண்கள் அதிகளவில் அரசியலிற்கு வர வேண்டும் என்பதில் இன்று பல அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் என்பன ஆர்வம் காட்டுகின்றன. பெண்களின் அரசியல் பிரவேசத்தினால் மாற்றம் நிகழும் என நம்பப்படுகின்றது. ஏனெனில் தமது குடும்பத்தோடு அதிகளவில் நேரத்தைச் செலவழிப்பவர்கள் பெண்கள். இதன் காரணத்தால் சமூகத்தின் தேவை பற்றிப் பெண்களுக்கு அதிகமாக விளங்கிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் உண்டு. பெண்களின் அதிகளவான அரசியல் பிரவேசத்தினால் பாலியல் ரீதியாக ஓரங்காட்டப்படுகின்ற அரசியல்ப் போக்கானது இல்லாது போகும்.**

இது தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க. தங்கேஸ்வரி கூறும் போது "நான் மட்டக்களப்பு நகரின் வாவிக்கு மறுபுறம் இருக்கின்ற ஒரு வயல் சார்ந்த கிராமத்தைச் சேர்ந்தனான். எமது பகுதி மிகவும் பின்தங்கிய ஒரு பிரதேசமாக இருந்து தற்போது அபிவிருத்தி அடைந்து வருகின்றது. இது படுவான்கரைப் பிரதேசம் என அழைக்கப்படும். இந்தப் பகுதியில் இருந்து இதுவரை யாரும் பாராளுமன்றத்திற்குச் செல்லவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் நான் அரசியலிற்கு முதலில் நிர்ப்பந்தமாகவே திணிக்கப்பட்டேன். ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்தது. பின்பு பழக்கமாகி விட்டது. கிட்டத்தட்ட 23 வருடங்கள் கலாசார உத்தியோகத்தராகப் பணியாற்றியிருந்தேன்.

ஆரம்பத்தில் பெண் என்று எவ்வித சலுகைகளும் இருக்கவில்லை. போட்டி போட்டு முன்னேற வேண்டி இருந்தது. அதிகமான தொந்தரவுகளை சந்திக்க வேண்டியிருந்தது. எனக்கு எவ்வித அரசியல் பின்னணியும் இல்லை. அரசியலிற்கு வருகின்ற பெண்களுக்கு பண பலம் மற்றும் ஆட்பலம், வாகன வசதி போன்றன தேவை. எனக்கு எனது கிராம மக்களின் ஆதரவு இருந்தது. இளைஞர் மன்றங்கள் முன்னின்று உழைத்தன. கலாசார உத்தியோகத்தில் இருந்ததால் எனக்கு அவர்களின் ஆதரவு கிடைத்தது" என அவர் தனது அரசியல் பிரவேசம் பற்றிக் குறிப்பிட்டார்.

தேர்தலின் போது ஆண்களால் பெண்களுக்கு முரணாக வைக்கப்படுகின்ற கருத்துகளில் ஒன்று என்னவெனில் பெண்கள் ஆண்களைப் போல பிரச்சாரம் செய்யவோ வெற்றியீட்டவோ முடியாது என்பதாகும். ஆனால் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருபது வருடங்களின் பின்பு மாகாணசபைத் தேர்தல் இடம்பெற்றதும், இந்த இக்கட்டான காலகட்டத்தில் அதாவது யுத்தம் மற்றும் ஆயுதக் கலாசாரம் மேலோங்கியிருந்த காலத்திலும், தேர்தல் வன்முறைகள் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகமாக இருந்த போதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணசபைத் தேர்தலில் பெண்கள் வெற்றியீட்டக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. மட்டக்களப்பு மாவட்ட மேயர் திருமதி சிவகீர்த்தா பிரபாகரன் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட மேயர் திருமதி ப. யோகேஸ்வரி போன்ற பெண்களின் வெற்றி கருத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். ஏனெனில் ஆண்களால் காலம் காலமாகக் கூறப்பட்டு வருகின்ற பிற்போக்குத்தனமான கருத்துகள் மேற்கூறப்பட்ட பெண்களின் வெற்றியால் பொய்ப்பிக்கப்படுகின்றன. ஆகவே அரசியல் என்பது ஆண்களைப் போலவே பெண்களுக்கும் உரிமையுடைய ஒன்று. எனவே அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்காதிருப்பது பெண்கள் அரசியல் உரிமையைப் பறிப்பதாகவே அமையும்.

பெண்கள் அதிகளவில் அரசியலிற்கு வர வேண்டும் என்பதில் இன்று பல அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் என்பன ஆர்வம் காட்டுகின்றன. பெண்களின் அரசியல் பிரவேசத்தினால் மாற்றம் நிகழும் என நம்பப்படுகின்றது. ஏனெனில் தமது குடும்பத்தோடு அதிகளவில் நேரத்தைச் செலவழிப்பவர்கள் பெண்கள். இதன் காரணத்தால் சமூகத்தின் தேவை பற்றிப் பெண்களுக்கு அதிகமாக விளங்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் உண்டு. பெண்களின் அதிகளவான அரசியல் பிரவேசத்தினால் பாலியல் ரீதியாக ஓரங்காட்டப்படுகின்ற அரசியல்ப் போக்கானது இல்லாது போகும். அரசியல் என்பது ஆண்களுக்குரியது என்ற எண்ணப்போக்கு மாறி, இன்று உலகளாவிய ரீதியில் சாதனைகளைப் படைத்து வருகின்ற பெண்கள் அரசியலிலும் அதிகளவில் பிரதிநிதித்துவம் வகித்தல் இன்றியமையாததாகும்.

இலங்கை அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் என பல வகையாலும் கோரப்படுகின்றன. அரசியல் துறைகளான பாராளுமன்றம், மாகாண சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என்பவற்றில் ஆண்களின் பிரதிநிதித்துவமே அதிகமாகும். தற்போதைய பாராளுமன்றத்தில் 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 13 பேர் மட்டுமே பெண்களாவார். இது 5.9 விகிதமாகும். இப்பதின்மூன்று பேரினது கருத்துகளும் எவ்வளவு தூரம் அவர்கள் சார்ந்த கட்சிகளின் தலைமைத்துவத்தினால் கருத்தில் கொள்ளப்படுகின்றன என்பது கேள்விக்குரியதாகும்.

எமது நாட்டின் மொத்த சனத் தொகையில் 52 வீதமானவர்கள் பெண்களே. அவர்களிலும் வாக்காளர் கணக்கின்படி பார்க்கும் போது பெண்கள் 56 வீதமாகும். இலங்கை சுதந்திரமடைந்து 60 வருடங்கள் முடிந்த போதும் கூட பெண்களின் பிரதிநிதித்துவம் பத்து வீதம் வரையிலாவது அதிகரிக்காதுள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். தென்னாசிய நாடுகளிடையே பார்க்கும் போது எமது நாட்டு அரசியலில் மட்டுமே அரசியல் கட்டமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த அளவில் இருக்கின்றது. இலங்கையின் அரசியல் தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற சபைகளில் கூடப் பெண்களுக்கு மிகவும் குறைந்ததொரு இடமே உரித்தாயுள்ளது. ஒவ்வொரு முறை தேர்தலின்போதும் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு கட்சியில் இருந்தும் இன்று வரை பெண்களுக்கு மிகவும் குறைவாகவே பெயர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையில் பெண்களின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் 6 வீதத்திற்கும் குறைவாகவும், மாகாண சபைகளில் 5 வீதமாகவும் உள்ளூராட்சி மன்றங்களில் 2 வீதமாகவும் உள்ளன. 2000 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலுக்கு கட்சிகளால் முன்வைக்கப்பட்ட வேட்பாளர்களில் பெண்களது எண்ணிக்கை 2.3 வீதமாகும். ஆண்கள் 97.7 வீதமாகும். 2000 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பெண்களின் எண்ணிக்கை பற்றிப் பார்த்தால் 4 வீதமாகவும் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை 96 வீதமாகவும் இருந்தது. அதேபோல் 2004


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் பாராளுமன்றத் தேர்தலுக்கு கட்சிகளால் முன்வைக்கப்பட்ட வேட்பாளர்களில் பெண்களது எண்ணிக்கை 6.6 வீதமாகும். இவர்களில் ஆண்கள் 93.4 வீதமாகும். 2004 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 5.8 வீதமாகவும், ஆண்களின் எண்ணிக்கை 94.2 வீதமாகவும் உள்ளது. அதேபோல கடந்த மாகாணசபைத் தேர்தலில் பிரதானமான அரசியல் கட்சிகள் பெண்களுக்கு மிகக் குறைந்தளவு பெயர் நியமனங்களையே வழங்கியிருந்தன. பாரபட்சம் இன்றி சமவுரிமையை அனைத்து இடங்களிலும் பெண்கள் பெறுவது அவர்களது உரிமை என இந்த நாட்டின் அரசியல் அமைப்பின் மூலமும், சீடோ உள்ளிட்ட பெண்கள் தொடர்பிலான சர்வதேச சமவாயங்கள் பலவற்றின் மூலமும் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆயினும் பெண்களுக்கு பெயர் நியமனங்களை நியமிப்பதில் சில அரசியல் கட்சிகள் தயக்கம் காட்டுகின்றன.

ஆகவேதான் தேர்தலை எதிர்கொள்ளும் தருணத்தில் பெண்கள் அமைப்புகள் தமக்கு உரிய பிரதிநிதித்துவத்தை வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றன. சில கட்சியின் தலைவர்கள் பெண்களுக்கு 50 வீதம் ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றனர். அமைச்சர் டக்லஸ் தேவானந்தா பெண்களை அரசியலில் ஈடுபடச் செய்யும் பிரதிநிதிகள் குழுவொன்றைக் கடந்த வருடம் சந்தித்தார். "இலங்கையில் பெண்களுக்கு அரசியலில் உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்றும், குறைந்த பட்சம் நூற்றுக்கு 25 வீதமாவது பெண்களின் பங்களிப்பு இலங்கை அரசியலில் இருக்க வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இவர்கள் தென்மாகாண உள்ளூ ராட்சி சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்ற வருடம் குயின்ஸ் ஹோட்டலில் ஊடகவியலாளர்களுக்கிடையில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் மத்திய மாகாணப் பெண்களின் குரல் அமைப்பின் தலைவி விசாகா தர்மதாச கருத்துக் கூறும்போது "அரசியலில் 33 சதவிகித பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். இக்கோரிக்கையை வென்றெடுப்பதற்கு நாம் ஜனநாயக ரீதியிலும் அஹிம்சை ரீதியிலும் குரல் கொடுப்போம். எனக் குறிப்பிட்டார்." இவ்வாறான அமைப்புகளின் குரல்கள் எமக்கு பெண்களின் அரசியல் ஆர்வம் மற்றும் அவர்களின் அரசியல் உரிமைகள் பற்றி எடுத்துக் காட்டுகின்றன.

பெண்கள் அரசியலில் அதிகளவில் ஈடுபட வேண்டும். அரசியல் என்பது ஆண்களுக்கு மட்டுமே உரியதான ஓர் துறை அல்ல. பெண்கள் பலர் இன்று அரசியலில் மிகுந்த ஆளுமையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே வாய்ப்பினைத் தவிர்க்கும் நோக்கத்தை விடுத்து அரசியலில் பெண்கள் தமது பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் செயற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுப்பது மட்டுமன்றி அவர்களுக்கான சம வாய்ப்புகளை உறுதிப்படுத்தல் எந்தவொரு அரசியல் கட்சிகளினதும் கடமை என்றே கூறவேண்டும்.

பால்நிலை அடிப்படையில் பாரபட்சம் காட்டாது பெண்களுக்கு சம உரிமை வழங்கிச் செயற்படல் வேண்டும். சகல அரசியல் கட்சிகளும் பால்நிலைக்கு நட்புறவாகப் பணிபுரியும் சூழலை ஏற்படுத்துவதோடு பெண்கள் தமது கருத்துகள் மற்றும் அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு அவர்கள் சார்ந்த கட்சித் தலைமைத்துவமானது இடம் கொடுத்தல் இன்றியமையாததொன்றாகும். தேர்தலில் பெண்கள் சுதந்திரமாக ஈடுபடவும் பிரச்சாரங்களில் பங்கு கொள்ளவும் ஆதரவு நல்க வேண்டும். குறிப்பாகச் சொல்லப் போனால் பெண்கள் அரசியலில் சமவாய்ப்புப் பெற்று செயலாற்றுவதற்கு அவர்களுக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு அனைவருமே தயாராதல் வேண்டும். அவ்வாறன்றி பெண்களுக்கான அரசியல் உரிமையைப் பாதுகாப்பதென்பது கடினமானதொன்றாகும்.■

**குகநிதி குணச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நான் மிருகமானவன்



www.deviantart.com/Crappy_Shadow_Dweller_Ref_by_Alxias.jpg

உளறிக் கொண்டே எனக்கான
உன்னதங்களை
உதறிக்கொண்டவன்
உணர்ந்த பின்னும்
உணர்வுகளில்
ஊறிக்கொண்டவன் - நான்
மிருகமானவன்.....

அநியாயத்தின்
அந்தரங்க
அத்தியாயங்களை
அரங்கேற்றம் செய்தவன்
அரவணைப்பின்
அர்த்தங்களைக்கூட
அலைக்கழித்தவன்
அன்பின்
அத்திவாரங்களை
அடிபெயர்த்தவன் - நான்
மிருகமானவன்.....

சுயநலத்தைச்
சுவீகரித்துக் கொண்டு
சுதந்திரமாய்
சுரணையற்றுச்
சுற்றித்திரிந்தவன் - நான்
மிருகமானவன்.....

உருகிக்கொண்டே
உடலுறவுகளில்
உறைந்து கொண்டவன்
உற்பவித்த
உயிர்ச்சுவடுகளை
உரிமையற்று ஊமையாய்
உதிர்த்துக் கொண்டவன் நான்
மிருகமானவன்.....

உறங்க மறுக்கும் என்
உச்சரிப்புகள்
இறுதிவரை என்
இதயவறைகளில்
கறைபடிந்து
காத்திருக்கும்......

நான்
மிருகமானவன்.....

**மித்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களில் பெண்கள் பங்களிப்பின் அவசியம்

உள்ளூராட்சி மன்றங்கள் அரசியல் பரிபாலனத்தின் அடிப்படை அலகு. எனவே பெண்களின் அரசியல் பங்குபற்றுகை பால்நிலை சார்ந்ததாக விஸ்தரிக்கப்படுவதற்கும், உறுதிப்படுத்தப்படுவதற்கும் அவர்கள் முதலில் உள்ளூராட்சி மன்ற அரசியலில் ஈடுபடுவது அவசியம். பொதுவாக அனைத்து மட்டத்தினாலான அரசியலிலும் பெண்கள் புறமொதுக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். இதற்கும் தந்தையாதிக்க அரசியல் மரபுகளே அடிப்படைக் காரணங்களாகும்.

கிராமங்களே சமூகக் கட்டமைப்பின் அடித்தளம். எனவே தேசிய ரீதியில் பெண்களுக்கு அரசியல் பிரக்ஞையை ஊட்டுவதற்கு முதற்கண் உள்ளூராட்சி அரசியலில் பெண்களை ஈடுபடுத்துதல் அவசியமாகின்றது. அந்த வகையில், இந்தக் கட்டுரையானது இலங்கையின் அரசியலும், கட்டமைப்பும், உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் வாக்குரிமை, உள்ளூராட்சி மன்றங்களில் பெண்கள் பங்குபற்றுவதன் தேவைப்பாடு போன்றவற்றினை உள்ளடக்கியதாக அமைகின்றது.

### 1. இலங்கை அரசியலும் கட்டமைப்பும்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசானது 9 மாகாணங்களையும் 25 மாவட்டங்களையும் கொண்டுள்ளது. ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 வருடங்களாகும். இங்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் காணப்பட்டாலும் 196 உறுப்பினர்கள் தேர்தலினூடாகப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். தேசிய மட்டத்தில் இவ்வாறான கட்டமைப்புக் காணப்படுகின்றது. மாகாணசபை மட்டத்தில் சற்று வேறுபட்ட கட்டமைப்புக் காணப்படுகின்றது. 1987 ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகள் தோற்றுவிக்கப்பட்டன. இவை 5 வருடகால ஆட்சிக்காலத்தினைக் கொண்டுள்ளன. இவற்றினை விடவும் உள்ளூராட்சி மன்றங்கள் தமது நிர்வாகத்தினை நடத்தி வருகின்றமையினையும் காணக் கூடியதாக உள்ளது. இதன் வெளிப்பாடுகளாக மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என மூன்று வெவ்வேறு உள்ளூராட்சி அமைப்புகளின் வடிவங்களைக் காணக் கூடியதாகவுள்ளது. நான்கு வருடங்களுக்கான நிர்வாகப் பொறுப்பினைத் தன்னகத்தே கொண்டுள்ள இவ்வமைப்பு இலங்கையில் 14 மாநகர சபைகளையும், 37 நகர சபைகளையும், 258 பிரதேச சபைகளையும் கொண்டு நிமிர்ந்து நிற்கின்றது.

### 2. உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் வாக்குரிமை

இலங்கையில் 22 தேர்தல் மாவட்டங்கள் காணப்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் இங்கு தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிட வயதெல்லை என்பது குறிப்பிடப்படாவிட்டாலும் 18 வயது முதல் 35 வயதிற்கிடையிலான இளைஞர், யுவதிகளைத் தேர்தலில் ஈடுபட ஊக்குவிப்பதற்கான வாசகங்கள் காணப்படுகின்றன.

"தேர்தலில் வாக்களித்தல்" என்பதனை எடுத்து நோக்கின், 1931ஆம் ஆண்டின் முன்னர் தேர்தல்களில் ஆண்கள் மாத்திரமே வாக்களிக்க முடியும் என்னும் நிலைமை காணப்பட்டது. ஆண்களும் சொத்துகளைக் கொண்டிருப்பின், கல்வி அறிவினைப் பெற்றிருப்பின், மேலும் சாதி அடிப்படையில் உயர் சாதியாகக் காணப்பட்டால் மாத்திரமே இந்த உரிமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும் காணப்பட்டது. இந்த நிலைமை மாறி 1931ஆம் ஆண்டின் டொனமூர் யாப்பின் பாரிய மாற்றத்தின் பின்னர் வயதுவந்தோர் வாக்களிக்கலாம் எனும் சூழல் உருவானது. அதே வருடமே பெண்களும் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றனர். அத்தோடு அரசாங்கத் தேர்தலில் அவர்கள் தேர்வு செய்யப்பட முடியும் என்ற உரிமையையும் பெற்றனர். ஆயினும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 1938ஆம் ஆண்டில் அரசியல் உரிமை பெண்களுக்கு வழங்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டவிதிகளை நோக்கின் அவற்றில் பெண்களை அரசியலில் ஈடுபடுத்த வேண்டும், முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற எவ்விதமான வாசகங்களும் குறிப்பிடப்படாத நிலையே காணப்படுகின்றது. "No person shall be discriminated on the grounds of sex" எனும் வாசகமே பால்நிலையினை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது. ஆயினும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பங்களிப்பு அவசியம் என்பதனை பல காரணங்கள் மூலம் வலியுறுத்தலாம்.

### 3. உள்ளூராட்சி மன்றங்களில் பெண்கள் பங்குபற்றுவதன் தேவைப்பாடு

இன்றைய நிலையில் போரின் பின்னரான சூழலில் நாடு அபிவிருத்தியை நோக்கிய பாதையில் பயணித்துக் கொண்டுள்ள நிலையில் "அபிவிருத்தி" எனும் எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்துவதில் பெண்களின் பங்களிப்பு அவசியமாகின்றது. அபிவிருதித்தியைத் திட்டமிடுவதற்கு முழு அதிகாரத்தினையும் ஒன்று திரட்டிப் பயன்படுத்தும் போது பெண்களின் தனித்துவமான தேவைகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். உதாரணமாகப் பொதுக் கிணறு ஒன்றினை அமைக்கும் போது அங்கு குளிக்க வரும் பெண்கள், சிறுமிகளின் பாதுகாப்பு, பயன்பாடு போன்றவற்றை நன்கு தெரிந்தவர்களாகவும், உணர்ந்தவர்களாகவும் மிகப் பொருத்தமான சிபாரிசுகளையும் தேவைகளின் தார்ப்பரியத்தினையும் முன்வைக்கக்கூடிய தன்மையானது பெண்களிடம் ஆழமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே உள்ளூராட்ட்சித் தேர்தல்களில் பெண்கள் பங்கு பற்றின் அபிவிருத்தி நோக்கிய திட்டமிடல் மிகச் சிறப்பாக அமையும். எனவே உள்ளூர் ஆட்சி மன்றங்களில் பெண்கள் பங்களிப்பு அவசியமானது.

பெண்களின் வகிபங்குகள் பல. அதில் தாயாக பெண்கள் பார்க்கப்படும் சந்தர்ப்பம் ஏராளம். தாயின் பார்வையினின்று பார்க்கும்போது தனது பிள்ளைகள் பாடசாலை செல்லும் போது தெருக்கள் சீரானவையாகக் காணப்படுகின்றனவா? என எண்ணுகின்றாள். தெருக்கள் நன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தில்தான் குழந்தைகளின் சுகாதாரம் உறுதிப்படுத்தப்படும். சூழல் சுத்தமாக இருக்கும் போதுதான் தன் குழந்தைகளின் பாதுகாப்பு வலுவூட்டப்படும். எனவே தெருக்கள், சூழல் பற்றி அதிக அக்கறை கொண்டவர்களாகப் பெண்கள் காணப்படுகின்றர். இயல்பாகவே இவ்வாறாகச் சமூக மயமாக்கப்பட்ட பெண்கள் தம் சூழலின்பால் மிகவும் அக்கறை கொண்டவளாகக் காணப்படுகின்றாள். தெருக்கள், சூழல், சுத்தம் போன்ற விடயங்கள் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்திற்கு உட்பட்டுக் காணப்படுவதனால் பெண்கள் உள்ளூராட்சியில் இணைந்து நிர்வகிக்கும் போது மிகவும் சிறப்பான ஆட்சியினை வெளிப்படுத்த முடியும்.


உள்ளூராட்சி சபைகள் உள்ளூரின் அபிவிருத்தியினை நோக்கி செயற்படுகின்றன. நுண்கடன் திட்டங்களினூடான அபிவிருத்தி, வாழ்வாதார அபிவிருத்தி, அவற்றிற்கான பயிற்சி போன்ற பல்வேறு அபிவிருத்தி நோக்கிய திட்டங்களை உள்ளூராட்சி மன்றங்கள் புரிகின்றன. இவற்றை சரியான முறையில் சரிவர அமுல்படுத்தக் கூடிய சிறப்பான ஆயத்தத்தன்மை, புரிந்து கொள்ளக்கூடிய தன்மை போன்றவை பெண்களிடையே காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இவற்றினை அமுல்படுத்தி அபிவிருத்தியில் பெண்களைக் கொண்டு வருவதற்கு சிறப்பான இடம் உள்ளூராட்சி நிர்வாகமே. உள்ளூராட்சி சபையின் அதிகாரத்தின் கீழ் சந்தை, கிராமிய வீதிகள், வாசிக சாலை, ஆரம்ப பாடசாலை, பொது மைதானங்கள், மயானங்கள், உள்ளூர் நீர்வடிகால் அமைப்புகள், சுற்றுச் சுகாதாரம், கட்டிட அங்கீகாரம் போன்றவை காணப்படுகின்றன. இவற்றைப் பொறுத்தவரையில் பால்நிலை தொடர்பான தேவைப்பாடுகளை முன்னுரிமைப்படுத்த, தீர்மானங்களை மேற்கொள்ளவும் அத்தோடு பெற்ற தீர்மானங்களை அமுல்ப்படுத்தவும், உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பங்களிப்பு அவசியமாகின்றது.

பெண்களின் உரிமைகளை, அரசியல் ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ள மிகப் பொருத்தமான இடம் உள்ளூராட்சி அரசாங்கமாகும். எனவே பெண்களின் பங்களிப்பு இங்கு மிகவும் அவசியமாகின்றது. மத்திய அரசாங்கத்தில் இடம் பதிக்க இலகுவாக பயிற்சி பெறக்கூடிய இடமாகவும் உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றன. எனவே உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பங்களிப்பு அவசியமாகின்றமை கண்கூடு. ■

பாரதி கென்னடி



# நாளுக்கான கதை

மலைப் பிரதேசம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த பேருந்தில் காதலர் இருவர் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஓரிடத்திலே பேருந்தில் இருந்து இறங்குவதற்குத் தீர்மானித்தார்கள். இக்காதலர்கள் பேருந்தில் இருந்து இறங்கிய பின்னர் பேருந்து முன்னோக்கி நகர்ந்து சென்றது. அவ்வாறு பேருந்து சென்று கொண்டிருந்தபோது, ஓர் பெரிய கல் மலையிலிருந்து உருண்டு வந்து அப்பேருந்தின் மீது விழுந்து பேருந்தை துகள்களாக நொருக்கியது. குறிப்பிட்ட பேருந்திலிருந்தவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். அதனைக் கண்ட காதலர்கள் "நாங்களும் இந்தப் பேருந்தில் இருந்திருக்க வேண்டும்" எனச் சொல்லிக் கொண்டனர். அவர்கள் அப்படி ஏன் கூறினார்கள் என நினைக்கிறீர்கள்?

பேருந்திலிருந்து இறங்கத் தீர்மானிக்காது அவர்கள் பேருந்தில் இருந்திருந்தால், அவர்களை இறக்குவதற்கு அந்தப் பேருந்து தாமதித்து இருக்காவிட்டால், அந்தப் பாறையானது பேருந்து சென்ற பின்பே விழுந்திருக்கும்.

வாழ்க்கையில் எப்பொழுதும் சாதகமாகச் சிந்தியுங்கள். அத்துடன் மற்றவர்களுக்கு உதவக்கூடிய சந்தர்ப்பங்களைத் தேடுங்கள். ■

இணையத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறைவடைந்த உள்ளூராட்சித் தேர்தலும் முஸ்லிம் பெண்களும்

மட்டக்களப்பில் உள்ள ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி போன்ற முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் பெண்கள் பங்குபற்றுகை பற்றி அக்கறை கொள்ள வேண்டியது அவசியமானதாகும். ஏனெனில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பாலான இடங்கள் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் அதிகளவில் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனால் பெரும்பாலான குடும்பங்கள் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு வறுமையுடன் போராடுபவர்களாகவே இன்றுவரை காணப்படுகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக இடம்பெற்ற வெள்ளப் பெருக்கானது மீண்டும் மீண்டும் அதிகளவிலான மக்களினை இடம்பெயரச் செய்ததோடு வாழ்வாதாரச் சிக்கலையும் தோற்றுவித்துள்ளது. பெண்களது சுயதொழில் முயற்சிகள் மற்றும் குடிசைக் கைத்தொழில் வளங்கள் பாதிக்கப்பட்டதோடு அவற்றையே ஜீவனோபாயமாகக் கொண்டு வாழ்கின்ற பெண்கள் தமது மூல வளங்களை இழந்துள்ள துர்ப்பாக்கியம் மட்டக்களப்பில் அதிகமாக நிகழ்ந்துள்ளது. இவ்வாறான அசாதாரண சூழ்நிலை காரணமாக நாளுக்கு நாள் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதோடு வறுமை நிலை அதிகரித்த வண்ணமே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்கூறப்பட்ட சூழலில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பற்றியும் அதிலே குறிப்பாக முஸ்லிம் பகுதிகளில் முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு மற்றும் பங்குபற்றுகை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகும். ஏனெனில் அனர்த்தங்களால் பாதிப்படைந்த பெண்களது வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பவும் அத்தோடு பெண்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கூருணர்வுடன் நிறைவேற்றவும் உள்ளூராட்சி அரசியலில் அதுவும் முஸ்லிம் பெண்கள் செறிந்து வாழும் பகுதிகளில் முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவம் மற்றும் அவர்களது சேவை எதிர்காலத்தில் மிகவும் தேவையுடையதொன்றாகும். அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடிப் பிரதேசத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரும் சமூக சேவகியுமான சல்மா ஹம்சா அவர்கள் அரசியலில் முஸ்லிம் பெண்கள் பிரதிநிதித்துவம் பற்றியும் ' உள்ளூராட்சி அரசியலில் முஸ்லிம் பெண்கள் ஈடுபட வேண்டிய தேவை தொடர்பாகவும் கூறும்போது "மட்டக்களப்பில் காத்தான்குடிப் பிரதேசம் பெருமளவான முஸ்லிம் சமயக் கட்டுப்பாடுகள் நிறைந்த இடமாகும். நான் எமது பகுதியில் பலகாலமாக சமூக சேவையில் ஈடுபட்டு வருகின்றேன். அவ்வாறு சமூகத்தில் நான் செயற்படும் போது இதுவரை எனக்கு முரணாக யாரும் செயற்படவில்லை.

பெண்கள் அரசியலில் ஈடுபடுவது தொடர்பாக இடம்பெறுகின்ற எதிர்ப்பு அல்லது சவால் எனச் சொல்லும் போது பெரும்பாலும் இல்லை என்றே சொல்ல வேண்டும். பெண்கள் அரசியலிற்கு வரவேண்டும் என்றே பலரும் நினைக்கிறார்கள். ஏனெனில் பெண்களுக்கு நிறையப் பாதிப்புகள் இருக்கின்றது. இல்லத்தரசிகள், பல்கலைக்கழக மாணவிகள், தொழில் புரியும் பெண்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் போன்றோர்கள் அரசியலில் நான் ஈடுபட வேண்டும் என விரும்புகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் அரசியலில் ஈடுபட முனையும் போது ஏற்படுகின்ற வழமையான அரசியல் எதிர்ப்புப் பாரம்பரியம் எனக்கும் இருந்தது. ஆனால் எனது சமூகத்தில் இருந்து பூரண ஆதரவு கிடைத்தது. முஸ்லிம் பெண் என்ற காரணத்தால் அரசியலில் ஈடுபடுவதற்கு எனக்கு எவ்விதமான தடைகளோ அல்லது சவால்களோ இருக்கவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை யுத்தம் மற்றும் அனர்த்தங்களினால் பெருமளவான பெண்கள் பாதிப்படைந்துள்ளார்கள். பெண்கள் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகளவில் உள்ளன. கணவனை இழந்தோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், தொழில் புரியும் பெண்கள், மாணவிகள் போன்றோர் எனது இலக்குக் குழுவாகக் காணப்படுகின்றனர். அவர்கள் எல்லோருமே எனது அரசியல் பிரவேசத்தை விரும்புகின்றார்கள். ஏனெனில் ஆண் அரசியல்வாதிகளின் அரசியல் துஷ்பிரயோகம் இன்று அதிகமாகவே இடம்பெறுகின்றது. பெண்கள் அங்கீகாரம் வழங்கியதால் நான் அதிகாரத்திற்கு இன்று வந்துள்ளேன். காத்தான்குடிப் பிரதேசத்தில் பெண் வாக்காளர்களே பெரும்பான்மையாக உள்ளார்கள். அவர்களே எனது வெற்றிக்கும் காரணமாக இருக்கின்றார்கள்."

திருமதி சல்மா ஹம்சா குறிப்பிட்டதைப் போன்று இன்றைய காலகட்டத்தில் பெண் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காகத் தமது வாக்குகளைப் பெண்கள் பிரயோகிக்க வேண்டிய தேவை உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவரை காலமும் பெண்களாகிய நாம் எமது வாக்குகளை ஆண் அரசியல் வேட்பாளர்களுக்கே அளித்து வந்துள்ளோம். இனியும் அவ்வாறன்றி எமது பெறுமதியான வாக்குகளை பால்நிலைக் கூருணர்வுடன் செயற்படக் கூடிய பெண் வேட்பாளர்களுக்கு வழங்கி அவர்களை வெற்றியீட்டச் செய்வோமேயானால் எதிர்காலத்தில் பெண்கள் அரசியலில் ஓர் ஸ்திரமான நிலையைப் பெறுவதற்கு உறுதுணையாக அமையும். ■

**வடக்கு கிழக்கு பெண்கள் அமைப்பு**

# என்று உணர்வாய்...?

பெண்ணை
தாயின் கருவறையில் வேறு பிரித்து
சீதனம் எனும் சாக்கடையில் தள்ளி
அடிமை எனும் பட்டம் கொடுத்து
ஆறுதல் என்ற பெயரில்
பொறுப்பையும், பொறுமையையும் காட்டி
முதிர் வயது அடைந்தவுடன்
மூச்சு நிற்கும் வரை
மூலையில் தள்ளும்
ஆணாதிக்கமே
பெண்களை
என்று உணர்வாய்?



**பாண்டிஜோதி**
திண்டுக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரும்புப் பெண்

மணிப்பூரிக் கவிஞரான இரோம் ஷானு ஷர்மிலா என்பவர் மணிப்பூரியில் உள்ள மலோமில் என்னும் இடத்தில் பத்து பொதுமக்கள் இந்திய இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டதன் பிற்பாடு, அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட AFSPA யினை இல்லாது நீக்கும் பொருட்டு அரசை நிர்ப்பந்திப்பதற்காக 2000ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ஆம் திகதி ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டார். அவர் கார்த்திகை 6ஆம் திகதியே கைது செய்யப்பட்டார். 2000ஆம் ஆண்டு கார்த்திகை 21ஆம் திகதி முதல் அவரது மூக்கின் ஊடாகக் கட்டாயமாகச் செலுத்தப்பட்ட பிளாஸ்டிக் குழாய் வழியே உணவு ஊட்டப்படுகின்றது. (இந்த வருடத்தில் இருந்து சரியாக 9 வருடங்களுக்கு முன்பு) இவ்வாறாக 2009 கார்த்திகை 02ஆம் திகதி முதல் அவரது பட்டினிப் போராட்டத்தின் 10ஆவது ஆண்டிற்குள் அவர் நுழைந்து விட்டார். உலகின் மனச்சாட்சியை உலுக்கிய இந்தத் தனித்துவமான போராட்டமானது (போதியளவில் இருக்கவில்லை என நான் ஊகிக்கின்றேன்) நிச்சயமாக உலகிலேயே நீண்டகாலம் உண்ணாவிரதம் இருப்பவராக கின்னஸ் பதிவுப் புத்தகத்தில் அவரை நுழையச் செய்திருக்கின்றது.

இப்போராட்டத்திற்கான காரணம் யாதெனில், ஆயுதப்படைகளின் விசேட ஏற்பாடுகள் காரணமாக 1958ஆம் ஆண்டு விசேட சட்டத்தை மணிப்பூரியில் அமுல்படுத்தியதாகும். இக்குறிப்பிட்ட சட்டத்தின் அடிப்படையில் இராணுவத்தில் உள்ள எவரும் அல்லது எந்தத் துணைப்படையும், ஏன் ஆரம்ப நிலையில் இருந்து பதவியுயர்ந்த ஆயுதப்படை அதிகாரியும் கூட, பிரஜைகளைக் கைது செய்யவும், அவர்களின் உடமைகளுக்குள் உத்தரவுப் பத்திரமின்றி நுழையவும் முடியும். வெறும் சந்தேகத்தின்பேரில் எவரையும் சுட்டுக்கொல்லவும் முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AFSPA ஆனது 1980ஆம் ஆண்டில் இருந்து தொடர்சியாக கிளர்ச்சியை நசுக்கும் நோக்குடன் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் AFSPA ஆனது துஷ்பிரயோகம் செய்வதற்கும் அடக்கு முறை செய்வதற்கும், பாரபட்சம் காட்டுவதற்குமான ஒரு கருவியாக அரசிற்கு உள்ளது. இவ்வாறான நிலைமையில் சாவு, பாலியல் வல்லுறவு, போலி ஊடாட்டங்கள், கைது, எதேச்சையானவிதமான தடுத்துவைப்பு, சித்திரவதை, பாலியல் தொந்தரவுகள் மற்றும் சொத்துகளைக் கொள்ளையடித்தல், சேதமாக்கல் என்பனவும் அம்மாநிலத்தில் பொதுவானவையாக மாறிவிட்டன.

## இச்சட்டம் தொடர்பாக நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?

இக்கடுமையான சட்டமானது யூனியனால் பிரகடனப்படுத்தப்படும் இந்தியாவின் எந்த மாநிலத்திலும் அறிமுகப்படுத்தப்படக் கூடியதாக இருப்பதுடன், நாட்டின் பிரஜைகள் மீது திணிக்கவும் முடியும். அத்தோடு இது பெருமளவிலான அதிகாரத்தினை இராணுவத்திற்கு வழங்குவதோடு, பிரஜைகளின் உரிமையை பாதுகாக்காத முறையில் வழங்குகின்றது. அத்துடன் மத்திய அரசாங்கத்தின் அனுமதியின்றி இராணுவத்தின் அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கு எதிராக எந்த சட்ட செயன்முறைகளையும் மேற்கொள்ளவும் முடியாது.

எமது அரசாங்கம் ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டு வன்முறையற்ற பாதைக்கு செல்லும்படி கிளர்ச்சியாளர்களுக்குத் தொடர்ந்தும் சொல்லிக் கொண்டு இருக்கின்றது. ஆனால் ஏனையோருக்கு வன்முறையற்ற பாதையைப் பின்பற்றுமாறு சொல்லுவதற்கு முன்பு யாராக இருப்பினும் தாமும் முதலில் வன்முறையற்ற பாதையைப் பின்பற்ற வேண்டும். வன்முறையற்ற வழியைப் பின்பற்றுகின்ற நாங்களே பல்வேறுபட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குவது வன்முறையை மேலும் வலுப்படுத்தும். கிளர்ச்சியாளர்களாக சந்தேகிக்கப்படும் எவரையும் கொலை செய்யும்படி அரசாங்கம் தொடர்ச்சியாகக் கட்டளையிடுகின்றது. ஒவ்வொரு நாளும் இடம்பெறும் கொலைகளைக் கண்டு எனது மனதில் எமது ஆட்சியாளர்கள் யார் என்று ஓர் சந்தேகம் ஏற்படுகின்றது. இங்கே என்ன நடைபெறுகின்றது என்று எனக்குத் தெரியவில்லலை. பல மாதங்களாக எமது வகுப்புப் பகிஷ்கரிப்பு நடந்து கொண்டு வருகின்றது. ஒரு மணித்தியால வகுப்பை இழந்து விடுவதன் செலவீனம் கூட நஷ்டஈடு செய்யப்படமாட்டாது என்பதை நாங்கள் அறியவேண்டும். உண்மையில் கல்விக்கான உரிமை கூட வாழும் உரிமை மற்றும் வாழ்வாதாரத்திற்கான உரிமை என்பவற்றில் இருந்தே வளர்ந்திருக்கிறது. வெறும் வயிற்றுடன் நாம் கல்விக்காக செல்ல முடியாது என்று எமக்குத் தெரியும். எமக்கு வாழும் உரிமை இல்லையெனில் கல்வியால் நாம் எதைச் சாதிப்போம். மாணவர்களின் காலம் நீடித்ததான வகுப்புகள் பகிஷ்கரிக்கப்படுவதானது ஏன் எந்தவித தாக்கமும் அற்றதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. உண்மையான அக்கறை மற்றும் செயற்பாட்டின் விளைவினை அறிந்து கொள்ளுதல் என்பவற்றில் இருந்து பகிஷ்கரிப்பு வெடித்திருந்தால் அது ஒரு மாதமோ அதற்குள்ளோ அதனுடைய நோக்கத்தில் வெற்றியடைந்திருக்கும். வகுப்புப் பகிஷ்கரிப்பை நோக்கிய அரசாங்கத்தின் அக்கறையின்மை மனோபாவமானது மாணவர்களின் நலனோம்புகையிலும் இல்லாதிருப்பதைக் காட்டுகின்றது.

நாம் நிகழ்காலத்தை மாத்திரம் சிந்திக்க முடியாது. மாணவர்களுக்கான கவலை எதிர்காலம் பற்றியதாகவுள்ளது. ஷர்மிலா 9 வருடங்கள் உண்ணாவிரதம் இருப்பாள் என்று யாருக்குத் தெரியும்? 2004 ஆம் ஆண்டுமனோரமா சம்பவத்திற்குப் பிற்பாடான கிளர்ச்சியால் உருவாக்கப்பட்ட மாற்றங்கள்தான் என்ன? நாம் எப்போது மனித உரிமைகளைப் பெற்றுக்கொள்வோம். ஒருவர் அல்லது சிலரின் சாவிற்காக ஏன் அழுது புலம்ப வேண்டுமென அரசாங்கம் கேட்கின்றது. நோயினால் ஏற்படும் மரணங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“எமது அரசாங்கம் ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டு வன்முறையற்ற பாதைக்கு செல்லும்படி கிளர்ச்சியாளர்களுக்குத் தொடர்ந்தும் சொல்லிக் கொண்டு இருக்கின்றது. ஆனால் ஏனையோருக்கு வன்முறையற்ற பாதையைப் பின்பற்றுமாறு சொல்லுவதற்கு முன்பு யாராக இருப்பினும் தாமும் முதலில் வன்முறையற்ற பாதையைப் பின்பற்ற வேண்டும். வன்முறையற்ற வழியைப் பின்பற்றுகின்ற நாங்களே பல்வேறுபட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குவது வன்முறையை மேலும் வலுப்படுத்தும்.”

எவ்வாறு அன்புக்குரியவர்களின் பிரிவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். எம்மைப் பாதுகாப்பவர் என உரிமை கோரிக்கொள்ளும் எமது அரசாங்கமானது இறப்புகளை இயற்கை மரணங்கள் என உள்ளடக்கப் போகின்றதா? நாம் சிறந்த ஓர் வேலையைப் பெற்றுக் கொண்டு அத்தோடு எமது வாழ்க்கையை முடித்துக் கொள்வதற்காகவா வெறுமனே கல்வியைப் பெற்றுக் கொண்டோம். நாம் ஏன் பிறந்தோம்? என்ற கேள்வியைக் கேட்க வேண்டும். இந்த பூமியிலே வாழும் காலத்தில் பெருமையடையக் கூடிய ஏதாவது விடயம் எம்மிடம் உண்டா? வெறுமையையும் உள்ளடக்கம் இல்லாததையும் அடக்கத்தையுமே நீங்கள் காணுகின்றீர்கள். நாம் கடவுளால் மனிதர்களாக நீதியைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக வேறுபட்ட முறையினிலா படைக்கப்பட்டோம்? எனது இதயம் நான் ஓர் மனிதப் பிறவி என்ற வகையில் வேதனையடைகின்றது.

ஏனைய சமூகங்கள் மிகவும் முன்னேறிவிட்டன. பைபிளும் குர்-ஆனும் மனிதர் வாழ்வதற்கு முன்பாக கடவுளால் எழுதப்படவில்லை. இவைகள் மனிதனின் சிந்தனையால் எழுதப்பட்டவை. எம்மிடம் இல்லாதது அதுதான். ஏனெனில், அந்த மட்டத்தை நோக்கிச் சாதிப்பதற்கு நாம் கடுமையாக முயற்சிக்க முடியாதுள்ளது. பல விடயங்களுக்குப் பின்னால் நாம் சுற்றிக் கொண்டு இருந்தாலும் முன்னேற்றத்திற்கு சிறந்த முயற்சியைக் காட்டவேண்டும். இந்த அணு ஆயுத யுகத்திலே மனிதன் சந்திரனுக்குச் சென்று 40 வருடங்களாகி விட்ட நிலையிலே நாம் எவ்வாறு முன்செல்வதற்கு மற்றவர்களிலேயே இன்னமும் தங்கியிருக்க முடியும்? இந்தச் சாதனைகள் எல்லாம் மனிதனின் முயற்சிகளில் ஆனவை. நாம் மென்மையானவர்களாகவும், பிந்தியவர்களாகவும் இருந்தாலும், முன்னோக்கி நகர வேண்டும். சுயபோசிப்பு, சுயமரியாதை, சுய ஆதரவு எண்ணங்கள் என்பன எமது ஆட்சியாளர்களிடமும், மாணவர் அமைப்புகளிடமும் எப்போது வரும்? கட்டமைப்புகளும் இரவோடு இரவாக அழிந்துவிடும். ஆனால் மிக முக்கியமான விடயம் என்னவெனில் அது மனிதத்திற்கான நீதியும் அன்புமேயாகும். அரசாங்கத்தினுடைய முறைகேடுகள் சுட்டிக்காட்டப்பட வேண்டும். நாம் செய்பவை எல்லாம் சிறிய அளவுகளேயாகும்.

இவ்வாறு மணிப்பூரின் இரும்புப் பெண் என வர்ணிக்கப்படும் இறோம் ஷர்மிலா ஷானு தற்போது ஒருவரைக் காதலிக்கின்றார். சர்ச்சைக்குரியதான ஆயுதப்படைகளின் விசேட அதிகார சட்டத்தை இல்லாது செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கடந்த 10 ஆண்டுகளாக உண்ணா நோன்பு இருந்து கொண்டிருக்கும் இவர், சோனியா சங்கருடனான கலந்துரையாடலின்போதே தான் மணம் முடிக்க விரும்புவதாகக் கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷர்மிலா வைத்தியசாலையில் இருக்கின்றார். அவருடைய மூக்குத் துவாரம் ஒன்றிற்கு மெல்லிய பிளாஸ்ரிக் குழாய் இணைக்கப்பட்டிருக்கின்றது. அவர் எல்ல விடயங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறார். உணவு பற்றிக் கூறும்போது "ஒர் குழந்தையாக எனக்கு சாப்பிடுவது விருப்பமாக இருந்தது. முன்பு எனக்கு அம்மா கொடுக்கும் உணவை சாப்பிட்டு முடித்த பிற்பாடு ஏனையோரின் தட்டுக்களில் இருந்தும் நான் எடுத்து சாப்பிடுவேன். எனது



"நான் தியாக வீராங்கனையாக வர விரும்பவில்லை"

தாயார் இதற்காக அடிக்கடி ஏசியதுண்டு. என்னுடைய போராட்டமும் உணவோடு தொடர்புபட்டிருப்பது ஒரு முரண்நடைதான். ஆனாலும் இது சாப்பிடாததைப் பற்றி உள்ளது" எனக் குறிப்பிடுகிறார்.

10 வருடங்களுக்கும் சற்றும் அதிகமான காலத்திற்கு முன்பாக ஷர்மிலா மணிப்பூரில் இரும்புப் பெண்ணாக அநேகமாக எல்லாராலும் விபரிக்கப்பட்டாள். 1958 ஆம் ஆண்டு ஆயுதப்படைகளின் விசேட அதிகாரச் சட்டத்தை (AFSPA) இந்திய அரசாங்கம் அகற்றும் வரைக்கும் சாப்பிடுவதில்லை என சபதம் எடுத்துக் கொண்டார். இச்சட்டமானது வடக்கு கிழக்கு ஜம்பு மற்றும் கஷ்மீரில் அமுலில் இருப்பதுடன், இராணுவத்தினருக்கு முழு அதிகாரங்களையும் கொடுத்திருக்கின்றது. அதாவது சந்தேகத்தின் மீது சுடுகின்ற அதிகாரத்தினைக் கொடுத்திருக்கின்றது. அப்போதிருந்து ஷர்மிலா உணவைத் தொட்டதில்லை. ஆனாலும் அரசாங்கத்தினால் அவருக்குப் பலவந்தமாக உணவு ஊட்டப்பட்டு வருகின்றது.

"நான் சுதந்திரமாக இருக்க விரும்புகிறேன்" என, தனது வீட்டிலிருந்து வெறுமனே 800 மீற்றர் தூரத்தில் உள்ள Imphal's Jawaharlal Nehru *(இம்பால் ஜவகர்லால் நேரு)* வைத்தியசாலையில் மருத்துவக் கவனிப்பிற்கும், கண்காணிப்பிற்கும் மத்தியிலே கட்டிலில் இருந்து கொண்டிருக்கும் ஷர்மிலா கூறுகிறார். அவருடைய தாயாரான இறோம் ஷக்கி தேவி வீட்டிலிருக்கிறார். செய்திகளிலே குறிப்பிட்ட அச்சட்டம் நீக்கப்பட்டு விட்டதாக சொல்லப்படும் என்ற நம்பிக்கையோடு வானொலி கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

இந்தப் பத்து வருடங்களில் தாயும் மகளும் ஒரே ஒரு தடவை மாத்திரமே சந்தித்திருக்கின்றார்கள். தளர்ந்து கொண்டிருக்கும் ஷர்மிலாவின் உறுதியான மனதினை தாயின் சந்திப்புகள் அடிக்கடி நிகழுமாயின் குலைத்து விடும் என்று அஞ்சுவதனாலேயே ஷர்மிலா விலகியிருக்கின்றாள் என ஷக்கிலா தேவி கூறுகின்றார். இரண்டு வருடங்களுக்கு முன் அவருடைய தாயார் ஒரு ஆஸ்மா நோயினால் தாக்கப்பட்டபோது குறிப்பிட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஷர்மிலா அவளை நடுஇரவில் சந்தித்தாள். நோயால் வருந்திய அந்தத் தாய் ஷர்மிலாவிடம் "ஒருநாள் அவர் உண்பதைப் பார்ப்பதற்காகவே உயிரோடு இருக்க வேண்டும்" என்று கூறியதுடன், ஒருவரையொருவர் கட்டியணைத்து அழுதனர்.

மணிப்பூரிலும் அதனைச் சூழ்ந்த பகுதிகளிலும் 38 வயதான ஷர்மிலா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு எதிர்ப்பின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறார். கைது செய்யப்பட்டார்: விடுவிக்கப்பட்டார்: மீண்டும் கைது செய்யப்பட்டார். ஆனால் இம்பால் தலைநகரத்தின் புறநகரில் பாதுகாப்பு படையினரால் 2000 ஆம் ஆண்டு கார்த்திகை 10 ஆம் திகதி பத்துப் பொதுமக்கள் கொலை செய்யப்பட்ட மலோம் படுகொலையின் பின்பு உடனடியாக அவர் தொடங்கிய உண்ணா நோன்பை ஷர்மிலா கைவிட மறுத்துவிட்டார். "உண்ணா நோன்பைத் தொடங்குவதற்கு முதல் நாள் இரவு உள்ளூர் வெதுப்பகத்தில் இருந்து இரண்டு பொதி கேக்குகளை வாங்கி வந்து, எனது வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டேன். அதன் பின்பு மீண்டும் நான் சாப்பிடுவதில்லை என சபதம் எடுத்துக் கொண்டேன். என்னையே நான் கடவுளிடம் சரணாகதி ஆக்கினேன்" எனக் குறிப்பிட்டார்.

ஷர்மிலா உண்ணாவிரதம் மேற்கொள்வதற்கு முன்பு உள்ளூர் பத்திரிகையின் பந்தி எழுத்தாளராக இருந்ததுடன், அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தார். பொதுமக்களுக்கு எதிரான செயற்பாடுகள் குறித்தான அநேகமான எதிர்ப்புப் போராட்டங்கள் வீதிக்கு வரும்பொழுது அவரும் அவ்வாறான போராட்டங்களில் இணைந்து கொண்டார். ஆனால் மலோம் படுகொலையானது அவரை மிகவும் உலுப்பியதுடன், அவர் இறக்கும் வரைக்கும் நோன்பிருப்பதாகக் கூற வைத்தது.

ஷர்மிலா தற்கொலை செய்ய முயற்சித்ததாக அதிகாரி ஒருவர் குற்றம் சாட்டியதுடன், அவரை இம்பால் சுஜீவா சிறைச்சாலைக்கு அனுப்பினார். இரண்டரை மாதங்களுக்குப் பின்பு ஷர்மிலா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதுடன், அங்கே அவருக்கு ஒரு நாளைக்கு 3 தடவைகள் காலை 10.00, மதியம் 12.00, இரவு 9.00 மணி என மூக்கு வழியாக உணவு ஊட்டப்படுகின்றது. "எனக்குப் பசிக்கவில்லை. திரவ உணவு எனது வயிற்றை நிரப்பி வைத்திருக்கின்றது" என ஷர்மிலா குறிப்பிடுகின்றார்.. அவருக்கு உணவூட்டப்படும் பிளாஸ்ரிக் குழாயானது, அவரது கழுத்திற்கு அண்மையாகத் தொங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால் அது அவரை நோகடிக்கவில்லை. "இக்குழாயானது எனது உடலின் ஒரு பகுதியாகிவிட்டது" என ஷர்மிலா கூறுகின்றார்.

ஆங்கிலத்தில் நிறுத்தி நிறுத்தி பேசுகின்ற ஷர்மிலா, தற்போதும் பேசக்கூடிய மனநிலையில் இருக்கின்றார். ஒன்பது பிள்ளைகளில் இளையவளாக இருந்த போதும் தான் தனிமையான பிள்ளையாக வளர்ந்ததாகக் கூறுகின்றார். முன்பு மரக்கறித் தோட்டத்திலே உள்ள மரக்கறிகளைப் பறித்து வந்து, அவைகளைப் பச்சையாக உண்பதில் நேரத்தை செலவழிப்பார். அத்தோடு கோழிகள் வளர்த்து, அவைகளின் முட்டைகளை விற்றார். அந்தப் பணத்தை உள்ளூரில் உள்ள கட்புலனற்றோர் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தார். கல்வி ரீதியாகப் பெரிதும் ஈடுபட்டிருக்கவில்லை. பாடசாலையின் பின்பு அவர் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்திற்கான ஓர் தொழில்பயிற்சிக் கற்கைநெறியை மேற்கொண்டார். இறோம் சிங்கஜித் எனும் 14 வயது சகோதரருடன் நெருக்கமாக இருந்தார். அவர்களது பலசரக்குக் கடையை நடத்துவது அவர்களுடைய பெற்றோர்களது வேலையாக இருப்பதனால், சகோதரனே ஷர்மிலாவில் கவனம் செலுத்தினான். ஷர்மிலா பிறந்தபொழுதே, அவளின் தாயிடத்தில் தாய்ப்பால் வற்றிவிட்டதால் சிங்கஜித் அவனுடைய சிறிய சகோதரியை அயலில் உள்ள தாய்மாரிடம் எடுத்துச் சென்று அவர்களைக் கொண்டு பாலூட்டுவித்தான். அதற்குப் பதிலாக அவர்களுடைய வீட்டு வேலைகளைச் செய்து கொடுத்தான். இன்று கூட சிங்கஜித் ஷர்மிலாவின் பக்கத்தில் நிற்கின்றான். அவனின் சகோதரியின் போராட்டத்திற்கு ஆதரவு அளிப்பதற்காக ஓர் அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றிய விவசாய உத்தியோகத்தர் வேலையையும் விட்டு விட்டு வந்திருக்கின்றான். "அவன் எனது காவலன் போல் இருக்கின்றான்" என ஷர்மிலா கூறுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷர்மிலா தனது மனோவலிமையைத், தனது பாட்டியாராகிய இறோம் ரொன்சிஜா தேவியிடம் பெற்றுக் கொண்டதாக அழுத்தியுரைக்கின்றார். ரொன்சிஜா தேவி 2007 இல் இறந்து போனார். அரசின் மகாராஜா சுராசான்ட் மற்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டதற்கு எதிராகப் பெண்கள் போராட்டத்தை நடத்தினர். அவ்வாறு 1939 ஆம் ஆண்டு போராட்டம் நடத்திய நுபி லான் இயக்கத்தின் ஒரு பகுதியாக அவர் இருந்திருந்தார். "என்னுடைய பாட்டியார் கல்வி கற்கவில்லை. ஆனால் அவரிடம் அரசியல், பொருளாதாரம் குறித்த அறிவு இருந்தது." என வைத்தியசாலையில் தனக்குப் பக்கத்தில் இருக்கும் தாதி ஒருவரால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட போர்வையை இழுத்துக் கொண்டே ஷர்மிலா கூறுகின்றார்.

அவருடைய அறையிலே இன்னும் பல அன்பளிப்புகள் உள்ளன. ஒரு படப்பிடிப்பாளரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட சிவப்பு வெள்ளை நிறத்தினாலான அசாமிஸ் கம்ச்சா Assamese gamcha, வேறொரு தாதியால் அவருக்கு கொடுக்கப்பட்ட மீரா பாய் சிலை Meera Bai என்பன அந்த அறையிலே இருந்தன. அவர் ஆரோக்கியமற்ற பலவீனமான உடலைக் கொண்டிருந்தாலும் உற்சாகமாகக் காணப்பட்டார். யோகாசனம் செய்வதுடன், கவிதை எழுதுவதில் நேரத்தை செலவிடுகின்றார். கடந்த மாதம் ஷர்மிலாவின் 12 கவிதைகளை சமாதானத்தின் நறுமணம் என அழைக்கப்பட்ட ஓர் தொகுதியாக சுபான் (Zubaan) வெளியிட்டது.

அந்த அறையிலே ஓர் இரும்புக் கட்டிலிலே புத்தகங்கள் குவிந்து கிடக்கின்றன. அவருக்கு விருப்பமான நேரச் செலவழிப்பாக வாசிப்பு இருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். "ஏதாவது புத்தகங்களை நான் அனுப்பி வைப்பதற்கு விருப்பமா எனக் கேட்டேன்." "இல்லை நான் வாசித்துக் களைத்து விட்டேன்" என அவர் பதிலளித்தார்.

Khushwant Singh, ஓர் Khalil Gibran மற்றும் ஓர் Chetan Bhagat ஒரு கட்டுப்புத்தகத்தில் சுட்டிக்காட்ட முடியும். "அநேகமான புத்தகங்கள் எனக்கு எனது காதலராலேயே அன்பளிப்புச் செய்யப்பட்டன" என அவர் கூறினார். இப்பொழுதுதான் முதற் தடவையாக அவரது வாழ்வில் ஒருவர் இருப்பதைக் கேள்விப்பட்டேன். நான் தயங்கினேன். ஆனால் ஷர்மிலா அவரைப் பற்றிப் பேசுவதில் தெளிவாகவும், ஆர்வமாகவும் இருந்தார். அவர் கேரளாவிலுள்ள ஒர் பிரித்தானியக்காரர். Deepti Priya Mehrotra ஆல் எழுதப்பட்டு, பென்குயினால் வெளியிடப்பட்ட, மணிப்பூரிப் போராட்டம் தொடர்பான (2009) புத்தகமாகிய Burning Bright, இல் (எரியும் பிரகாசம்) ஷர்மிலாவைப் பற்றி அறிந்திருந்தார். அவர் ஓர் புத்தகத்தைப் படித்த பிற்பாடு எனக்கு ஓர் கடிதத்தை எழுதினார். அப்பொழுதிலிருந்தே நாங்கள் கடிதம் பரிமாறிக் கொள்கின்றோம்." என ஷர்மிலா வெட்கத்தோடு குறிப்பிட்டார்.

ஆனால் அவர்கள் இருவரும் இன்னும் சந்திக்கவில்லை. அவர் ஷர்மிலாவைப் பார்ப்பதற்கான அரசாங்கத்தின் உத்தரவிற்காகக் காத்திருக்கின்றார். என்னுடைய செல்லிடத் தொலைபேசியில் இருந்து அவருக்குத் தொலைபேசி அழைப்பை விடுத்து, ஷர்மிலா அவரை விரும்புவதாகச் சொல்லுமாறு என்னைச் சொல்லுமாறு கேட்கின்றாள். நானும் அவ்வாறே செய்து அவருடைய சொற்களை நான் எதிரொலிக்கிறேன். ஷர்மிலா தொலைபேசியில் பேசவில்லை. முகத்தைப் புத்தகத்தின் பின்னே மறைத்துக் கொண்டிருக்கின்றார். திடீரென்று ஷர்மிலா பதின்ம வயதுக்காரி போலக் காணப்படுகின்றார்.

நான் தொலைபேசியை வைத்து விட்டேன். ஷர்மிலா வெளிறிப் போய்க் காணப்படுகின்றார். மீண்டும் அவர் அந்தப் புத்தகத்தால் தனது முகத்தை மறைத்து விடுகின்றார். ஆனால் இந்தமுறை அவர் அழுகின்றார். "நான் அவனை இழக்கின்றேன். நான் அவனோடு தொடர்பில்லாமல் இருக்கின்றேன். அவர்கள் அவனுக்கு விரைவில் அனுமதியளிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்" எனக் கூறினார்.

"உத்தரவு எதுவாக இருப்பினும் சுலபமாக கொடுக்கப்படமாட்டாது. அவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> "புரட்சியோடு போராடும் ஒர் மாநிலத்திலிருந்து குறிப்பிட்ட சட்டத்தை அரசாங்கம் அகற்றும் போலுள்ளது... இந்தியா ஒரு நாளைக்கு எனது கேள்விக்கு செவிகொடுக்கும் என நான் நம்புகின்றேன்..."

தூணிலிருந்து தூணுக்கு என்னைச் சந்திப்பதற்காக ஓட வேண்டியிருக்கின்றது. எழுத்தாளரும் செயற்பாட்டாளருமான Mahasweta Devi உத்தரவை மறுத்து விட்டார். நான் ஒர் குற்றவாளியாக இருப்பதால் ஆட்களை என்னைச் சந்திக்க விடுவதில்லை" என அவள் கூறுகின்றாள்.

நான் சுற்றிப் பார்க்கும்பொழுது, புராண ரீதியான காதலர்களான கிருஷ்ணன், ராதா மரச்சிலைகள் எனது கவனத்தைப் பிடித்தன. "இவைகள் அவன் கொடுத்த அன்பளிப்புகளே. தான் கிருஷ்ணக் கடவுள் என்றும், நான் அவனின் ராதா என்றும் அவன் சொல்கின்றான்" என்று சிரித்துக் கொண்டும் அவளின் சுருண்ட தலை மயிரில் கையைத் துலாவிக் கொண்டும் ஷர்மிலா கூறுகின்றார்.

நத்தாருக்கு அவனிடமிருந்தான பரிசாக Santa Claus இன் தொப்பியும் மணியும் கிடைத்தது. புதுவருடப் பரிசாக நாட்காட்டியும், தினக்குறிப்பேடும் வரவிருக்கின்றது எனக் குறிப்பிட்டார். அதற்குப் பதிலாக இரண்டு கவிதைகள் எழுதியிருப்பதாகவும், ஆனால் அவைகள் மணிப்புரியில் உள்ளதால், அவனால் அவற்றை வாசிக்க முடியாது எனவும் வருந்துகின்றார்.

வளரும் பொழுது கூட பையன்கள் மத்தியில் சிறு விருப்பே கொண்டிருந்த ஷர்மிலாவினுடைய புதிய உணர்வுகள் இவைகள். அவர் இப்பொழுது திருமணம் செய்ய விரும்புகிறார். "எனது பாட்டியார் நான் திருமணம் செய்வதைப் பார்க்க விரும்புகின்றார். அத்துடன் நானும் திருமணம் செய்ய விரும்புகின்றேன். ஆனால் எனது கேள்வி பூர்த்தியடைந்த பின்பு மாத்திரமே என்று கூறுகின்றார். இன்னும் புரட்சியோடு போராடும் ஒர் மாநிலத்திலிருந்து குறிப்பிட்ட சட்டத்தை அரசாங்கம் அகற்றும் போலுள்ளது. நான் ஒர் தியாக வீராங்கனையாக இடம்பெற விரும்பவில்லை. இந்தியா ஒரு நாளைக்கு எனது கேள்விக்கு செவிகொடுக்கும் என நான் நம்புகின்றேன். அரசாங்கமானது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை இல்லாது செய்ய முடியுமானால் ஏன் அவர்களால் AFSPA யினையும் அவ்வாறு அகற்ற முடியாது?" என தென்கொரியாவின் Gwangju மனித உரிமைகள் விருதையும் திட்டமிடல் முகாமைத்துவத்திற்கான இந்திய நிலையத்தின் ரவீந்திரநாத் தாகூர் சமாதான விருதையும் அண்மையில் வென்றவரான ஷர்மிலா மேற்கண்டவாறு கேட்கிறார்.

இப்போராட்டமானது நீண்டதாகக் காணப்படுகின்றது. நான் விட்டுச் செல்வதற்கு எழுந்தேன். ஷர்மிலா என்னைத் தடுக்கின்றாள். தனது காதலனுக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கும்படி கேட்கின்றாள். (என்னுடைய பிரதியிலே நான் எவ்வாறு அவனைக் குறிப்பிடலாம் என்று ஷர்மிலாவைக் கேட்கின்றேன். தனது காதலன் என அவர் பதிலளிக்கின்றார்) ஆனால் இந்த முறை என்னால் ஷர்மிலாவின் காதலனைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை. எனது இறுதிப் பார்வையானது ஏமாற்றங்கள் நிறைந்த ஒரு முகமாகவே இருந்தது. அத்துடன் மூக்கிற்குக் குழாய் பொருத்தப்பட்டதாகவும் இருந்தது.■

http://029atoz.blogspot.com/2009/11/iron-woman.html
Irom Sharmila Chanu, Manipur's Iron lady


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் அரசியலில் பங்குபற்றல் - ஓர் மறுமதிப்பீடு



PARTICIPANTS IN THE ALL-ASIAN WOMEN'S CONFERENCE, JANUARY 1931, LAHORE, INDIA

பெண்கள் அரசியலில் பங்குபற்றுவது என்பது புதிதான விடயமல்ல. புராதன காலங்களிலும், இடைக்காலங்களிலும் அவர்களின் ஆட்சி முக்கியமாகின்றது. பின் காலனித்துவ காலங்களிலும் அரசியலில் பெண்களின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது. ஆனால் புராதன காலங்களில் பெண்கள் தேர்தலிற்கு நியமிக்கப்படவில்லை. பெண்கள் தேர்தலில் நிற்பதற்கு எந்தக் கட்சியும் முழு ஆதரவு தெரிவிக்கவில்லை. ஆனால் தற்போது பெண்களின் பங்களிப்பும் முடிவெடுக்கும் தன்மைகளில் அவர்களின் கருத்துகளும் சமூகச் சீர்திருத்த வெற்றிகளுக்கு முக்கியமானதாகக் காணப்படுகின்றது. நவீன இலங்கையில் பெண்களின் அரசியற் பிரவேசமானது பெண்கள் அமைப்புகளினூடாக மாத்திரமல்லாது, முக்கிய அரசியற் கட்சிகளினூடாகவும் இருந்து வருகின்றது.

பெண்களுக்கு அரசியல் அதிகாரம் கொடுப்பதென்ற அடிப்படை உண்மையை ஏற்று, முன்னுரிமை கொடுப்பது தெற்காசிய நாடுகளில் குறிப்பாக இலங்கையில் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. 1975 இல் உலகச் செயற்திட்டம், அரசியல், பொது அமைப்புகளின் ஊழியர் அமைப்பு, மற்றும் அமுக்கக் குழுக்களில் பெண்களின் பங்களிப்பின் அவசியத்தை வலியுறுத்தியது. பின்பு நைரோபி மாநாட்டில் அரசியற் கட்சிகள் அதிக எண்ணிக்கையான பெண்களைத் தேர்தலில் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது. 1995 இல் நடைபெற்ற பீஜிங் சர்வதேச பெண்கள் கருத்தரங்கு பெண்களுக்கான அதிகாரப் பகிர்வினை விவாதித்தது. இது, அதிகாரம் சம்பந்தமாகப் பெண்கள் சிறுபான்மையினராகக் கருதப்பட்டதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் காட்டியது. ஆகவே பல்வேறு அரசாங்கங்களினால் பெண்களின் அரசியல் பங்குபற்றுதலை அதிகரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஜனநாயக அடிப்படையிற் கிடைக்கும் நன்மைகளை மாத்திரம் பெறக் கூடியவளாகப் பெண் இருக்கக் கூடாது. அதற்கு மாறாக அவள் துரித பங்கேற்பவளாகவும், தனக்கும் தனது சமூகத்திற்கும் பாரிய நடைமுறைகளைச் செயற்படுத்துபவளாகவும் இருக்க வேண்டும். பொதுச் சேவைகளில் குறிப்பாக சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளில் பெண்களின் ஈடுபாடு பாராட்டுதற்குரியதாகவும், அத்துடன் சமூகத்தில் ஒட்டுமொத்தப் பெண்களின் தரத்தை உயர்த்துவதற்கும் அது காரணமாகவும் இருக்கும். இலங்கையானது பல்லின மக்களைக் கொண்டதாகவும் அதேநேரம் முழுச் சனத்தொகையில் பெண்கள் 52 வீதமாகவும் காணப்படுகின்றனர்.

(Latest Census of Sri Lanka, 2009)

பெண்ணிலைவாதிகளின் கருத்தின்படி பெண்களின் உரிமைகளுக்கு எதிராகப் பாரம்பரிய கலாசாரத் தன்மைகள் காணப்படுகின்றன. இலங்கையிலும் பின்வரும் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு பல்வேறு வகையாக விவாதிக்கப்பட்டு வருகின்றன.

- பெண்மைத் தன்மையானது பெண்ணை அரசியலில் பங்குபற்றுவதைத் தடுக்கின்றது.
- பெண்கள் குழந்தை பெறுபவர்களாகவும் பழமைவாதிகளாகவும் நம்பப்படுகின்றனர்.
- குறைந்த மூர்க்கத்தனமும் அதிக ஆளுமையுடனும் தொடர்புபட்டவர்கள்.
- குறைந்த பிரச்சினைகளை உடையவர்கள்.

ஆனால், சமகாலச் சூழ்நிலையில் மேற்கூறிய பாரம்பரிய, பழமைவாதத் தன்மைகள் சவாலிற்கு உட்படுத்தப் பட்டுள்ளதுடன் அரசியலில் அங்கீகாரமும் பங்குபற்றுவதற்குரிய முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

## எமது நாட்டில் பெண்களின் வளர்ச்சியும் சாதனைகளும்

இலங்கையில் அம்மாவும் மகளும் சேர்ந்து அரசியலில் உச்ச பதவியை வகித்த தன்மை அசாதாரணத் தன்மையாகவும், இது வரலாற்றில் பதியப்பட்டதாகவும் உள்ளது.

பொதுவாக அரசியல் என்பது அதிகாரத்திற்குரிய போட்டியாகக் கணிக்கப்படுகின்றது. அதிகாரமானது அரசியல் உறவுகளின் தன்மைகளை மாற்றியமைக்கக் கூடிய சக்தி வாய்ந்ததாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜனநாயகம் என்பது, அரசியலில் பங்குபற்றுவதோடு சமூக உறுப்பினர்களின் நடவடிக்கைகள், ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வது, பொதுக் கோட்பாடுகளை உருவாக்குவதில் நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ ஈடுபடுத்துதல் போன்றவற்றைக் கூறலாம். இதன் விளைவாகப் பின்வருவன பிரதிபலிக்கக் கூடும்.

- ஜனநாயகத் தன்மை வாய்ந்த தொகுதி வாரியான நிர்வாகத் தன்மை.
- ஒவ்வொரு நாட்டிலும் முடிவெடுக்கும் அமைப்பானது அதிகாரம் செலுத்தும் குழுவாகக் காணப்படுகின்றமை.

சிறப்பான ஜனநாயக நடைமுறைச் செயற்பாட்டிற்கு வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஆண், பெண்களின் சம பங்களிப்பு முக்கியமானது. அவ்வாறான பங்களிப்பின் மூலம் பின்வருவனவற்றை ஒரு நாட்டின் அபிவிருத்தியில் காணக்கூடியதாக இருக்கும்.

- அரசியலில் உயர்வானதும், நீண்டு நிலைத்த முடிவுகளை எடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.
- அரசியலில் பெண்களின் பங்களிப்புக் குறைந்தது 05 சதவிகிதமாகவேனும் இருக்க வேண்டும்.
- உயர் பதவிகளிலும் நிறுவனங்களிலும் பெண்களின் சிறப்பான பங்குபற்றலானது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகச் செயற்பாட்டில் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

இலங்கை அரசியலில் பெண்களின் பங்குபற்றுதலானது இரு கட்டங்களாகக் காணப்படுகின்றது.

1. ஆரம்ப அரசியல் வளர்ச்சியிலிருந்து 1931 வரை.
2. 1931 இலிருந்து 1977 வரை.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரையும் சர்வதேச, பிராந்திய உள்நாட்டுச் சூழ்நிலைகளில் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெற்றன. அரசியல் நடைமுறைகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. தேசிய அளவில் பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் மிகவும் முக்கியமானது. அவற்றிற்கான காரணங்கள் பின்வரும் தலைப்புகளில் ஆராயப்படலாம்.

## கல்வி

இலங்கையில் பெண் கல்வியின் வளர்ச்சி பல்வேறு துறைகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இக்கல்வியின் பயனால் அரசியலில் பெண்கள் ஆண்களுக்குச் சமமான அந்தஸ்தை அடையக் கூடியதாக இருக்கின்றமை கண்கூடு. ஆகவே தான் கல்வி மிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இலங்கையில் பெண்களின் கல்வி வளர்ச்சி அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. 1881 இல் இருந்து தொடர்ந்து கல்வியில் வளர்ச்சியும் அத்துடன் பெண்கள் கல்வியறிவு பெறுவதில் மிகவும் திருப்தி உடையவர்களாகவும் இருந்தனர். இதற்கு முக்கிய காரணமாக அமைவது காலனித்துவ அரசுகளின் கிறிஸ்தவக் கல்வி முறைமையாகும். தாராண்மை எண்ணங்களும் தேசியவாதக் கருத்துகளும் மிக விரைவில் பரவுவதற்கு ஏதுவாக இருந்தது. காலனித்துவ ஆட்சியாளர்கள் இலகுவில் கல்வி மூலம் வற்புறுத்தி மக்களை மதமாற்றம் செய்யக் கூடியதான சூழல் இருந்தது. ஆங்கிலேய ஆட்சியில் இலங்கையில் தமிழர்களினுடையதும் சிங்களவர்களினுடையதும் ஆங்கிலக் கல்வியானது சமூகங்களில் ஏற்றத் தாழ்வுகளுடன் பரவியிருந்தது. இதனால் சமூக அசைவு, அந்தஸ்து, மரியாதை, அரசியல் சட்டம் என்பவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன.

பால்நிலைக் கருத்துகள், காலனித்துவக் கல்வி முறையில் பின்னிப் பிணைந்து, குடும்ப மயமாக்கப்பட்ட விக்டோரியன் கருத்துகள் ஆதிக்கம் செலுத்தின. பெண்கள் மருத்துவர், தாதியர், ஆசிரியர் போன்ற தொழிற் கல்விகளுக்குச் செல்வது பராமரிப்புத் தன்மையை மற்றும் சேவை மனப்பான்மை போன்றவற்றைப் பிரதிபலிப்பதாகவே இருந்தது.

உயர் வர்க்கத்தைச் சேர்ந்த கல்வி கற்ற பெண்கள் சமூக சேவையிலும் அரசியல் உணர்வலைகளை ஏற்படுத்துவதிலும் முன்னோடிகளாக இருந்தனர். எப்படி இருந்தும், சமூகத்தில் கிறிஸ்தவ மதக் குழுக்களுக்கு எதிர்ப்பிருந்தது. இங்கு மிகவும் சக்தி வாய்ந்த பௌத்த, இந்து மறுமலர்ச்சி இயக்கங்களும் சிறிய அளவில் முஸ்லீம் இயக்கங்களும் உருவாகின. 1888 காலகட்டத்தில் இலங்கையில் மறுமலர்ச்சி இயக்கங்களான இலங்கைத் தேசிய அமைப்பும், மது ஒழிப்பு இயக்கமும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை பெண்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவு அரசியல் உணர்வுகளை ஏற்படுத்தின.

இலங்கைத் தேசியக் காங்கிரசின் உறுப்புரிமை ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாக வழங்கப்பட்டது. பெண்களும் இவ்வியக்கங்களில் பங்கு கொண்டார்கள். இதுவே பெண்கள் முதன் முதலில் தேசிய அளவில் அரசியலில் பங்கேற்கும் சந்தர்ப்பமாகவும் இருந்தது. இதன் அடிப்படையில் முதன் முதலாக டாக்டர் நல்லம்மா முருகேசு என்ற பெண்மணி இலங்கைத் தேசியக் காங்கிரசின் முதல் பொதுக் கூட்ட அமர்வில் பங்கு கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகா குலங்கர அமைப்பு இலங்கை தேசியக் காங்கிரசுடன் இணைக்கப்பட்டது. இது தேசிய அரசியல் அமைப்பின் நடவடிக்கைகளில் பெண்களை ஈடுபடுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. அங்கு அதிக அளவு அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடிய பெண்மணிகள் இருந்தார்கள். அவர்களின் தேசத்திற்கான அர்ப்பணிப்புத்தன்மை ஆண்களுக்கு ஈடாக இருந்தது. இலங்கைத் தொழிற் கட்சியில் சில பெண் உறுப்பினர்கள் (1928) முடிவெடுக்கும் குழுவில் இருந்தார்கள்.



வைத்திய கலாநிதி. மேரி இரட்ணம் மற்றும் பிள்ளைகள் றொபின் இரட்ணம், ஹெலன்

டொரீன் ஜங் என்னும் இங்கிலாந்து நாட்டுப் பெண்மணி சிறந்த ஆளுமை படைத்தவராகத் திகழ்ந்தார். மாத்தறையில் உள்ள சுஜாதா வித்தியாலயத்தின் அதிபராகிப் பல சமூக சேவைகளை மேற்கொண்டார். இவர் சத்திர சிகிச்சை நிபுணரும் அரசியல்வாதியுமான டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்க என்பவரைத் திருமணம் முடித்தார். காலனித்துவ ஆட்சிக்கெதிரான போராட்டங்களில் பங்குபற்றினார். சுதந்திரத்திற்குப் பின்பு 1952 - 1956களில் டொரீன் அக்குரஸ்ஸ தேர்தல் தொகுதியில் போட்டியிட்டுப் பாராளுமன்ற உறுப்பினராகினார்.

இருபதாம் நூற்றாண்டுகளில் பல்வேறு பெண்கள் அமைப்புகள் பல்வேறு அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டன. 1942 இல், இடதுசாரிக் கட்சிகளும் பெண்களின் பங்களிப்புகளை வரவேற்றன. டாக்டர் மேரி இரட்ணம் என்ற இலங்கையரைத் திருமணம் செய்த கனேடியப் பெண் மகப்பேற்று மருத்துவராவார். தீவிர சமூக சேவகியான இவர் பல்வேறு பெண்கள் அமைப்புகளை உருவாக்கிப் பல விழிப்புணர்வுச் செயற்திட்டங்களை மேற்கொண்டார். அவையாவன:

- இலங்கைப் பெண்கள் கூட்டமைப்பு (1904).
- தமிழ் பெண்களின் அமைப்பு (1909)
- கிறிஸ்தவப் பெண்கள் அமைப்பு.
- பெண்கள் வாக்குரிமை அமைப்பு (1927)

டாக்டர் மேரி இரட்ணம், 1937 இல் அரசியலில் முழு நாட்டமுடைய முதல் பெண்மணியாக கொழும்பு மாநகர சபையின் ஆளுநராகப் பதவியேற்றார். இக்கால கட்டங்களில் சமூக சேவையிலும் அரசியலிலும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் வெளிநாட்டுப் பெண்களேயாவார்கள். அவர்களுள் சில பேர் கல்வியியலாளர்களாகவும் இருந்தனர். பிரம்ம ஞான சபையினர் கல்வியில் அதிக அளவு அக்கறை காட்டினர்.

ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த இன்னோர் பெண்மணியான ஹெடி சைமன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சோசலிசக் கொம்யூனிசவாதியுமான பீட்டர் கெனமனைத் திருமணம் முடித்தார். இவர் தொழிலாளர் அமைப்பின் பெண்களுடன் நன்கு பரீட்சயம் உள்ளவர். சர்வதேச வாக்குரிமையின் விளைவுகள் இலங்கை அரசியற் சட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அத்துடன் இது இலங்கைப் பெண்களின் அரசியல் வலுவூட்டலில் ஒரு மைல் கல்லாகவும் திகழ்ந்தது.

1923களில் மட்டக்களப்புச் சட்டசபை உறுப்பினரான ஈ.ஆர். தம்பிமுத்து, வாக்களிப்பதற்குப் பால்நிலை தொடர்பான தகுதியற்ற தன்மையை இல்லாமற் செய்தார். அத்துடன் வாக்களிப்பதற்குத் தகுதியுடையவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்கச் செய்தார். ஆனால் சட்ட சபை உறுப்பினர்கள் இப்பிரச்சினையில் அதிக அக்கறை காட்டவில்லை. ஏ.ஜி. குணசிங்கவினாலும் தொழிலாளர் கட்சியினாலும் எடுக்கப்பட்ட முயற்சியினால் பெண்களுக்கு இருக்கின்ற வாக்களிக்கும் தன்மையை உறுதிப்படுத்தப்பட்டது. வாக்களிக்கும் உரிமைப் போராட்டத்திற்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் இது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது. அவர்களின் பங்குபற்றலும், பங்களிப்பும் குடும்ப மற்றும் தேசிய வாழ்க்கையிலும் வாக்குரிமையை நிலைநாட்டுவதிலும் பொறுப்புள்ளவர்களாகவும் இருந்தார்கள்.

1927களில் இலங்கை அரசியலமைப்புச் சட்டங்களை ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்கு டொனமூர் கொமிசன் நியமிக்கப்பட்டது. தொழிலாளர் கட்சியானது தெரிவு செய்த டறமன்ட் சீல்ட் என்பவரின் ஆதரவுடன் முக்கியத்துவம் பெற்றதாகின்றது. 1927இல் பெண்களுக்கான வாக்குரிமை அமைப்பு உருவாக்கப்பட்டது. திருமதி ஈ.ஆர். தம்பிமுத்து, டாக்டர் மேரி இரட்ணம், திருமதி எஸ்.டி. பண்டாரநாயக்கா, திருமதி அக்னஸ், டீ. சில்வா ஆகியோர் இக்கூட்டமைப்பின் தீவிர உறுப்பினர்களாவார்கள். பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை ஏற்றுக் கொண்டனர். இதுவே பெண்களுக்கான அரசியல் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு முதன்முதலில் கூடிய அமுக்கக் குழுவாகும். 1931 ஆம் ஆண்டுப் பகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. பெண்கள் சுகாதாரக் கல்வி மற்றும் சமூக நலன் என்பவற்றில் விசேட பங்களிப்புச் செய்யக் கூடியதாக இருக்க வேண்டும் என விவாதிக்கப்பட்டது. அத்தோடு இலங்கைப் பெண்கள் இலகுவில் சர்வதேச வாக்குரிமையைப் பெற்றுக் கொள்வதற்குப் போராட வேண்டிய தேவையும் குறைவாக இருந்தது.

இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் வன்முறைகளோ, போராட்டங்களோ இன்றி பேச்சுவார்த்தைகளின் மூலம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இடதுசாரி இயக்கங்கள் தோன்றி வளர்ச்சியடையும் வரைக்கும் உண்மையான அரசியல் போராட்டங்கள் இருக்கவில்லை. ஆனால் இடதுசாரி இயக்கம் எப்போதும் சிறுபான்மையாகவே இருந்தது. ஒருபோதும் அரசியலில் முன்னணி வகிக்கவில்லை.

## பெண்களின் வாக்குரிமை

இலங்கையில் பெண்களின் அரசியற் பங்குபற்றுதலென்பது பெண்கள் தமது இருபத்தியோராவது வயது தொடக்கம் வாக்குரிமை அளிப்பதற்கான தகுதியைப் பெற்றமையில் இருந்து ஆரம்பமாகியது. இதன் பின்னரே இலங்கைப் பெண்கள் அரசியலில் துரிதமாகப் பங்குபற்றத் தொடங்கினர்.

ஜனநாயகம் முதிர்ச்சியுற்ற மேற்கத்தைய நாடுகளிலும் 1931 இற்குப் பின்புதான் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டது. பிரான்சில் 1945களிலும், சுவிஸ்லாந்தில் 1958களிலும் பெண்களுக்கான வாக்குரிமை கிடைத்தது. சர்வதேச வாக்குரிமைத் தன்மையினால் இரகசிய வாக்களிக்கும் முறை ஐரோப்பா அல்லாத நாடுகளில் அதாவது இலங்கையிலேயே முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கைத் தேசியக் காங்கிரசில் பேசும்போது எஸ். டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்கா பின்வருமாறு கூறினார்.

"இலங்கைப் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்ததில் நான் பெருமைப்படுகின்றேன். இலங்கைப் பெண்களிடம் பொதுவாக விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. காங்கிரசின் மறுசீரமைப்பில் பெண்கள் முக்கிய பங்கு வகிப்பதோடு அவர்களுக்குரிய இடங்களையும் காங்கிரசில் வகிப்பார்கள் என நான் நம்புகிறேன்."

ஆனால், இவைகள் எல்லாம் இலங்கையின் அரசியல் களத்தில் பெண்களின் அந்தஸ்தை மாற்றவில்லை. ஜே.எச். மீடெனிய என்பவரின் இறப்பிற்குப் பின் அவரின் மகள் அட்லீன் மொலமுறே, தேசியச் சட்டசபைக்குள் நுழைந்தார். இவர் 1931 ஆம் ஆண்டு கார்த்திகை 14 நடைபெற்ற றுவன்வெலத் தேர்தலில் 2/3 பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுச் சட்டசபைக்குச் சென்றார். முதன் முதலாகத் தேசியச் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற முதல் பெண் என்ற பெருமையையும் பெற்றார். அதன் பின்பு 1932 இல் நேசம் சரவணமுத்து என்பவர் தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசியலில் 1947 அவிசாவளை தேர்தல் தொகுதியில் குசும குணவர்த்தனா வெற்றி பெற்ற பின்பு "றெண்ட்" என்றும் 'Stopgap' என்றும் சொல்லக்கூடிய பெண்கள் குழு அரசியலில் உருவாகியது. பிலிப் குணவர்த்தனா வெளியேறிய பின்னர் 1948 இல் இலங்கரத்னா பதவி விலக்கப்பட்ட பின்பு அவரின் மனைவி தமரகுமாரி இலங்கரத்னா கணவனுக்குப் பதிலாகத் தெரிவு செய்யப்பட்டார். சுனீத்திரா இரணசிங்க அவரின் தகப்பனாரின் சடுதியான இறப்பிற்குப் பின் நவம்பர் 1977 ஆம் ஆண்டு பாராளுமன்றம் சென்றார்.

தெற்காசியாவில் குறிப்பாக இலங்கை அரசியலில் கணவன் - மனைவி இணைப்பு ஒரு விசேட தன்மையாகக் காணப்பட்டது. இது ஏ.எப். மொலமூர் அரசசபையில் 1932களில் சேர்ந்தபோது அடலீன் மொலமூரும் கணவருடன் சேர்ந்து கொண்டார்.



ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா



சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க

சுதந்திரத்திற்குப் பின்பு அநேகமான கணவன் - மனைவி பிணைப்புகள் அரசியலில் காணப்பட்டன.

- டொரின் விக்கிரமசிங்க - விக்கிரமசிங்க 1952
- பிலிப் - குசும குணவர்த்தனா
- T.B. இலங்கரட்ணா - தமரா இலங்கரட்ணா (1960 - 1964)
- லெஸ்லி - விவியன் குணவர்த்தனா (1970 - 1977)

இலங்கைப் பெண்கள் மிகவும் திறமைசாலிகளாக இருந்தும் கூட அவர்களின் அரசியல் பிரவேசத்திற்கு முக்கியமாகக் குடும்பப் பின்னணியே ஆதரவு வழங்கியது எனலாம். விமலா கன்னங்கராவும், சுஜாதா தர்மவதனாவும், அரசியலிற்கு வருவதற்கு குடும்பப் பின்னணியே வழிவகுத்தது. 1947 ஆம் ஆண்டு செனற் சபை, பெண்கள் தேர்தலில் நிற்காமலேயே அரசாங்க நடைமுறைக்குள் வருவதற்கு வழிவகுத்தது. அதன் தொடக்க காலத்திலிருந்து 1947 கார்த்திகை, 1971 ஐப்பசி வரைக்கும் அனேக பெண்கள் இங்கு சேவை செய்தனர். இலங்கை 'மகிழ சமிர்த்தி' நாட்டின் இடதுசாரித் தலைவர்களுக்கு ஒரு பயிற்சிக் களமாக அமைந்தது. இவ் இயக்கத்தில் டொரின் விக்கிரமசிங்க மிகவும் சிறந்த பங்களிப்பைச் செய்தார்.

### சுதந்திரத்திற்குப் பின் பெண்களின் நிலை

இலங்கை சுதந்திரமடைந்த பின் பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. துரித நவீனமயப்படுத்தலும் பெண்களின் உயர் கல்வியறிவு பெற்ற தன்மையும், பெண்களின் அரசியற் பங்களிப்பில் பாரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. எல்லா நிலைகளிலும் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களின் அரசியற் பங்கேற்பு அமைந்திருந்தது. ஆண்களினதும் பெண்களினதும் கல்வியறிவு ஒரே சமநிலையில் இருந்தது. இதற்கு விதிவிலக்காகத் தோட்டத் தொழிலாளப் பெண்களும் இஸ்லாமியப் பெண்களும் இருந்தனர்.

இலங்கையில் பெண்களின் அரசியல் நடவடிக்கைகளைச் சர்வதேச முன்னெடுப்புகளுடனும் வரலாற்று இயக்கங்களுடனும் தொடர்புடையதான கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டியுள்ளது. 1952களின் ஆரம்பங்களில் ஐக்கிய நாடுகள் சபை பெண்களின் அரசியல் உரிமைகளில் கவனம் செலுத்தியது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை கிடைக்க வேண்டும் என்பதை 1967 இல் ஐக்கிய நாடு ஏற்றுக் கொண்டது. 1975ஆம் வருடம் "சர்வதேசப் பெண்கள் வருடம்" எனப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகடனப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1975 - 1985 வரைக்கும் "பெண்களுக்கான பத்தாண்டுகள்"என பிரகடனப்படுத்தப்பட்டது. பெண்களுக்கான இப்பத்தாண்டுகளானவை பெண்களுக்கிடையிலான அதிஉயர் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் அவற்றில் மிக முக்கிய ஒன்றாக அவர்களின் அரசியல் பங்குபற்றுதலை அதிகரிப்பதாகவும் அமைந்தது. 1985 இல் நைரோமியில் நடந்த மாநாட்டில் அரசு, அரசியல் மற்றும் சிவில் உரிமைகளைப் பற்றிய அறிவை அதிகரிக்கலாம் என்பதை வலியுறுத்தின. கல்வியியலாளர்கள் முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டியது யாதெனில் பெண்கள் அரசியலின் பிரதான நீரோட்டத்தில் சேர்வது முக்கியமல்ல. ஆனால் "முக்கிய நீரோட்டத்தை மாற்றுவதோடு பெண்களுக்கு சமத்துவத்தையும் நியாயத்தையும் வழங்குதல் வேண்டும்".

இலங்கையில் 1978 இல் பெண்கள் விவகாரத்திற்கென நிலையமொன்றையும், (Women's Bureau) 1983 இல் பெண்கள் விவகார அமைச்சையும் ஏற்படுத்திப் பெண்களின் அரசியல் பங்குபற்றுதலையும் அவர்களின் பிரச்சினைகளையும் கையாண்டது. தற்பொழுது குழந்தைகள் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சானது (Child Development and Women Empowerment Ministry) பெண்களின் பங்குபற்றலையும் பிரச்சினைகளையும் கையாள்கின்றது. திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இலங்கையின் முதல் பெண் அரசியல் தலைவராக விளங்கினார். அவர் ஆரம்ப காலங்களில் பல்வேறு அமைப்புகளில் பங்கு பற்றியிருந்தார். அவருடைய கணவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கா இறந்த பின்னரே அவர் அரசியலுக்குள் பிரவேசித்தார். 11 வருடங்கள் அரச தலைமைத்துவத்தையும் 05 வருடங்கள் எதிர்க்கட்சித் தலைமைத்துவத்தையும் ஏற்று ஜனநாயகப் பாராளுமன்றத்தின் முதல்ப் பெண் தலைவியாகவும் விளங்கினார். இலங்கைப் பாராளுமன்றத்தின் பெண் பிரதிநிதித்துவத்தின் குறைந்த நிலையைப் பின்வரும் தரவுகளால் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

1947 - 1.1 வீதம்
1960 - 1.3 வீதம்
1965 - 5.3 வீதம்

திருமதி பண்டாரநாயக்காவின் காலகட்டத்திலும் பாராளுமன்றத்திலோ அல்லது சட்டசபையிலோ பெண்களின் அரசியற் பங்களிப்பில் அதிகரிப்பு இருக்கவில்லை. 1956 இல் பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் விமலா விஜயவர்தனா சேர்த்துக் கொள்ளப்பட்டார். 1977 இல் ஸ்ரீமணி அத்துலத் முதலி அமைச்சரவையில் இருந்தார். பாராளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் பெண்கள் தொடர்ந்தும் குறைவாகவே இருந்தனர். அல்லது சட்டசபையைக் குறைந்த அளவிலேயே பிரதிநிதித்துவப்படுத்தினர். ஆண்களின் அரசியலில் பெண்கள் புகுந்து விட்டார்கள் என்ற கருத்து முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது.

ஜனநாயகப் பாராளுமன்ற முறைமை சரியாக இயங்குவதற்கு அரசியற் கட்சிகளில் பெண்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதொன்றாகும். ஏனெனில், இவ்அரசியற் கட்சிகள் மக்களுக்கும் அரசிற்குமிடையே பிரதான இணைப்புப் பாலமாகத் திகழ்கின்றன. ஆகையால் அரசியற் கட்சிகளின் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பெண்கள் பயன்படுத்துவதோடு உள்ளூர்க் கூட்டங்கள், மாநாடுகள், வாக்களித்தல் எனத் தொடர்ந்து இறுதியாக பாராளுமன்றத்திற்குத் தெரிவாதல் வரையில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

சமகாலத்தில் பெண்களின் அரசியல் உணர்வுகள் அதிகரித்தும் அவர்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் திறனும் பெற்றிருக்கின்றார்கள். அதிகமான பெண்கள் அரசியற் கட்சிச் செயற்பாட்டில் பங்குபற்றி வருவதுடன் குறிப்பிடத்தக்க அளவு ஓர் தொகுதியாகவும் (Constituency) நோக்கப்படுகின்றார்கள். இலங்கைப் பெண்கள் உள்ளூராட்சி அரசியலில் மட்டும் ஆர்வமுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். குறைந்த அளவில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் இலங்கைக்கோ அல்லது தெற்காசிய நாடுகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றிற்கோ புதிதல்ல. ஸ்கன்டிநேவிய நாடுகளில் 30 - 40 வீதப் பெண்கள் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது.

### அரசியலில் பெண்கள் பங்குபற்றும் போது ஏற்படும் பிரச்சினைகள்:

இலங்கை அரசியலில் பால்நிலைப் பாகுபாடு இல்லை என்று இரு முக்கிய அரசியற் கட்சிகளின் தலைவர்களும் உறுதியளித்தனர். ஆனால் பெண்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குவதில் பொறுமை இல்லாதவர்கள் என்றும், அத்துடன் குடும்பப் பொறுப்புகள் பெண்களின் அரசியற் செயற்பாடுகளுக்குத் தடையாக இருக்கும் என்றும் கூறினார்கள். மேலும், பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைவானது என்றும், அது தனிப்பட்ட திறமையில் தங்கி உள்ளதாகவும் குறிப்பிட்டனர். எனினும் எல்லா அரசியற் கட்சிகளும் பெண்கள் அரசியலில் பங்குபற்றுவது தொடர்பாகக் கூறும்போது மேலெழுந்த வாரியான கருத்துகளையும், உள்ளார்ந்த விருப்பின்றியும் பதிலளிக்கின்றனர். பெண்களுக்குக் கட்சியின் ஆதரவைத் தெரிவிப்பதற்குப் பின் நிற்கின்றனர் அல்லது அவர்களுக்குத் தொகுதிப் பங்கீடு செய்வதில் நேர்மையுள்ள முறையில் (Gambling) இருக்கின்றனர். தலைமைத்துவப் பயிற்சிகள் பெண்களுக்கு அளிக்கப்படுவதில்லை. ஆகையால் அரசியல் கட்சிகள் ஆண்களினால் மேலாதிக்கம் செய்யப்பட்டு வருகின்றது. (Except Former SLFP Leadership) நிதிப் பற்றாக்குறை, அதிகரித்து வருகின்ற வன்முறைகள், கலாசாரக் கட்டுக்கோப்புகள் போன்றன பெண்கள் அரசியலில் திறமையுடன் பங்கு பற்றுவதைத் தடுக்கின்றன.

### முடிவுரை

பெண்கள் சமூகத்தில் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியலில் தீவிரமாகப் பங்கு பெறுவதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்றாலும், சமகால அரசியலில் அவர்களின் பங்குபற்றுகை மிகவும் வரவேற்கத்தக்க முக்கிய விடயமாகும். ஆரம்ப காலங்களில் பெண்களின் அரசியற் பங்களிப்பு மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனால் இன்று இலங்கையில் படிப்படியாக அது மாற்றமடைந்து வருவதோடு பெண்களின் பங்களிப்பானது அரசியல், சமூக, கல்வித் துறைகளில் பிரிக்க முடியாத ஒன்றாகி வருகின்றது.

பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதை அதிகரிப்பதற்காக அவர்களுக்கு அரசியற் கல்வியும் பயிற்சிகளும் சமூக மட்டத்தில் சமூக நிறுவனங்களினாலும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களினாலும், ஊடகவியலாளர்களினாலும் மற்றும் கல்வியாளர்களினாலும் நடாத்தப்பட வேண்டும். இலங்கையில் பெண்கள் அரசியலில் பங்கேற்பதற்குச் சட்ட ரீதியான தடை எதுவும் இல்லை. ஆனால் அரசியலில் பெண்களுக்குரிய முக்கியத்துவம் காட்டப்படவில்லை என்பதே உண்மையாகும். அதேவேளை அரசியலில் பங்குபற்றுவதற்கு ஏற்ற புதிய தகுந்த உத்திகளையும், தளங்களையும் கண்டறிய வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

**கலாநிதி அனுசூயா சேனாதிராஜா**

**படங்கள்:** Casting Pearls: Kumari Jayawardena. *The Women's Franchise Movement in Sri Lanka,* Social Scientists' Association, 2001

End Notes

01. ARNOLD WRIGHT (ed), (1997), Twentieth Century Impressions of Ceylon, Asian Educational Service, Delhi.
02. Mc LOSKEY, I.H., (1968), Political Participation, International Encyclopedia of Social Science, L. Sills (ed), New York.
03. CENWOR, (1985), UN Decade for Women Progress and Achievements of Women in Sri Lanka, Colombo.
04. Michael Roberts (ed), (1977), Documents of the Ceylon National Congress and Nationalities Politics in Ceylon, 1929 – 1950, Vol. II, Department of National Achieves, Colombo.
05. ROBERT, N. KEARNEY, (1981), Women in Polities in Sri Lanka, ASIAN SURVEY, Vol. xxi, No. 7, July.
06. KUMARI JAYAWARDENA, (1986), Feminism and Nationalism in the Third World 19th, 20th Centuries, Zed Books, London.
07. Sunday Times, 16th May 1993.
08. Daily News, 20th – 25th May 1993.
09. GERALDINE FORBES, (1998), The New Cambridge History of India, Women in Modern India, Cambridge University Press, Cambridge.
10. SIRIMA KIRIBA MUNE (ed), (1999), Women and Polities in Sri Lanka of Comparative Respective, ICES, Kandy


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காத்திருப்பு...

## சிறுகதை

இதோ, நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எனது கூரை இடிந்து விழுந்து விட்டது. மூன்று நாட்களுக்கு மேலாக பயங்கரமான ஷெல் வீச்சுத் தொடங்கி விட்டது. பயங்கரமான ஷெல் அடிகள்... அதில் ஒன்று என் கூரையில் விழுந்து, முழுக் கூரையையும் அப்பளம் போல நொருங்கிப் பலமான ஆட்டத்துடன் கீழே இடித்து விழுத்தி விட்டது.

என்னைக் கட்டி முடித்ததும் எனக்கொரு கூரை வைக்க இதிலிருந்த குடும்ப அங்கத்தவர்கள் யாவரும், இரு வயதான தம்பதிகள், கணவன், மனைவி, இரு பிள்ளைகள் எல்லோரும்ஒன்றாகி கட்டி முடிக்கப்பட்டு பூசப்படாதிருந்த என்னுள் வந்து யோசனை செய்தது இன்னும் ஞாபகமிருக்கிறது. கணவர் சொன்னார் "இதற்கு அஸ்பெட்டாஸ் சீட் போடுவோம்" என்று. அதற்கு மனைவியோ, "அதால புற்றுநோயும், நுரையீரல் வியாதியும் வருமாம். அதனால கொங்கிறீட் போடுவம் அப்பா" என்று மாற்று யோசனை கூறினாள். மாற்றாக வயதான ஒரு தம்பதியினரில் கணவன் அதாவது வீட்டுக்காரரின் அப்பா கேட்டார் "மகன் இதற்கு கொங்கிறீட் போட்டால் அத்திவாரம் தாங்குமா?"விடையாக மனைவியோ, "ஓம் மாமா, மூன்று மாடி கட்ட நினைச்சுத்தான் அத்திவாரம் போட்டிருக்கம்" மற்றைய தம்பதியின் மனைவி, வீட்டுக்காரரின் அம்மா சொன்னது, "மகள், கொங்கிறீட் பயங்கர சூடு. அதால ஓடு போடுவம். அது தான் நல்ல குளிர்ச்சியாக இருக்கும்". அதற்கு அவளின் கணவனோ, "தூசு, ஒட்டடை படிந்தால் அடிப்பது கஷ்டம் தானே?" என்று அதற்கொரு அபிப்பிராயம் சொன்னார். வீட்டுக்காரரின் அம்மாவோ "ஓடு போட்டு அண்டசீற் அடித்தால் சரிதானே மகன்?" என்று முடிக்கவும், குடும்பத்திலிருந்த இளையவன் தனக்கிருந்த சந்தேகத்தை இப்படியாகக் கிளப்பினான். "அம்மா, அப்படியெண்டால் நாம இப்ப மூணாம் மாடி கட்டுறதில்லையா? நீங்க தானே சொன்னீங்க, கீழ் வீடு மூத்த அக்காக்கும், ரெண்டாம் மாடி தங்கச்சிக்கும், மூணாம் மாடி எனக்கும் எண்டு. இப்ப ஏன் ரெண்டாம் மாடியோட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடு போடப்போறீங்க?" அவனுக்கு வயது நாலு. அவனது பத்து வயது அக்காவோ, "தம்பி அப்பாவும் அம்மாவும் உனக்குப் பிறகு மூணுமாடி வீடு கட்டித் தருவாங்க. இது எனக்கும் நம்மட ரெண்டு வயதுத் தங்கச்சிக்குந் தான்" என்று அவனது வாயை அடைத்தாள். அவளின் கவலை அவளுக்கு. "இந்த வீடு கட்டத் தொடங்கி ரெண்டு வருசமாகுது, இன்னும் முடிக்கக் காணோம்" இப்படியாக எனக்கு ஆயிரத்து நானூற்றுச் சொச்சம் ஓடுகளுடன் ஒரு கூரையும் அதன் கீழ் சீட்டும் அடிக்கப்பட்டது. கூரை போட்டு முடித்த அன்று எனக்கிருந்த ஆனந்தம் அளவிட முடியாதது. அந்தக் கூரையும் ஷெல்லடியில் விழுந்து விட்டது.

இதோ , எனது சுவர் முழுக்கவும் இடிந்து முதலாம் மாடி முழுவதும் உடைந்து விட்டது. இரவு முழுவதும் நடந்த ஷெல் வீச்சில் ஏழு ஷெல்கள் என்னுள் விழுந்து வெடித்ததால் அநேகமான எல்லாச் சுவர்களும் இடிந்து விட்டன. எனக்கு கொஞ்சம் கூட வலிக்கவில்லை. ஆனால் மனதுக்கு மிகுந்த பாரமாகவும், சோகமாகவும் இருக்கின்றது. இந்த வீட்டுக்காரர்கள் போன பின்னர் இரண்டாம் மாடியில் வசித்து வந்த மூன்று குருவிகளும், இருசோடி அணில்களும், நான்கு சோடி புறாக்களும் கூட இரவு விழுந்த ஷெல்லினால் செத்து விட்டன. யார் வந்து அந்த உடல்களை எடுப்பார்கள்? கூரை விழுந்து ஒரு மாதத்திற்குப் பின்னர் வந்து குடியேறிய அந்தக் குருவிக் குடும்பம் இங்கு வந்து ஐந்து மாதங்களாகின்றது. எனக்கு அருகாகப் போகும் ஆயுததாரிகள் சொன்னதிலிருந்து நான் தெரிந்து கொண்டதாவது, பக்கத்துத் தெரிவிலும், ஊரின் மற்றைய பகுதிகளிலும் பல உடல்கள்ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் நாற்பது மணி நேரமாக கிடப்பதாகவும் இன்னும் உடல்களை யாரும் எடுக்கவில்லை என்றும் கதைத்தார்கள். மனிதர்களே இப்படி சடலங்களாகக் கிடக்கும் போது என்னுள் இறந்து கிடக்கும் குருவிகளதும், அணில்களதும், புறாக்களதும் உடல்களை எடுக்க யார் வருவார்?

இரண்டாம் மாடி கட்டும் போது கணவனும், மனைவியும், குழந்தைகளும் வந்து பார்த்தது எனக்கு இன்னமும் ஞாபகமாக உள்ளது. மூத்தவள் இந்த மாடி எனக்குத்தான் என்று சண்டை பிடிக்க, மகனோ இது தனக்குத்தான் என்று அடம்பிடிக்க, முடிவாக கீழ்ப்பாகம் அக்காவிற்கும், இரண்டாம் பாகம் தங்கைக்கும் என்று முடிவான போது மகன்காரனின் கோபம் அதிகமானது. "அப்படியெண்டால், நான் எங்க இருக்க? இன்னமும் என்னை வாடகை வீட்டிலா வைக்கப் போறீங்க?" என்று அவனுக்குரிய நாலு வயது சந்தேகத்தைக் கேட்டான். அவன் அக்காவோ, "இல்லடா தம்பி நீ இப்ப அப்புச்சி, அப்புச்சம்மாவோடயோ இல்லாட்டி கிரான்மாவோடயோ இரு. பிறகு உனக்கு கலியாணம் முடிஞ்சதும் பொஞ்சாதியோட புது வீட்டுக்குப் போ" என்று கேலி செய்ய அவன் விடாது அடம்பிடித்து அழ, அவனுக்குக் கட்டப்போவது மூன்றாம் மாடி என்று முடிவானது. கணவனும், மனைவியும் இரண்டாம் மாடிக்கு என்ன நிறம் பூசுவது என்ற குழப்பம் வந்து, இறுதியில் இளம்பச்சை நிறம் பூசுவது என்று முடிவானது. மூன்று அறைகளும் இரண்டு குளியலறைகளும் கொண்ட எண்ணூற்றம்பது சதுர அடி கொண்ட பெரிய விசாலமான இரண்டாம் மாடி முழுவதுமாக முடிந்தபோது எனக்கே வியப்பாகவும், சந்தோஷமாகவும் இருந்தது. ஒவ்வொரு அறையும் மின்விசிறியும், மின்சார விளக்குகளும் கொண்ட இந்த இரண்டாம் மாடியின் அமைப்பையும் அழகையும் வீடு குடி புகுந்த நாளில் வந்து பாராட்டாமல் எவரும் செல்லவில்லை. ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு மேலாக புதிதாக வீடு பார்க்க வந்த உறவினர்களும், நண்பர்களும் எனது இரண்டாம் மாடியைப் பற்றிப் புகழப் புகழ எனக்கோ ஆனந்தமோ ஆனந்தம். அந்த இரண்டாம் மாடியும் உடைந்து நொருங்கி சிதிலமாகிவிட்டது.

இதோ, எனது முதலாம் மாடித்தளம் நேற்றுக் காலை முதல் மதியம் வரை நடந்த பல்குழல் எறிகணை வீச்சினால் சிதிலமடைந்து நொருங்கி விட்டது. எனக்குத் தெரிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதின்மூன்று எறிகணைகள் விழுந்தன. நான் மூர்ச்சையானதும் இன்னும் பல எனது மேல்த் தளத்தில் விழுந்ததாக பக்கத்தில் ஒளிந்திருந்து துப்பாக்கியால் சுட்ட ஆயுததாரிகள் பேசிக்கொண்டார்கள். முதல் எறிகணை விழுந்ததுமே எனது தளத்தின் கீழே வசித்துள்ள பல்லிகளும், சிலந்திகளும், ஏன் கூடு கட்டத் தொடங்கியிருந்த கறையான்களும் விழுந்து விட்டன. வீட்டுக்காரர்கள் இங்கிருந்து போய் மூன்று மாதங்களின் பின்னர் எங்கிருந்தோ வந்து குடியேறிய பல்லிகள் அவை. அவை வந்ததும் அங்கிருந்த சிலந்திப் பூச்சிகளுக்கு பயமும் அவமானமும் வந்தன. தாங்கள் எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் தனியாக தங்கள் இனம் மட்டும் வாழ்ந்து வந்த வீட்டில் இப்போது அதிக உருப்படியாக, ஆதிக்கம் செலுத்தி தம்மைத் தின்று அழித்து விடும் பல்லிகளின் புதுக் குடியேற்றம் என்று வெறுப்படைந்தன. கறையான்களோ காலத்திற் பிந்தியவை. குடியேற்றப் பல்லிகளுடன் மோதி பின்னர் ஒடுங்கிப் பேரினத்திற்குத் தப்பி வாழப் பழகிக் கொண்டன.

இந்தத் தளம் போடும்போது நடந்த சம்பவங்கள் இன்னும் என்னுள் பசுமையாக இருக்கின்றன. திடீரென்று ஒரு லொறியில் கம்புகளும், பலகைகளும், ஆணிகளும் வந்திறங்கின. அது வந்து இரு நாட்களின் பின்னர் நான்கு பேர், ஓடாவியாம், வாள், சுத்தியல், இதர சாமான்களுடன் காலையில் வந்திறங்கி நீளமான கம்புகளை நாட்டத் தொடங்கினர். பின்னர் பலகைகளைப் போட்டு மேல்தளத்தை நிரப்பினர். அதை நிரப்பிய பின் மட்டமாக இருந்த மேல்தளத்தில் ஒன்பது வயதுப் பெண்ணும் மூன்று வயதுப் பையனும் ஏறி ஓடி விளையாடியது எனக்கு மிகவும் சந்தோஷமாகவும் இனிமையாகவும் இருந்தது. அவர்கள் ஓடியாடி விளையாடுவது பெற்றோரின் நெஞ்சில் குழந்தைகள் மிதித்து விளையாடும்போது ஏற்படும் ஆனந்தம் போலிருந்தது. பின்னர் மேசன்மார்கள் வந்து கம்பிகள் கட்டி முடித்த நான்கு நாட்களின் பின்னர் ஏதோ இயந்திரங்கள் வந்திறங்கின. அவை கலவை போடும் இயந்திரங்கள் என்று பின்னர் தான் தெரிந்து கொண்டேன். பதினைந்து மேசன்மார்களும் ஓட்டுனர்கள் ஐந்து பேருமாக மொத்தம் இருபது பேர் அன்று வந்திறங்கினர். வீட்டுக்காரரும், வீட்டம்மாவும் மூத்த பெண்ணும் புதினம் பார்க்க வந்திருந்தனர். பையனுக்கும், சிறு பெண்ணுக்கும் சீமெந்து தூசி ஒத்துப் போகாதாம் என்று அவர்களிருவரும் வரவில்லை. காலை ஆறரைக்குத் தொடங்கிய வேலை எட்டரை வரையிலும் வேலை தொடர்ந்தது. பின்னர் வீட்டுக்காரி செய்த பருப்புக்கறியும் பாணும் வந்த இருபது வேலையாட்களுக்கும் வீட்டுக்காரர்களுக்கும் காலை ஆகாரமாகக் கொடுக்கப்பட்டது. பின்னர் இரண்டரை வரையும் முழுமூச்சாக வேலை செய்து எனது மேற்றளத்தினைப் போட்டு விட்டார்கள். எல்லோருக்கும் பல குழறுபடிகளுடன் புரியாணி சாப்பாடு பொட்டலமாகக் கொடுக்கப்பட்டது. அதில் வீட்டுக்காரருக்குப் பயங்கரக் கோபம். ஏனென்றால் தங்களுக்கென்று வைத்திருந்த இரண்டு பொட்டலங்களை யாரோ மேசன்மார்கள் மேலதிகமாக எடுத்துக் கொண்டு போய்விட்டார்களென்று. தளம் போட்ட அடுத்தநாள் முதல் வீட்டுக்காரரும் மனைவியும் பிள்ளைகளும் ஒவ்வொரு நாளும் மாலையில் வந்திருந்து எனது தளத்திற்குத் தண்ணீர் ஊற்றுவதும், ஒன்றாக என் தளத்திலிருந்து கதை பேசுவதும் பின்னர் இரவில் என்னைத் தனியாக விட்டுச் செல்வதும் என ஒரு மாதமாக இவ்வாறு நடந்தது. சரியாக இருபத்தைந்து நாட்களின் பின்னர் மூவர் வந்து பலகைகளையும் கம்புகளையும் கழற்றிய போது எனது அத்திவாரத்தில் பாரமாகவே இருந்தது. கொங்கறீட் தளமல்லவா? ஆயினும் கொஞ்சம் வளர்ந்த பின்னரும் பாரமாயிருந்தாலும் கூட, குடும்பத்தைச் சந்தோஷமாய்த் தாங்கும் தாயைப் போல நானும் அத்தளத்தின் பாரத்தை தாங்கிக் கொண்டேன். ஐயோ, சுகமான சுமையாக நான் தாங்கிக் கொண்ட இந்தத் தளத்தைக் கூட பல் குழல் எறிகணைகள் நொருக்கி விட்டனவே. என் இதயமே வெடித்து விடும் போல துன்பமாக உள்ளதே. இந்த ஒரேயொரு மேற்றளமும் நொருங்கி விட்டதால் அதனுள் மழைக்கும், பனிக்கும், வெயிலுக்கும் அடைக்கலம் தேடி வந்த நாய்களும், ஆடுகளும் ஏன் மாடுகளும் கூட இனி எங்கே போகும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் கட்டிய போது வந்திருந்த என் குடும்பத்தவர்கள் என்னைத் தனியே விட்டுப் போன போது கூட இன்றோ, நாளையோ, அல்லது நாளை மறுநாளோ வருவார்கள். வந்து என்னுள் வளர்ந்து கிடந்த பற்றைகளையும் வெளியாக்கி அதனுள் வசித்து வந்த பூச்சிகளையும் ஓணான்களையும் தவளைகளையும், அவற்றை உண்ண வந்த பாம்புகளையும் விரட்டி விட்டு மீண்டும் வசிப்பார்கள் என்ற எனது நான்கரை வருட கனவுகளும், எதிர்பார்ப்புகளும் இம் மேற்றளம் உடைந்த போது உடைந்தே விட்டது. இப்போது பெண் பதினைந்து வயதுக் குமரியாகவும், பையன் ஒன்பது வயதுப் பையனாகவும் சிறு பெண் ஆறரை வயதாயும் இருப்பாள். வயதான பாட்டி பேரப் பிள்ளைகளைப் பார்த்துக் கிடப்பது போல காத்துக் கிடந்தேனே. வீட்டுக்காரருக்கும், வீட்டுக்கார அம்மாவுக்கும் முடி நரைத்திருக்குமா அல்லது கறுத்திருக்குமா? அவர்களுக்கு வேறு பிள்ளைகள் பிறந்திருக்குமா? எனது இரண்டாம் மாடி ஷெல் பட்டு விழுந்தபோது கீழ்த்தளத்தில் அவ்வப்போது பகலிலும் இரவிலும் மாறி மாறி வந்து போகும் ஆயுததாரர்கள் சிங்களத்திலும் தமிழிலும் பேசியதிலிருந்து வீட்டுக்காரர்கள் வெளியூரிலோ, வெளி நாட்டிற்கோ பிரச்சினை தொடங்கியதும் சென்றுவிட்டதாகத் தெரிந்து கொண்டேன்.

ஐயோ, இன்று எனது கீழ் வீட்டின் சுவர்களுக்கும் ஷெல்லடி பட்டுக் கொண்டேயிருக்கிறதே இது எட்டாவது ஷெல். எட்டு மாதங்களாக மேற்றளமின்றி வெறும் சுவர்களுடனும் "வீட்டுக்காரர்கள் மீண்டும் வருவார்கள்" என்ற எதிர்பார்ப்புடனும் இருந்த எனக்கு இப்படியா ஒரு பலத்த அடிவிழ வேணும்? கடைசியாக இருந்த கறையான் புற்றின் மேலும் ஒரு ஷெல் விழுந்து வெடித்ததால் அதுவும் சிதறிப் போய்விட்டதே... ஷெல்லடி தொடங்கியதிலிருந்தே ஓணான்களும் பாம்புகளும் வெளியேறி விட்டன. பாம்புகள் சென்றதால் தவளைகள் சுதந்திரமாகத் திரிந்தன. கறையான்கள் அவற்றிற்கு நல்ல உணவாக இருந்து வந்திருந்தன. இன்று விழுந்து வெடித்த ஷெல்களினால் தவளைகள் வாயிலும் மண் விழுந்து விட்டது. அவைகளும் இனி என்னை விட்டுப் போய்விடும். நான் பாவமா? அல்லது இறுதியாக என்னுடன் இருந்த கறையான்களும் தவளைகளும் பாவமா? அல்லது எல்லோரும் பாவமா?

அத்திவாரத்திலிருந்து இந்தச் சுவரைக் கட்டியெழுப்பிய போது வீட்டுக்காரர்களுக்கு பொங்கி வந்த ஆனந்தத்தைப் பார்க்கவும் வேண்டுமே... மூத்தவள் என்னைத் தடவித் தடவிப் பார்ப்பாள். சின்னவன் தனது கன்னத்தை என் மீது அழுத்தி சுவர்க் குளிரின் இன்பத்தை அனுபவிப்பான். வீட்டுக்காரரும் வீட்டுக்கார அம்மாவும் அமர்ந்து வீட்டுக் கணக்கை எழுத நானும் அவர்களை ஆனந்தமாகப் பார்த்துக் கொண்டிருப்பேன். அப்போது மூன்றாவது பெண் பிறக்கவில்லை. உண்டாகவுமில்லை. இரண்டு அறைகள், ஒரு சமையலறை, ஒரு குளியலறை, பெரிய மண்டபம் கொண்ட தொள்ளாயிரம் சதுர அடி கொண்ட கீழ்ப்பாகம் இது. வீட்டுக்கார அம்மாவுக்கு மண்டபத்தில் ஓர் ஊஞ்சல் கட்ட வேண்டும் என்பது ஆசை. "அப்பா, நாம ஒரு ஊஞ்சல் போடவேணும். எங்க, நடுவிலா? இல்லாட்டி அருகிலா போட?" என்று கேட்க, கணவனோ, "ஏன், உனக்கு வெளியில ஒண்டு போட்டுத் தாரனே"

அத்திவாரத்திலிருந்து இந்தச் சுவரைக் கட்டியெழுப்பிய போது வீட்டுக்காரர்களுக்கு பொங்கி வந்த ஆனந்தத்தைப் பார்க்கவும் வேணுமே! மூத்தவள் என்னைத் தடவித் தடவிப் பார்ப்பாள். சின்னவன் தனது கன்னத்தை என் மீது அழுத்தி சுவர்க் குளிரின் இன்பத்தை அனுபவிப்பான். வீட்டுக்காரரும் வீட்டுக்கார அம்மாவும் அமர்ந்து வீட்டுக் கணக்கை எழுத நானும் அவர்களை ஆனந்தமாகப் பார்த்துக் கொண்டிருப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என பதிலளிக்க, அவளோ "இல்லப்பா, மண்டபத்தில ஊஞ்சல் போட்டு அதில ஆட வேணும். எனக்கு அது சரியான விருப்பம்." என்று கூற, மகளோ "அப்பா, அம்மா ஊஞ்சலிலயும் படுக்கப்போறாவாம்." என கேலி செய்த போது, இறுதியாக மண்டபத்தில் ஊஞ்சல் போடுவது என முடிவானது. கீழே மென்சிவப்பு வர்ணம் பூசுவது என்று பல வாதப்பிரதிவாதங்களுக்கிடையே முடிவு எடுக்கப்பட்டது. வீடு கட்டி முடிந்த பின்னர் எங்கெங்கு யார் யாரின் புகைப்படம் மாட்டுவது என்று நினைத்தபோது எல்லோரும் இருக்கும் குடும்பப் படத்தை முதலில் மாட்டலாம்

**கடந்த ஒன்றரை வருடங்களாக நான் அத்திவாரமாய் மட்டுமே தன்னந்தனியாக நிற்கிறேன். அதில் கூட அவ்வப்போது விழும் பல்குழல் எறிகணைகளும், ெ'ல்களும் மற்றைய வெடி பொருட்களும் என்னைக் காயப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. ஆடு, மாடு ஏன் நாய்கள் கூட எனது பக்கம் கடந்த ஒன்றரை வருடங்களாக வருவதில்லை. மனிதர்கள் உலாவாத இடத்தில் அவைகளுக்கென்ன வேலை என்று இருந்து விட்டனவோ என்னவோ?**

என மூத்தமகள் சொன்ன ஆலோசனையை எல்லோரும் ஏகமனதாய் ஏற்றுக் கொண்டனர். வீடு குடிபுகும் போது மூன்றாமவளுக்கு பிறந்து ஆறு மாதம் தான் ஆகியிருந்தது. இவ்வாறுகறையுற்றிருந்த எனது கீழ் வீட்டின் சுவர்களும் ஷெல்லடிபட்டு விழுந்ததால் என்னிதயம் நொருங்கிப் போகாதா?

இன்று, கடந்த ஒன்றரை வருடங்களாக நான் அத்திவாரமாய் மட்டுமே தன்னந்தனியாக நிற்கின்றேன். அதில் கூட அவ்வப்போது விழும் பல்குழல் எறிகணைகளும், ஷெல்களும் மற்றைய வெடி பொருட்களும் என்னைக் காயப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. ஆடு, மாடு ஏன் நாய்கள் கூட எனது பக்கம் கடந்த ஒன்றரை வருடங்களாக வருவதில்லை. மனிதர்கள் உலாவாத இடத்தில் அவைகளுக்கென்ன வேலை என்று இருந்து விட்டனவோ என்னவோ? எப்போதாவது ஊர்ந்து போகும் ஓணானும், அறணையும், தாவிப் போகும் தவளையும் மட்டுமே எனது இப்போதய நிலவரமான அத்திவாரத்தில் வந்து போகும் உயிரினங்கள். அவையும் அவ்வப்போது வந்து போவது தான். நிரந்தர வசிப்பிடதாரிகள் என்று எவருமில்லை: எதுவுமில்லை.

எனக்கு அத்திவாரம் போட்ட நாள் இன்னும் நினைவிருக்கிறது. அது நான் உருவாகத் தொடங்கிய நாளல்லவா? மரஞ் செடி கொடிகள் இல்லாது வெளியாக்கிய இடத்தில் முதலில் ஏதேதோ நூல் கட்டி அளந்து பின்னர் கல் வைப்பதற்கான குழி வெட்டினார்கள் இரு மேசன்மார்கள். அன்று காலையிலே கணவனும், மனைவியும், இரு பிள்ளைகளும், வயதான இருதம்பதிகளும் வந்திருந்து பொங்கல் பொங்கினர். காலை ஏழு பதினைந்துக்கு நல்ல நேரம் என்றவுடன் வந்திருந்த பாதிரியார் ஜெபிக்க பின்னர் ஐம் பொன்னும் நவதானியங்களும் வைத்து மூத்த மகள் முதற்கல்லையும், இளைய மகன் அடுத்த கல்லையும் வைத்தனர். மகள் வாழப் போகும் வீடு என்றபடியால் மகள் தான் முதற்கல் வைப்பதென்று தீர்மானித்தனர். பின்னர் மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து மொத்தமாக ஒன்பது கற்களை வைத்து அத்திவார பூசை போட்டாயிற்று. இவ்வாறுதான் நான் உருவாகத் தொடங்கினேன்.

பின்னர் மேலும் இரு மேசன்மார் சேர்ந்து ஒரு வாரத்தில் அத்திவாரத்தை வெட்டி இரு வாரங்களில் முழு அத்திவாரத்தையும் தொள்ளாயிரம் சதுர அடியில் கட்டி முடித்தனர். அதன் பின்னர் இன்று நான் தனியாக நிற்பது போல ஒன்றரை வருடங்களாக நின்றுகொண்டிருந்தேன். இன்று புதரும் செடி கொடிகளும் மண்டிக்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிடப்பது போல அன்று நான் அத்திவாரமாய் இருக்கவில்லை. காரணம் நான் கட்டி முடிக்கப்படுவேன் என்ற எதிர்பார்ப்பில் அனைவருடனும் கூட இருந்தேன். அவ்வப்போது வாரமிருமுறையாவது வந்து போகும் கணவனும் மனைவி, பிள்ளைகளதும் பேச்சிலிருந்து அவர்கள் எதிர்பார்த்த பணம் கிடைக்கவில்லையென்றும், அது கிடைத்தால் மிகுதி வேலையைத் தொடர்ந்து செய்வார்கள் என்றும் தெரிந்து கொண்டேன். மகள் எப்போதும் போல "எப்பப்பா வீடு கட்டத் தொடங்குவீங்க?" என்றே அலுத்துக் கொண்டாள். இப்படியாக ஒன்றரை வருடங்களாக இரண்டு மாரியையும், இரண்டு கோடைகளையும் கடந்த பின்னர் திடீரெனப் பொருட்கள் வந்திறங்க நான் கொஞ்சம் கொஞ்சமாக உருவாகத் தொடங்கினேன். தொடங்கிய ஆறு மாதத்தில் நான் முழுமையான வீடாகி விட்டேன். பின்னர் என்னிடம் அந்தக் குடும்பம் வந்து சேர்ந்தது.

ஒருநாள்அவர்கள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த இரவு வேளையில் தான் முதல் வெடிச் சத்தம் கேட்டது. அன்றிலிருந்து வெடி ஷெல்லடியாக மாறிப் பின்னர் பல்குழல் எறிகணையாக உருமாறிய ஓரிரவில் கணவனிடம் வீட்டுக்கார அம்மா சொன்னாள், "அப்பா, பிரச்சினை ஆரம்பிச்சிட்டுது போல, ஆக்களையெல்லாம் சுடுறானுகளாம். நம்மட பக்கத்து வீட்டு மாமிட மகனையும், எதிர் வீட்டு அக்காட புருஷனையும் கொண்டு போட்டானுகளாம். எனக்கும் புள்ளைகளோட இருக்கப் பயமாத்தான் இருக்கு. பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலையும் ஷெல் விழுந்து வெடிச்சதென்டு மகள் சொன்னாள். என்னப்பா இப்ப செய்வம்?" அதற்கு அவனும், "எனக்கும் யோசனையாத் தாம்மா இருக்கு. எங்கயாச்சும் வெளியூருக்குப் போகலாமா?" என்று கேட்டவுடன் எனக்கு ஒருகணம் எல்லாமே ஆடித்தான் போய் விட்டது. ஆனாலும் அவர்கள் மூன்று மாதம் காத்திருக்கத் தான் செய்தார்கள்.

ஒரு நாள் திடீர் என்று சாமான்களை எல்லாம் கட்ட ஆரம்பித்து மூன்று நாட்களுக்குள் ஒரு லொறியில் ஏற்றி அனுப்பி விட்டனர். "ஏதோ வெளியூருக்குப் போய் கொஞ்சநாள் இருந்துவிட்டு பிரச்சினை முடிந்த பின் வருவோம்" என்று தான் வழியனுப்ப வந்தவர்களிடம் சொல்லிக் கொண்டார்கள்.


"கொஞ்ச நாள்" என்றதும் நான் உண்மையாகவே சிறிது நாட்கள் தான் என்று நினைத்து விட்டேன். காரணம் முன்பும் அவர்கள் வெளியூருக்குப் போகும் போது என்னைப் பூட்டி விட்டுசெல்வார்கள். பின்னர் ஒரு வாரத்திற்குள் எல்லோருமே திரும்பி வந்து விடுவார்கள். நானும் அதையே தான் "கொஞ்ச நாள்" என்று நம்பி விட்டேன். "கொஞ்சநாள்" இன்றுடன் நான்கரை வருடங்களாகி விட்டன. வந்து போகும் ஆயுததாரிகள் சொல்வது போல அவர்கள் வெளிநாட்டிற்குச் சென்றாலும் அதிற் பிழையில்லை.

இன்று பதினைந்து வயதான மகளுடனும், ஆறரை வயது இளைய மகனுடனும், மகளுடனும் இருப்பார்கள். வேறு குழந்தைகள் இப்போது பிறந்தும் இருக்கலாம். அவ்வயதான இரு தம்பதிகளுள் எத்தனை பேர் இன்னும் உயிரோடு இருப்பார்களோ தெரியாது? வயதான பல்லுப் போன வாடியிருக்கும் தொண்டுப் பாட்டி தனது பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளையும் எதிர்பார்த்து காத்திருப்பது போல நானும் காத்திருக்கிறேன். என்றாவது யுத்தம் முடிந்து அமைதி திரும்பும். அவர்கள் நிச்சயம் இங்கு வருவார்கள். என்னையும் என் நிலையையும் பார்ப்பார்கள். அழுவார்கள். மீண்டும் என்னைக் கட்டுவார்கள். அத்திவாரத்திலிருந்து அத்திவாரமாகிய நான் மீண்டும் வீடாவேன். அதே பொலிவுடன் மூத்த பெண்ணின் பேரக் குழந்தைகளுடன் எனது காலம் முழுவதும் அவர்களுக்கு வீடாவேன். என் எதிர்பார்ப்பு வீணாகாது. நான் மீண்டும் வீடாவேன். வீடாகி வாழ்வாவேன். யுத்தம் ஒரு நாள் முடியும். ■

**ஜீ. கென்னடி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரிழத்தல் அல்லது வாழ்விழத்தல்



எங்கள் வீட்டு முற்றத்தை
சின்னவளும் சின்னவனும்
தெத்துக் கோடு விளையாடிய மண்ணை இழந்தோம்
வெள்ளை நாகு போட்ட சிவலைக் கன்று
அம்மா என்று கத்திய அன்பையும் இழந்தோம்
ஆசையாய்க் கறந்த பாலையும் இழந்தோம்
இதிகாசங்களில் வரும் கொடிய அரக்கனையும்
தோற்கடிக்கும் வல்லரக்கனின் எறிகணை வீச்சும்
நச்சுப் புகை வீச்சும்
பிளந்து கருக வைத்த - எம்
உறவுகளை விட்டு...

இடைவெளியில்
செல்லடியில் புண்பட்டு
வழி நடக்க ஏலாமல்
அனுகி அனுகி
அவலமாய்க் கிடந்த
எங்கள் அன்பான உறவுகளை விட்டு விட்டு
முட்டையிடும் கோழியையும்
கோழிக் கூட்டடியில் பதுங்கும் கொடுப்புலியையும்
மஞ்சள் சாரையையும் மறந்தும்
இன்னுமென்ன...?

வெக்கை கிளப்பும்
இடைத்தங்கல் முகாமில்
உயிர் ஒட்டிக் கிடக்கும் உடம்போடு
அனைத்தையும் இழந்த எங்களிடம்
தாய்பெற்ற மேனியாய்
வர வைத்த வல்லரக்கன்
கையில் பட்டதைக் காட்டிலும்
எறிகணை வீச்சிலும்
நச்சுப் புகையிலும்
கருகி மடிந்தவர்கள்
செய்த புண்ணியத்தை நினைத்துப் பார்க்கையில்
ஊரிழத்தல் என்பதை விட
வாழ்விழத்தலே நலமென்று
நினைக்கத் தோன்றும்
எங்களுக்கு...

**சேரலாதன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு**
174, அல்விஸ் ஒழுங்கை, காசல் வீதி,
கொழும்பு 8, இலங்கை.
தொலைபேசி : 94-11-5632045 / 5635900
தொலைநகல் : 94-11-2690192
மின்தபால் : wmcsrilanka@gmail.com அல்லது
solpublication@gmail.com


ரூ. 30/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org